# கறையில்லாக்
# குற்றங்கள்

சபீனா சோமசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறையில்லாக் குற்றங்கள்

(சிறுகதைத் தொகுப்பு)

**சரீனா சோமசுந்தரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : கறையில்லாக் குற்றங்கள் |
| நூலாசிரியர் | : சபீனா சோமசுந்தரம் |
| நூலின் வகை | : சிறுகதைத் தொகுப்பு |
| பிரதிகள் | : 500 |
| பதிப்பு | : முதற்பதிப்பு 2021 |
| அட்டை | : வை.கே.ராஜு |
| வெளியீடு | : கதிரவன் கலைக்கழகம் |
| பக்கங்கள் | : 100+ |
| விலை | : 350/- |
| உரிமை | : ஆசிரியர் |
| ISBN | : 978-624-97923-2-6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாற்றல் வித்துவத்தின் அடையாளம்.

சமகாலச் சம்பவங்களின் பிரதிபலிப்புகளின் சாரல்களை கற்பனைக்குள் இருத்தி தத்தமது எண்ணத் தெறியல்களைப் பேசுபொருளாக்கி, சிறுகதைகளை நமது படைப்பாளிகள் படைத்து வருகின்றனர். சிறுகதை என்பது 'சிறியகதை'அல்ல. இது ஒரு தனித்த இலக்கிய வடிவம். அதற்குத் தனியான வடிவச்சிறப்புகள் உள்ளன.

சிறியகதைகள் பலவகைகள் நம்மிடம் உள்ளன. உதாரணக்கதைகள், நீதிக்கதைகள், உருவகக்கதைகள், நிகழ்ச்சித் துணுக்குகள் எல்லாமே சிறிய கதைகள் தான். ஆனால் இதிலிருந்து சிறுகதை வேறுபடுகின்றது. இதில் பிரதான அம்சமாக கொள்ளப்படுவது சொல்லப்படுகின்ற கதையில் ஏற்படுத்தப்படும் 'திருப்பங்கள்' என்று சொல்லலாம். இதை ஆங்கிலத்தில் 'twist' என்று சொல்கிறார்கள்.

அதாவது ஒரு சிறியகதையை – சிறுகதையாக ஆக்குவது திருப்பங்கள்தான். இந்தத் திருப்பங்களை முக்கியமானதாகக் கொண்டு சிறுகதை வடிவம் உருவாகக் காரணமாக அமைவது வாசகனின் கற்பனைகளைத் தூண்டுவதற்கு அதிக இடம் கொடுப்பதேயாகும்.

நம்மிடையே உள்ள ஏனைய கதைகளில் தன்மைகளை பார்ப்போமாயின் கதையின் மையத்தை புரிந்து பெற்றுக்கொள்ளும் இடத்தில் வாசகன் இருக்கிறான். ஆனால் சிறுகதையில் வாசகனை கதைக்குள் இழுக்கிறான் ஆசிரியன். இது மட்டுமல்ல வாசகன் கதை முடிவைப்பற்றி என்ன நினைக்கிறான் என்று ஊகித்து அதற்கு நேர் எதிராக கதையை முடித்து அவனை திகைக்க வைக்கிறான்.

இத்தகைய கதைசொல்லும் உத்திகளை கையாண்டவர்களே சிறுகதைத்துறையில் தம்மை அடையாளப்படுத்தி பேருண்றி நிற்கின்றனர். இந்த வகையில் இந்த கதை சொல்லும் சிறப்பை இயற்கையாக கொண்டுள்ளார் "கரையில்லா குற்றங்கள்" என்ற இந்த நூலின் எழுத்தாளினி சபீனா சோமசுந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலில் இடம்பெற்றுள்ள நான்கு கதைகளையும் படித்ததில், பெண்ணியம் குறித்த உணர்வுத்தாக்கம் நூலாசிரியையிடம் அதிகளவில் இருப்பதை தெளிவாகப் பார்க்கமுடிகிறது.

"சந்தித்தவேளை" என்ற கதை, தனது பேத்தியை பார்க்கத்துடிக்கும் ஒரு அம்மம்மா வின் உணர்வுணர்ச்சிகளை வெளிக்காட்டி நிற்கின்றது. அதேபோன்று "வானம் காணாத வெண்ணிலா" என்ற கதை, பெண்குழந்தை ஒன்று தனக்கில்லையே என்று ஏங்கும் ஒரு பெண்ணின் இதயத்துடிப்பை படம்பிடித்து நிற்கின்றது. மற்றைய கதையான "வழியில் ஒரு க்ரைம்" பெண்கள் எதிர்நோக்கும் பாலியல் தீண்டல்களை படம்பிடித்துக் காட்டுகின்றது. இறுதியாக "நேர்முகத் தேர்வு" என்ற கதை, சமகால கொரனாசூழலில் ஏற்பட்டுவரும் தொழில் இழப்புகள் அதனூடாக இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், காதல் ஏக்கங்கள் என்பனவற்றை பிரதிபலித்து காட்டுகின்றன.

வாசகர்களை தனது கதைகளின் கருப்பொருளுக்குள் இழுத்து, அவர்களை தமது எழுத்துகளால் ஏற்படுத்தப்படும் திருப்பங்களுக்குள் அழைத்து சென்று அவர்களை கட்டிப்போட்டு வைக்கும் யுக்தியை நூலாசிரியை சபீனா சோமசுந்தரம் மிகச் சிறப் பாகச் செய்திருக்கின்றார்.

முதன்முதலாக இந்த நூலை வெளியிடும் இவரது இந்த முயற்சி, இவரது எழுத்து களில் இவருக்குள்ள இயற்கையான வித்துவத்திறமையை எடுத்தியம்பும் ஒரு படை ப்பாற்றல் முயற்சியாகவே பார்க்கமுடிகிறது.

இந்த நூலில் எனது கருத்துகளையும் அணிசெய்ய விரும்பி இணைத்துக்கொள்ள முன்வந்த இவரது நல்லுள்ளத்துக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இந்த முயற்சி சிறக்க அனைவரும் இவருக்கு ஆதரவுக்கரம் நீட்டவேண்டும் அத்தோடு, இவரது முயற்சிகள் நீண்டு தொடர ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்க முன்வர வேண்டும் என இவ்வேளையில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நல்வாழ்த்துக்களுடன்...

***ராதாமேத்தா ஜே.பி***
***முன்னாள் ஆசிரியர்***
***(சுடர்ஒளிவார வெளியீடு – வரணம் வாரஇதழ்)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு(எ)ன்னுரை

இன்றைய நிலையில் புத்தகங்களை வாசிக்கும் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே வியந்து பாராட்டிக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. காரணம் வாசிப்புபழக்கம் என்பதும் வேகமாககுறைந்துவருகிறது. தற்போதைய சூழ்நிலையில் ஒருவிடயத்தை சமூகத்திற்கு சொல்ல வேண்டுமெனில் அதை எழுத்து வடிவில் சொல்வதைவிட காணொளி மூலமாக காட்டும் போது அது இப்போதைய இளைய தலைமுறையை அதிகமாக சென்றடைகின்றது. இந்நிலையானது இன்றைய இளம் தலைமுறையினரின் ஒரு குறைபாடாகவே காணப்படுகின்றது.

போதைப்பொருள் பாவனை மற்றும் பெண் பிள்ளைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் இன்று சர்வசாதாரணமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. பணபலமும், அரசியல் பின்புலமும் இவ்வாறான குற்றங்களை இளம் வயதினரிடையே ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றது.

அதுமட்டுமன்றி, பிள்ளைகளால் கைவிடப்படும் பெற்றோர்கள் பலர் முதியோர் இல்லங்களிலும், தனிமையிலும் முதுமையோடு போராடி இறந்து போகிறார்கள். இப்புத்தகத்தில் உள்ளடங்கும் கதைகள் இவ்வாறான சம்பவங்களை கொண்டு எழுதப்பட்டவை.

ஆரம்பத்தில் என்னுடைய கதைகள்,கட்டுரைகளை இணையத்தளங்களில் மாத்திரமே பதிவிட்டுக் கொண்டிருந்தேன். முதன் முறையாக அச்சுஊடகமான பத்திரிகையில் எனது ஆக்கங்களை பிரசுரித்த ஊடகவியலாளர் மற்றும் அரங்கம் பத்திரிகையின் ஆசிரியர் திரு. சீவகன் பூபாலரட்ணம் ஐயா அவர்களை நான் இவ்விடத்தில் நினைக்கிறேன். வெறுமனே என்னுடைய கதைகளை பிரசுரிப்பதோடு மட்டுமல்லாது கதைகள் குறித்தும் நான் எழுதும் விதம் குறித்தும் பல கருத்துகளை கூறுவார். ஒருதுறையில் வளர்ந்து வரும் புதியவர்களை ஊக்குவிப்பதில் சீவகன் பூபாலரட்ணம் ஐயா அவர்கள் சிறந்தமனிதர் என்றே நான் கூறுவேன்.

அத்துடன் இங்கு நான் நன்றியோடு நினைத்துப் பார்க்க வேண்டிய இன்னொருவர் சிரேஸ்ட ஊடகவியலாளர் திரு. ராதாமேத்தா ஐயா அவர்கள். நான் ஊடகத்துறைக்குள் பணியாற்ற வந்த பின்பு அறிமுகமாக நல்ல பண்புள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர். எப்போது அழைப்பை ஏற்படுத்தி என்ன கேட்டாலும் அக்கறையோடும் பண்போடும் பதிலளிப்பார். இளையோரின் திறமைகளை ஊக்குவித்து வாய்ப்புகளை வழங்குவதில் சிறந்த மனிதர்.

மற்றும் என்னுடைய **"நேர்முகத்தேர்வு"** என்ற கதை இந்தியாவில் **"பெண்களின் குரல்"** என்ற சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது. எனது ஆக்கங்களை பிரசுரித்த அரங்கம், மித்திரன், தினக்குரல், சிரித்திரன், சுபீட்சம் ஆகிய பத்திரிகைகளுக்கும் நான் நன்றியினை இங்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன் என்னை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்த ஒரு களமாக அமைந்தது கிழக்கு மாகாணத்தில் ஊடகக்கல்வியை வழங்கி ஊடகத்துறைக்குள் பல திறமையானவர்களை உருவாக்கிவரும் மட்டக்களப்பு வொய்ஸ் ஒப் மீடியாநெட்வேர்க் நிறுவனம் (ஊடகவளங்கள் மற்றும் ஆய்வுகளுக்கான நிலையம்).

அத்துடன் எனது எழுத்துப் பயணம் இந்த அளவுக்கு வளர எனக்கு பல வகையிலும் துணையாகவும், ஊக்குவித்தும் நின்ற என் அன்பான நண்பர்களையும் நன்றியோடு நினைக்கிறேன்.

மேலும் நான் புத்தகம் ஒன்றை அச்சிட முயற்சிக்கையில் அதற்கான முறையான ஆலோசனையை வழங்கி இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிட உதவிய தேடல் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு.வை.கே.ராஜு அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புத்தகத்தை வாசிக்கும் வாசகர்கள் நான் எழுதியுள்ள கதைகளை பற்றிய கருத்துக்கள் மற்றும் குறை நிறைகளை 1988shabeena@gmail.com என்ற எனது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் கருத்துகளுக்கு பதிலளிக்க நான் காத்திருக்கிறேன்.

நன்றி.

நூலாசிரியர்,

**சபீனா சோமசுந்தரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

"கறையில்லா குற்றங்கள்" புத்தகத்தின் தலைப்புத்தான் சிறுகதையை வாசிக்கத் தூண்டியது. நான்கு சிறுகதைகளையும் ஓரே மூச்சிலே வாசித்து முடித்தேன். சபீனா சோமசுந்தரத்தின் உள்ளக்கிடக்கை, உணர்வு, சமூகம் மீதான அவரின் பார்வை அவரின் ஊடக தர்மத்தை வெளிக்காட்ட தவறவில்லை.

உள்ளத்தை பாதிக்கும் சம்பவங்கள் எம் உள்ளத்திலே ஒரு கொதி நிலையாக இருந்து கொண்டே இருக்கும். அதனை வெளியேற்றி சமூகத்திற்கு கொடுக்க கலை-இலக்கியங்கள் துணை நிற்கின்றன. அதனை சரியாக கொடுக்கும் ஆற்றல்தான் படைப்பாளியின் ஆளுமை. அந்தவகையில் சபீனா தன் பாத்திரத்தினை நிறைவேற்றியுள்ளார்.

இலகுவான மொழி நடையில், கதையின் முடிவு காணும் வரை "திக்..திக்" என்ற மன உணர்வோடே நான்கு கதைகளும் நகர்கின்றன. கதையின் நிறைவு மக்களுக்கு ஒரு செய்தியினை சொல்லி நிறைவு பெறுகின்ற தன்மை வெகுவாக என்னை பாதித்துள்ளது. இச்சிறுகதைகளை வாசிக்கின்ற வாசகர்களுக்கும் ஏதோ ஒரு எண்ணம் தோன்றும் அந்த எண்ணம் சமூகத்தை நோக்கி பாயும் என்பது திண்ணம். சிறுகதைகளைப் பற்றியோ, இச்சிறுகதைகளின் கருக்கள் பற்றியோ, பாத்திரப் படைப்பு பற்றியோ, கதை மற்றும் களங்களின் நகர்வு பற்றியோ நான் எதுவும் குறிப்பிட விரும்பவில்லை. காரணம் "கறையில்லா குற்றங்கள்" உங்கள் கறைகளைப் போக்க நீங்களாக வாசித்து அனைத்தையும் சுவைத்துக்கொள்ள வேண்டும் .

மேற்குறிப்பிட்ட விடயங்கள் சிறுகதைகளை வாசித்தவன் என்ற வகையில் எனது உள்ளச் சிதறல். இத்தொகுப்பினை கதிரவனால் வெளியீட்டு வைப்பதில் மட்டில்லா மகிழ்வடைகின்றோம். படைப்பாளி சபீனா நிறைந்த வாசிப்போடு நிறைந்த படைப்புக்களை வழங்க வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்

**கதிரவன் த. இன்பராசா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தேடல் கலை இலக்கிய அமைப்பினரால் நடாத்தப்படுகின்ற தேடல் பதிப்பகத்தின் ஏழாவது வெளியீடாக சோமசுந்தரம் சபீனா அவர்களின் கறையில்லாக் குற்றங்கள் சிறுகதைத் தொகுதி அமைகின்றது.

எழுத்தாளராகவும், ஊடகவியலாளராகவும் வலம் வந்து கொண்டிருக்கும் இவர் சிந்தனை மிக்க சிறந்த படைப்பாளியாகவும் திகழ்கின்றார் என்பதனை இவரின் படைப்புக்கள் நிலைநாட்டி நிற்கின்றது.

இது இவரது கன்னி நூல்ப் பிரசவமாக இருந்தாலும் இவருடைய கற்பனை ஆளுமையை இத்தொகுப்பிலிருந்து அனைவரும் அறிந்து கொள்ள முடியும். இன்றைய கால கட்டத்தில் புத்தக வாசிப்பானது நலிவடைந்து சென்றாலும் தனது எழுத்தாற்றலை வெளிக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கோடு இந்நூலினை அச்சேற்ற முயன்றுள்ள சோமசுந்தரம் சபீனா அவர்களுக்கு தேடல் பதிப்பகத்தின் வாழ்த்துக்கள்.

**தேடல்**
நாவிதன்வெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ✍ | சந்தித்தவேளை | 1-16 |
| ✍ | நேர்முகத் தேர்வு | 17-29 |
| ✍ | வானம் காணத வெண்ணிலா | 30-36 |
| ✍ | சின்னஞ்சிறு ரகசியமே | 37-40 |
| ✍ | அரைப்போத்தல் கள்ளு | 41-50 |
| ✍ | ஒன்லைன் வகுப்பு | 51-57 |
| ✍ | உயிர்த்த ஞாயிறு | 58-71 |
| ✍ | மனோகரி | 72-84 |
| ✍ | வழியில் ஒரு க்ரைம் | 85-103 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்த வேளை

நேரம், இரவு 10.00 மணியை தாண்டிக் கொண்டிருந்தது. யாழ் பேருந்து நிலையம். அங்காங்கே வீதி விளக்குகள் வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தன. சாப்பாட்டுக் கடைகள் மாத்திரம் கலகலப்பாக இயங்கிக் கொண்டிருந்தன.

ஒன்றிரண்டு ஆட்டோக்கள் வேறு மாவட்டங்களிலிருந்து வரும் பேருந்து பயணிகளை ஏற்றுவதற்காக தயாராக நின்றன.

ஒரு கடையில் "ஒலிக்கவிருக்கிறது எஸ்.பி பாலசுப்ரமணியம் மற்றும் சித்ராவின் குரலில் சிகரம் திரைப்பட பாடல்.. " என்ற வானலை குரலைத் தொடர்ந்து "இதோ இதோ என் பல்லவி.." என்று பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

அதில் ஒரு நீல நிறத்திலான ஆட்டோவிற்குள் அதன் சாரதி பாடலில் மெய்மறந்து ஆட்டோ பின் இருக்கையில் கால்மேல் கால் போட்டபடி படுத்திருந்து ரசித்துக் கொண்டிருந்தான்.

மதுமிதா பேருந்து நிலையத்தில் அமர்ந்திருந்து கைபேசியில் பேசிக்கொண்டிருந்தாள். "தனியா வரலடா அப்பா தான் பஸ் ஏத்திவிட வந்தவர்.. அங்கால கடையில நிக்கிறார்.." என்றாள் மதுமிதா

".........."

"ரெண்டு நாள் ட்ரெயினிங் தானே.. நடிக்காத நீ.. என்னவோ டெய்லி பாத்து பாத்து கொஞ்சுற மாதிரி கதைக்கிற.. நானே கோல் எடுத்தாலும் ஏன் நாயெண்டும் கேக்கிற இல்ல நீ.." என்றாள் முகத்தை கோபமாக வைத்துக் கொண்டு

".........."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி காணும்.. நீ உலகமகா நடிகன்டா.. நான் வைக்கிறன்.. அப்பா வந்திடுவார்.." என்று சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்தாள்.

அவள் அழைப்பை துண்டிக்க மதுவின் தந்தை கையில் ஒரு லெமன்ப் பிஸ்கட்டும் சோடா போத்தல் ஒன்றையும் கொண்டு வந்து மதுவிடம் கொடுத்தார்.

"அம்மாடி மது காணுமா.. வேற ஏதும் வாங்கிட்டு வரவா..? என்றார் மதுவின் தந்தை."

"காணும் அப்பா.. ஏன் பெரிய பக்கட் வாங்கினியள்? இவ்வளவு பிஸ்கட்டையும் நான் எப்பிடி சாப்பிடுவன்?" என்று செல்லம் கொஞ்சும் குரலில் தந்தையை கடிந்துகொண்டாள் மதுமிதா.

"சரி பக்கத்து சீட்டில ஆரும் இருப்பினம் தானே.. குடுத்து சாப்பிடம்மா.." என்று சொல்லி மகளின் பக்கத்தில் அமர்ந்தார்.

"பிள்ள கொழும்புக்கே போறியள்.." என்று ஒரு குரல் கேட்க மதுமிதா பக்கத்தில் திரும்பி பார்த்தாள்.

அங்கு ஒரு அறுபது வயது மதிக்கத்தக்க பெண்மணி பயணப்பையுடன் அமர்ந்திருந்து அவளைப் பார்த்து புன்னகைத்தார்.

மதுவின் தந்தை அவளிடம் "பஸ் வரட்டும்.. நீ இதில இரம்மா.. நான் அவடத்த கடைக்கு ஒருக்கா போய் வாறன்.." என்றுவிட்டு எழுந்து போனார்.

மதுமிதா பக்கத்திலருந்த பெண்ணிடம் திரும்பி "சொறி அன்ரி.. நீங்க கேட்டது விளங்கல.. என்ன கேட்டனீங்க.." என்று குரலை தணித்து மெதுவாக கேட்டாள்.

"கொழும்புக்கே போறியள்.. என்டு கேட்டன்.." என்றார் அந்த பெண்.

"ஓம்.." என்று சொல்லி புன்னகைத்தாள் மதுமிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பஸ் வர நேரமாகும் போல கிடக்கு என்ன..? பிள்ள நீங்க இஞ்ச எவடமம்மா.." என்றார் அவர்.

"நான் சுண்டுக்குளி.. ஒரு ட்ரெயினிங்க்கு கொழும்புக்கு போறன்.. அப்பாவோட வந்தனன்.." என்று ஒரு பாதுகாப்புக்காக தந்தையோடு வந்ததை மேலதிக தகவலாக சொன்னாள் மதுமிதா.

"ஓம்.. போனில சொல்லிக்கொண்டு இருந்தியள்.." என்று அப்பெண்மணி கூறவும் அவளுக்கு கூச்சமாக இருந்தது. மெல்ல குனிந்து தலைமுடியை காதோரம் ஒதுக்கிவிட்டு சிறுவெட்கத்துடன் "ஓ.." என்றுவிட்டு

"பேரென்னம்மா.." என்று அந்த பெண் கேட்க

"என்ர பேர் மதுமிதா.. வீட்ட மது என்டு தான் கூப்பிடுவினம்.." என்றவள்

"நீங்க எவடம் அன்ரி.. உங்கட பேர் என்ன?" என்று பேச்சைத் தொடர்ந்தாள்.

"என்ர பேர் சகுந்தலாதேவி.. நான்.. இஞ்சால மானிப்பாய்.. நாங்கள் பிறந்து வளந்து வாழ்ந்த எல்லாம் அங்க தான்.." என்றார் ஒரு பெருமிதத்தோடு.

"ஓ அப்ப.. கொழும்புக்கு எதும் அலுவலா போறீங்களா..? என்றாள் மது.

அவள் அப்படி கேட்டது தான் சகுந்தலாவின் முகம் வாடி விட்டது. மதுவிற்கு ஒரு மாதிரி சங்கடமாக இருந்தது.

ஏதோ அவருடைய மனதை கஸ்டப்படுத்தும் கேள்வியை கேட்டு விட்டேனோ என்று அவளுக்கு கவலையாக இருந்தது.

"பேரப்பிள்ளைய பாக்க போறனம்மா.." என்றார் கவலை தோய்ந்த குரலில்.

"அன்ரி கேக்கிறன் எண்டு ஏதும் நினைக்காதீங்க.. ஏதும் பிரச்சினையா? ஏன் முகம் ஒரு மாதிரி சோர்வா இருக்கு..? என்று தயங்கி தயங்கி கேட்டாள் மது.

"நினைக்க என்னம்மா இருக்கு.. எங்கட குடும்பினை இவ்வளவு தான்.." என்று ஒரு பெருமூச்சு விட்டு தொடர்ந்தும் சொல்ல தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு மகன் தானம்மா எனக்கு. இந்த சண்ட நடந்த நேரத்தில் நானும் அவரும் சேந்து மகன வெளிநாட்டுக்கு அனுப்பிட்டம்.. ஒரே ஒரு பிள்ளய பெத்து இவங்களுக்கு சாக குடுக்கிறதே என்டு.. கடைசில என்ர பிள்ளைட ஒரு நல்லது கெட்டதையும் பாக்க குடுத்து வைக்கல.

இப்ப இஞ்ச ஒரு பிரச்சினையும் இல்ல.. ஒருக்கா வந்திட்டு போடா தம்பி.. பாக்க ஆசையா கிடக்கு.. என்டு கேட்டன்.. அவன்.. எனக்கு அங்க வர நேரமில்ல அம்மா எண்டுறான்...

கலியாணமும் முடிச்சிட்டான்.. அவள் மருமகள் பிள்ளையையும் என்ர பேத்தியையும் ஒரு நாளும் கண்ணால காணல அம்மாடி நான்.. ஏதோ போன்ல அனுப்பிறன் என்டு படத்த மட்டும் அனுப்புவான்..

எனக்கு எங்க இந்த போனெல்லாம் பாக்க தெரியாதே.. உவள் பக்கத்துவீட்டு ராசாத்திட பெட்ட தான் போன்ல விளக்கமா படமெல்லாம் எடுத்து காட்டுவாள்.." என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டாள் சகுந்தலா.

மதுவிற்க்கு சகுந்தலாவின் அந்த முகம்தெரியாத மகன் மீது கோபமும் வெறுப்பும் வந்தது.

"ச்சேக் என்ன மனுசன் இவனெல்லாம்.. பெத்த அம்மாவ இப்பிடி கவலைப்படுத்துறான்.. அவன மட்டும் நேரில கண்டனோ.." என்று மனதிற்குள் திட்டி தீர்த்தாள்.

மதுமிதாவுக்கு கூட பிறந்தது ஒரு அண்ணன் மட்டும் தான். தாய் தகப்பன் சுதர்சன் மதுமிதா என்று சின்ன குடும்பம் அவர்களுடையது.

சகுந்தலா தனது மகனைப்பற்றி சொல்லியதை கேட்ட போது மதுவிற்க்கு அவளது அண்ணன் சுதர்சன் நினைவு வந்தது.

அவனை நினைக்க பெருமையான இருந்தது அவளுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதர்சன் திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளுக்கு தகப்பனாகிவிட்ட போதும் தன் மனைவி பிள்ளைகள் மீது எவ்வளவு அன்பும் அக்கறையும் காட்டுவானோ அதே அன்பையும் அக்கறையையும் மது மீதும் தாய் மீதும் காட்டுவான்.

தமையனுக்கும் தந்தைக்கும் இடையில் தபால் வேலை செய்வது தான் சிறுவயது முதல் மதுவின் வேலை.

சுதர்சனுக்கு தந்தையிடம் நேரடியாக ஏதும் கேட்பதென்றால் பெரும்பாடு. தகப்பனோடு பெரிய பேச்சுவார்த்தை இல்லாவிட்டாலும் கூட தகப்பன் பேச்சை மீறி ஒரு அடிகூட எடுத்து வைக்க மாட்டான்.

ஏதும் தேவை என்றால் "மது அப்பாட்ட கேளடி.. பின்னேரம் சொக்லட் வாங்கி தாறன்.. செல்லம் தானே.." என்றெல்லாம் அவளுக்கு ஐஸ் வைத்து தகப்பனிடம் தங்கையை தூது அனுப்புவான்.

"என்னம்மா யோசனை.." என்ற சகுந்தலாவின் குரலில் தமையனின் நினைவிலிருந்து மீண்டாள் மதுமிதா.

"ஒண்டுமில்ல அன்ரி.. அய்ய அங்கிள் எங்க..? நீங்க தனியாவா இருக்கிறீங்க..? என்றாள் மதுமிதா.

"ஓமம்மா மோன காணாமலே சீவன் போகப்போகுதெண்டு புலம்பிக்கொண்டே இருந்து மனுசன் வருத்தத்தில கிடந்து போய்ச்சேந்திட்டு..

அவனுக்கு வீசா கிடைக்கல என்டு செத்தவீட்டுக்கும் வரேல.. காசு மட்டும் அனுப்பி விட்டவன்.." என்று பெருமூச்சு விட்டவள்

"அவனகண்டு கண காலமடி பிள்ள.. முந்தநாள் இஞ்ச வந்திருக்கிறான்.. கொழும்பில தான் மருமகள் பிள்ளட வீடு.. அங்க தான் நிக்கினம் என்டு நேற்று தான் சொன்னவன்.. நாளைக்கு பின்னேரம் பிளைட்டாம்..

போக முதல் ஒருக்கா ஓடிபோய் என்ர பேரப்பிள்ளய பாத்திட்டா காணும்.. என்ர ராசாத்திய தூக்கி வளக்க தான் குடுத்து வைக்கல..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சாக முதல் ஒருக்கா அவள கண்குளிர கண்டிடனும்.. அதான் வெளிக்கிட்டன்" என்றாள் சகுந்தலா.

கண்கள் கலங்கியபடி கையில் ஒரு அன்ரோயிட் போனை இறுகப்பற்றி பிடித்தபடி அருகில் இருந்து தன் மனவேதனையை கொட்டிவிட்ட சகுந்தலாவை பார்க்க மதுமிதாவுக்கு பாவமாக இருந்தது.

என்ன சொல்லி அவரை சமாதானப்படுத்துவது என்று தெரியவில்லை மதுவிற்கு. அந்த வயதான தாயின் தவிப்பும் ஏக்கமும் எவ்வளவு வலிமிக்கதாக இருக்கிறது.

"ச்சேக்.. என்ன வாழ்க்கை.. கடைசி காலத்தில யாரும் இல்லாம அனாதையாக நிற்கும் முதுமை எவ்வளவு கொடுமையாக இருக்கிறது.." என்று நினைத்து வேதனைப்பட்டாள் மது.

"கொழும்பில போய் இறங்கினதும் அவருடைய மகனைப் பார்த்து பேச வேண்டும்.. என்ன நடந்தாலும் சரி.. ச்சேக்.. அவன வெளிநாட்டுக்கு அனுப்பாம.. பேசாம ஆமிக்காரனிட்டயே குடுத்திருக்கலாம்.. பரதேசி.." என்று மனதிற்குள் திட்டடினாள்.

"கவலைப்படாதீங்க அன்ரி.. கட்டாயம் உங்கட பேத்திய நீங்க பாப்பீங்க.. கொழும்பில எவடத்தில உங்கட மகன் இருக்கிறார்.. ? என்றாள் மது.

"இந்த போன்ல இருக்கம்மா.. மகன் விலாசம் அனுப்பி விட்டவன்.." என்று சொல்லி தன் கையிலிருந்த கைபேசியை மதுவிடம் கொடுத்தாள் சகுத்தலா.

சகுந்தலாவின் கைபேசியை வாங்கி அதிலிருந்து சகுந்தலாவின் மகனின் விலாசம் மற்றும் தொலைபேசி இலக்கங்களை தனது கைபேசிக்கு அனுப்பிக் கொண்டாள் மதுமிதா.

கைபேசியியை சகுந்தலாவிடம் கொடுத்துவிட்டு "அன்ரி கொழும்புல இருந்து திரும்பி வந்ததும் எங்கட வீட்ட வாங்க.." என்றாள் புன்னகையோடு மது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கட்டாயம் வாறனம்மா.." என்று சகுந்தலா பதிலுக்கு புன்னகைக்க அந்த புன்னகை ஏனோ மதுவின் மனதிற்கு இதமாக இருந்தது.

"சுண்டுக்குளில எவடமம்மா உங்கட வீடு.." என்று சகுந்தலா ஆர்வத்தோடு கேட்க.

முதல் இருந்த தயக்கம் மறைய ஒரு உரிமையோடு தன்னைப்பற்றி எல்லாவற்றையும் சகுந்தலாவிடம் சொன்னாள் மதுமிதா.

"முருகன் கோயிலுக்கு பக்கத்தில தான் எங்கட வீடு.. அவடத்த வந்து போஸ்ட் மாஸ்டர் சுந்தரத்திட வீடு என்டு கேட்டா எல்லாரும் சொல்லுவினம்.."

"வீட்ட அப்பா அம்மா அண்ணா அண்ணி அண்ணாட பிள்ளையள் பிறகு நான் எட்டு பேர் இருக்கிறம்.."

அப்பா போஸ்ட் மாஸ்டர்.. அண்ணாவும் அண்ணியும் பாங்ல வேலை செய்யினம்..அம்மா வீட்ட தான் இருக்கிறா.."

என்று தன்னைப்பற்றியும் தன் வீட்டு ஆட்களைப்பற்றியும் சகுந்தலாவிடம் எல்லாவற்றையும் மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள் மது.

சகுந்தலாவுக்கு மதுவைப் பார்க்க ஏக்கமாக இருந்தது.

தனக்கும் ஒரு பெண்பிள்ளை இருந்திருந்தால் இப்படித்தானே இருப்பாள். இன்று தன்னை ராணிமாதிரி வைத்து பார்த்திருப்பாள்.. என்று தோன்றியது.

தனக்கு மட்டும் சமைத்து அதையும் சாப்பிட மனமில்லாமல் அரைகுறையாக சாப்பிடுவது. ஒரு நல்லது கெட்டது என்று வீட்டிற்கு வந்து போக ஒருவருமில்லை. தலைவலி கால்வலி என்று கொஞ்சம் சாய்ந்தாலும் ஆறுதலாய் பேச வீட்டில் யாருமில்லை.

இதையெல்லாம் நினைக்க சகுந்தலாவுக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சநேரத்தில் அங்கு சிறிய சலசலப்பு. "வீட்ட போக வேண்டியது தான்.. பஸ் பழுதாம்..இண்டைக்கு பஸ் கொழும்புக்கு ஓடாதாம்.. விசரனுகள்.." என்று ஒருவர் கத்திக்கொண்டு நின்றார்.

பஸ் வரவில்லை என்ற விடயம் காதில் விழுந்தது தான் தாமதம் மதுவிதாவின் கண்கள் சகுந்தலாவை தான் தேடியது.

சகுந்தலா அப்படியே உடைந்து போய் உட்கார்ந்து விட்டார். அவரை பார்க்க பாவமாக இருந்தது மதுவுக்கு.

மதுவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வாடிப்போய் உட்கார்ந்திருக்கும் சகுந்தலாவை என்ன சொல்லி சமாதானப்படுத்துவது.

இன்று கொழும்புக்கு போகாவிட்டால் இனி நாளை காலை பஸ்ஸில் தான் போக வேண்டியிருக்கும். நாளை காலை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிக்கிடும் பஸ் கொழும்புக்கு போய்ச்சேர மதியம் தாண்டிவிடும்.

பின்னேர பிளைட்டில் வெளிக்கிட இருக்கும் மகனை நாளை காலை பஸ்ஸில் போய் சந்திப்பதென்பது சாத்தியமில்லாத விடயம்.

மது யோசித்துக் கொண்டிருக்க மதுவின் தகப்பன் சுந்தரம் வந்து

"மதும்மா.. பஸ் இல்லையாமடா.. என்ன செய்வம் நாளைக்கு உனக்கு ரெயினிங் இருக்கல்லோ.. " என்று சொல்லவும்

"அது பரவால்லப்பா.." என்றாள் குரல்கம்மி போய்.

மகளின் முகம் வாடிப்போய் இருந்ததை பார்த்த சுந்தரம் அவள் ட்ரெயினிங் போக முடியாமல் போய் விடுமோ என்ற கவலையில் இருக்கிறாள் என நினைத்து என்ன செய்வதென்று யோசித்தார்.

யோசிக்க தான் சுந்தரத்திற்கு ஒன்று நினைவு வந்தது. "பொறும்மா வாறன்.." என்று சொல்லி கைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி யாருடனோ பேசினார். பேசிவிட்டு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மாடி.. உவன் கனேசன்ட தம்பியர் குடும்பம் போன கிழம கனடால இருந்து வந்தவையள் தானே.. நாளைக்கு பினைட்டாம். வான்ல வெளிக்கிடினம் இண்டைக்கு கொழும்புக்கு.. எனக்கு இப்பதான் ஞாபகம் வந்தது.. நான் இதால வரச்சொன்னன் நீ அவையளோட வெளிக்கிடு.. என்றார்.

சுந்தரம் சொல்லிக் கொண்டிருக்க அவர் குறிப்பிட்ட வாகனம் அங்கு வந்து நின்றது.

சுந்தரம் மதுவின் பயணப்பையை கையில் எடுத்துக்கொண்டு போய் வேனில் வைத்துவிட்டு "மது ஏறம்மா.." என்று திரும்பிப் பார்க்க மது சகுந்தலாவின் பக்கத்திலேயே நின்றிருந்தாள்.

சுந்தரம் மதுவிடம் போய் "என்ன மது.. அவையளுக்கு நேரம் போகுதாம்.. கெதியா போம்மா.." என்று சொல்ல

"அப்பா.. இந்த அன்ரியும் என்னோட வேன்ல வரட்டுமே அப்பா.." என்றாள் மது கவலை தோய்ந்த குரலில்.

மதுவின் கையை பிடித்து சற்று தள்ளி அழைத்துக்கொண்டு போய் "தெரியாத ஆக்கள கூட்டிக்கொண்டு போய் ஏதும் பிரச்சினை என்டா என்ன செய்யிறது.பிறகு எங்களுக்கு தானே சிக்கல்.. நீ வெளிக்கிடு.. அவட வீட்டு ஆக்கள் வருவினம் தானே அவவ கூட்டிக்கொண்டு போக.." என்று சுந்தரம் சொல்ல

"அவக்கு ஒருவருமில்லையப்பா.." என்றாள் மது தலையை குனிந்தபடி.

சுந்தரம் எவ்வளவு சொல்லியும் மது தனியான வேனில் ஏற மாட்டேன் என்று அடம்பிடித்துக் கொண்டிருந்தாள்.

வேன் சாரதி "சுந்தரமண்ண.. நேரம் போகுது.. பிள்ளய வரச்சொல்லுங்கோவன்.." என்று குரல் கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம் அவசரமாக வேன் சாரதியிடம் போய் "எடே தம்பி.. இன்னொரு ஆளும் இருக்கு ஏத்துவியே.." என்று கேட்க

"கஸ்டமண்ண.. ஹயர் தான் கொண்டு போறன் நான்.. உங்கட மகள் அதுவும் வேலை விசயம் எண்டதால தான் அவையளிட்ட கதைச்சு இதால வந்தன்.. இதுக்கே முகஞ்சரியில்ல அவையளுக்கு.. ஓராள் எண்டா ஏத்தி விடுங்கோ.. இல்லாட்டி நான் வெளிக்கிடுறன் அண்ண.." என்று அவன் கொஞ்சம் கடுமையாக சொல்லி விட

"சரி பொறு வாறன்.." என்றுவிட்டு மகளிடம் போய்

"மது ஓராள் எண்டா தான் ஏத்துவன் என்டுறான் அவன்.. நீ வெளிக்கிடு.. வேணுமெண்டா அவவ நான் அவங்கட வீட்ட கொண்டு போய் விடுறன்.." என்று சுந்தரம் சொல்லிக்கொண்டிருக்க

"ஐயோ..அப்பா.. அந்த அன்ரி இண்டைக்கு கொழும்புக்கு போக வேணும்.. நான் சொல்லுறத கொஞ்சம் கேளுங்கப்பா.. ப்ளீஸ்.." என்று தகப்பனிடம் கெஞ்சினாள் மது.

சுந்தரம் எப்போதும் மகளின் பேச்சை உதாசீனப்படுத்தியதில்லை. ஏனென்றால் தன் மகள் பிழையான எதையும் செய்ய மாட்டாள் பிழையான விடயங்கள் எதற்கும் தன்னிடம் அனுமதி கேட்டு வர மாட்டாள் என்ற அசையாத நம்பிக்கை மகள் மேல் இருந்தது.

மதுமிதா எல்லாவற்றையும் தகப்பனிடம் கூறினாள். சுந்தரத்திற்கு மகள் கொழும்புக்கு போக முடியாமல் போய்விடும் என்பதைவிட மகளின் விருப்பமே பெரிதாக தோன்ற

"சரியம்மா.. நீ போய் அவவ கூட்டிக்கொண்டு வா.." என்று சொன்னதுதான் தாமதம் மது ஓடிப்போய் சகுந்தலாவின் பயணப்பையை எடுத்துக் கொண்டு உரிமையோடு கையை பிடித்து எழுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்ரி வாங்க.. வேன்ல கொழும்புக்கு போகலாம்.." என்றாள் மது "நான் கேட்டுக்கொண்டு தான் இருந்தன்.. நீவெளிக்கிடம்மா.. வேலை விசயம் என்டு சொன்னனியல்லோ.." என்று சகுந்தலா மறுக்கவும்

"அன்ரி எனக்கு ஒரு பிரச்சினையும் இல்ல.. இந்த வேலை இல்லாட்டி வேற வேலை.. நீங்க கட்டாயம் வெளிக்கிடோனும் இப்ப.. வாங்க அன்ரி.." என்று சொல்லி சகுந்தலாவை அவசர அவசரமாக கூட்டிக்கொண்டு ஓடிப்போய் வேனில் ஏற்றி விட்டாள் மதுமிதா.

வேன் வெளிக்கிடவும் சகுந்தலா மதுமிதாவின் கையை பற்றி கண்ணீருடன் "நானும் ஒரு பொம்பிள பிள்ளய பெத்திருக்கலாம்.." என்றார்.

வேன் மெல்ல ஊர்ந்து யாழ் பேருந்து நிலையத்திற்குள் இருந்து வெளியேறியது.

மதுவுக்கு மனம் ஏனோ நிம்மதியாக இல்லை "அப்பா வெளிக்கிடுவமா.. " என்று அவள் கேட்டு முடிக்க காதை பிளக்கும் வண்ணம் ஒரு பெருஞ்சத்தம் கேட்டது. அங்கு நின்ற அனைவரும் சத்தம் வந்த திசையை நோக்கி ஓடினார்கள்.

சுந்தரமும் மதுமிதாவை பைக்கில் ஏற்றிக்கொண்டு சத்தம் வந்த இடத்திற்கு போனார்.

பேருந்து நிலையத்திலிருந்து ஒரு ஐநூறு மீற்றர் தூர தொலைவில் கொஞ்ச நேரத்திற்கு முன் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட வேனும் கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துள்ளாகியிருந்தது.

தகப்பன் பைக்கை நிறுத்தியதும் இறங்கி ஓடிப்போய் பார்த்தவளுக்கு கால்கள் இரண்டும் விறைத்தது போல் ஆனாது.

கொஞ்ச நேரத்தில் அம்பியூலன்ஸ் பொலிஸ் பொதுமக்கள் என கூட்டம் கூடியது. அந்த வேனில் போன அனைவரும் படுகாயமடைந்து உயிருக்கு போராடிக்கொண்டிருந்தனர். சாரதி அவ்விடத்திலேயே உயிரிழந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலாவின் தலையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டு இருந்தது. சுயநினைவை இழந்து விட்டிருந்தார்.

வைத்தியசாலை ஊழியர்கள் படுகாயமடைந்தவர்களை தூக்கி அம்

பியூலன்ஸ் வண்டியில் ஏற்றி அனுப்பிக்கொண்டிருந்தனர்.

மதுமிதாவும் அம்பியுலன்ஸ் வண்டியின் பின்னாலேயே வைத்திசாலைக்கு புறப்பட்டாள்.சுந்தரம் எவ்வளவோ சொல்லியும் மது வீட்டிற்கு போக சம்மதிக்கவில்லை.

"அப்பா அந்த அன்ரி பாவமப்பா.. பேத்திய பாக்கோனுமெண்டு எவ்வளவு ஆசையா வெளிக்கிட்டவ..

ஏனப்பா கடவுள் இப்பிடி நல்லவங்களுக்கே கெட்டது செய்யிறார்.." என்று சொல்லி அழுதாள் மது.

சுந்தரத்திற்கு மகளை பார்க்க பாவமாக இருந்தது.

மது சகுந்தலாவின் மகனுக்கு அழைப்பை ஏற்படுத்தினாள். அழைப்பு எடுக்கப்பட்டதும்

"ஹலோ.. நான் யாழ்ப்பாணத்தில இருந்து மதுமிதா கதைக்கிறன்.. சகுந்தலா அன்ரிட மகனா கதைக்கிறீங்க..?

........................

"உங்கட அம்மாக்கு அக்ஸிடென்ட் ஆகிட்டு.. ஓம்..யாழ்ப்பாணம் பெரியஆஸ்பத்திரில தான்.. ப்ளீஸ்.. வந்திடுங்க அண்ணா.."

........................

"கொஞ்சம் என்டாலும் உங்களுக்குள்ள ஒரு மனிதத்தன்மை இருந்தா.. ப்ளீஸ் இப்பவே வெளிக்கிட்டு வாங்க..? என்று ஒரு வெறுப்போடு சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்தாள்.

இரவு முழுவதும் வீட்டிற்க்கும் போகாமல் அங்கேயே நின்றாள் மது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலாவின் மகள் என்று சொல்லி அவர் சம்மந்தப்பட்ட விடயங்களில் கையெழுத்திட்டாள் வைத்தியசாலையில். தன் மகளுக்கு இளகிய மனம் அவள் நல்ல குணமுடையவள் என்று எப்போதும் பெருமைப்பட்டுக் கொள்ளும் சுந்தரத்துக்கு இன்று அவளுடைய அந்த குணமே அவள் மனதை காயப்படுத்துகிறது என்று கவலையாக இருந்தது.

அடுத்த நாள் விடிந்து விட்டது. விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. சகுந்தலாவின் மகன் மனைவி மகளுடன் வந்திருந்தான்.

வைத்தியசாலைக்கு வெளியில் அவர்கள் வந்த வாகனத்தில் அவன் மனைவியும் குழந்தையும் இருந்தார்கள். அவன் மட்டும் உள்ளே வந்திருந்தான்.

மதுமிதா மெல்ல சகுந்தலாவின் கன்னத்தை தட்டி எழுப்பி "அன்ரி உங்கட மகன் வந்திருக்கிறார்..எழும்புங்கோவன்.. ப்ளீஸ்.." என்றாள் அழுகையை அடக்கியபடி.

சகுந்தலா மெல்ல கண்ணை திறந்து பார்த்தார்.

மகனை தொட்டு தழுவி கண்ணீர் விட்டார். மகனிடம் ஏதோ கேட்க முயற்சித்தார். உடல் வலியால் வாயைத்திறந்து பேச முடியவில்லை சகுந்தலாவால்.

மகனோ"அம்மா.. கஸ்டப்படாதேயுங்கோ.. நீங்க சுகமானதும் கதைப்பம்.." என்று சமாதானப்படுத்தினான்.

சகுந்தலா ஏக்கத்தோடு மதுவைப் பார்த்தார்.

அந்த கண்களில் தெரிந்த ஏக்கமும் தவிப்பும் மதுவிற்கு எதையோ ஞாபகப்படுத்தியது.

திடீரென்று ஏதோ தோன்றியவளாய் சகுந்தலாவின் மகனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணா.. உங்கட மகள் எங்க..? என்று கேட்டாள். "வெளில காருக்குள்ள இருக்கிறா.." என்று சகுந்தலாவின் மகன் சொல்லவும் திடீரென அங்கிருந்து வெளியே ஓடினாள். சகுந்தலாவின் மகன் வந்த காரை அடையாளம் கண்டு காரின் கதவை தட்டினாள் திறக்கும்படி. உள்ளிருந்த பெண் கார் கதவை திறந்ததும் அவள் மடியில் உட்கார்ந்திருந்த குழந்தையை அவள் கையிலிருந்து பிடுங்கி தூக்கிகொண்டு வைத்தியசாலைக்குள் ஓடினாள்.

குழந்தையின் தாய் கத்திகூச்சலிட்டாள். மதுவோ எதையும் கண்டுகொள்ளாமல் அவசரசிகிச்சை பிரிவிற்குள் குழந்தையை தூக்கிக்கொண்டு ஓடினாள்.

குழந்தையை சகுந்தலாவிடம் கொண்டுபோய் "அன்ரி உங்கட பேத்தி.. பாருங்கோ.." என்றாள் மூச்சுவாங்க. கட்டுப்போட்டிருந்த கை துடிக்க கண் இரண்டும் கலங்கி துடிக்க "என்ர ராசாத்தி.." என்று சொல்லி குழந்தையை அணைத்து கொஞ்சினாள் சகுந்தலா.

குழந்தையின் பிஞ்சுக் கன்னம் கைகள் கால்கள் என எல்லாவற்றையும் ஆசை ஆசையாக தொட்டு கொஞ்சினார். குழந்தையை தொட்டுக்கொஞ்சிக்கொண்டிருந்த கைகள் மெல்ல துவண்டு விழுந்தது. எத்தனையோ வருட ஏக்கம்.. நினைத்துகூட பார்க்க முடியாத சந்தோசத்தை தாங்க முடியாமல் அந்த முதிய இதயம் தன் துடிப்பை நிறுத்தி விட்டிருந்தது.

அந்த ஜீவன் தன் கடைசி ஆசையை நிறைவேற்றிக்கொண்டு இவ்வுலகைவிட்டு பிரிந்தது. மதுமிதாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மனம் மலையளவு கனத்தது. கத்தி அழவேண்டும் போல் இருந்தது. ஆத்திரம் தீர யாரையாவது அல்லது எதையாவது அடிக்க வேண்டும் போல் கைகள் நடுங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலாவை சந்தித்து ஒரு நாள்கூட முழுதாய் முடியவில்லை ஆனாலும் அவரின் பிரிவை தாங்க முடியவில்லை. மனிதனுடைய மனம் ஏன் உணர்வுகளுக்கு இவ்வளவு அடிமையாகி போகிறது என்று வெறுப்பாக இருந்தது அவளுக்கு.

பக்கத்தில் வந்து சகுந்தலாவின் கன்னத்தை தட்டி எழுப்பினாள். பலனில்லை.

சகுந்தலாவின் மகன் குழந்தையை தூக்கி வைத்துக் கொண்டு "அம்மா.. என்னை மன்னிபுங்கோ.. ஐயோ.. என்ர அம்மா.." என்று கத்தினான். மதுவுக்கு சகுந்தலாவின் மகனைப் பார்க்க வெறுப்பாக இருந்தது.

வைத்தியர் வந்து பார்த்துவிட்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லும்படி ஊழியர்களிடம் பணித்தார்.வைத்தியசாலை ஊழியர்கள் இருவர் வந்து சகுந்தலாவின் உடலை தூக்கி ஸ்டெச்சரில் வைத்துக் கொண்டு போனார்கள்.

மதுமிதா சகுந்தலாவின் மகனிடம் திரும்பி "அண்ணா ப்ளீஸ் உங்கட லைப் டைம்ல இனியொரு முறை யாழ்ப்பாணத்துக்கு வந்திடாதீங்க.."

"நீங்க எல்லாம் மனித இனத்துக்கே கேடு.." என்றாள் அழுதபடி.

"உங்கள கெஞ்சி கேக்கிறன்.. தயவு செய்து உங்கட அம்மாக்கு இனி செய்ய வேண்டிய காரியங்களையாவது ஒரு மகனா இருந்து ஒழுங்கா செய்திட்டு போங்க.."அவவ அனாதை பிணமா விட்டிட்டு ஓடிடாதேயுங்கோ.." என்றாள் மது.

நேற்று சந்தித்த ஒருத்திக்கு தன் தாய் மேல் இருக்கும் பாசம் தனக்கு இல்லாமல் போனதை நினைக்க சகுந்தலாவின் மகனுக்கு தன்மேலே வெறுப்பாக இருந்தது.

அந்நேரம் ஒரு ஊழியர் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார் பொடிய பொறுப்பெடுக்குறீங்க..? இதில சைன் பண்ணுங்க.." என்று ஒரு பேப்பரை நீட்டினார்.சகுந்தலாவின் மகன் அந்த பேப்பரை வாங்கி கொண்டு "என்ர அம்மா தான் அவ.." என்று சொல்லவும்.

"அப்ப மகள் என்டு இந்த பிள்ள சைன் வைச்சதே அட்மிட் பண்ணேக்க.." என்று மதுமிதாவைக் காட்டி வைத்தியாசலை ஊழியர் கேட்கவும்

"ஓம்.. இவ என்ர தங்கச்சி.. நான் கொழும்பில நின்டனான்.. இப்பதான் வந்தனான்.." என்று சொல்லி கையிலிருந்த பேப்பரை மதுவிடம் நீட்டினான் சகுந்தலாவின் மகன்.

மது அந்த பேப்பரை வாங்கி மகள் என்று எழுதி கையெழுத்திட்டாள்.

**முற்றும்**

**(தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்முகத் தேர்வு

தேவ் கைக்கடிகாரத்தை பார்த்தான் நேரம் நண்பகல் 12ஐ தாண்டிக் கொண்டிருந்தது. அவன் போக வேண்டிய இடத்திற்கு போய் சேர இன்னும் 20 நிமிடமாவது எடுக்கும். ஆனால் 12.15 அங்கு நிற்க வேண்டும். மனதை மாற்றிக் கொண்டு திரும்பி போகவும் முடியாது. அதே நேரம் தாமதம் ஆனாலும் அதற்கான விளைவுகள் மிக பாரதூரமாக இருக்கும் என்பதும் அவனுக்கு தெரியும்.

பிரதான சாலை வழியாக சென்று கொண்டிருந்தவன் சட்டென பிரேக் போட்டு பைக்கை திருப்பி வலது பக்கமாக இருந்த குறுக்குப் பாதைக்குள் விரைந்தான். கைப்பேசி சிணுங்கியது எடுத்துப் பார்த்தான் அவனுடைய காதலி லயா அழைப்பில் இருந்தாள். "நேரங்காலம் தெரியாம தான் கோல் எடுப்பாள் இவள்" என்று மனதிற்குள் அலுத்துக் கொண்டு அழைப்பை அவசரமாக துண்டித்தான்.

மீண்டும் கைபேசி சிணுங்கியது அவளேதான் எடுத்து காதில் வைத்து "பிளீஸ்டி கொஞ்சம் பொறு எடுக்கிறன்.. முக்கியமான

ஒரு வேலையா இருக்கன்.. கோவிக்காத.." என்று சொல்லி அவளின் பதிலுக்கு காத்திராமல் கைபேசியை அணைத்து விட்டு பைக்கின் வேகத்தை அதிகரித்தான் தேவ்.

அந்த பரபரப்பான ஆபத்தான நேரத்தில் மனதில் பல எண்ணஓட்டங்கள் வந்து ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கையிலும் கூட லயாவின் நினைப்பு அவனுக்கு மனதில் ஒருவித இனிமையை தான் கொடுத்தது.

பள்ளியில் படிக்கும் போதிலிருந்தே தேவ்விற்கு அபிலயாவை தெரியும்.இருவரது வீடும் ஒரே தெருவில் தான் இருந்தது. அபிலயாவின் குடும்பம் ஓரளவிற்கு வசதியானவர்கள். லயாவின் தந்தை அந்த ஊரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய பல வியாபாரங்களுக்கு சொந்தக்காரராக இருந்தார். தேவ்வினுடைய குடும்பம் நடுத்தர வர்க்கம். அதனாலேயே அவன் பள்ளிக்காலம் முதலே லயா மீது தனக்கிருந்த காதலை அவளிடம் வெளிப்படுத்த தயங்கினான்.

இப்படியிருக்கையில் தான்பள்ளிப்படிப்பு முடிந்து அவன் முதன் முதலாக வேலைக்கு சேர்ந்த ஒரு வாரத்தில் லயா அவனை சந்திக்க வேண்டும் என்று அழைத்திருந்தாள்.

அலுவலகம் முடிந்து அவன் பக்கத்து தெருவில் இருந்த பூங்காவிற்க்கு போய் சேர்ந்த போது அவள் அவனுக்காக காத்திருந்தாள்.

"சொறி லயா கொஞ்சம் லேட் ஆகிட்டு.. ஏதும் முக்கியமான விசயமா?" என்றான்

வெடுக்கென முகத்தை திருப்பி அவனைப் பார்த்தவள் " ஏன் முக்கியமான விசயம் என்டா தான் சேர் வருவீங்களோ.. ரொம்ப ஓவரா தான் போற நீ.." என்றாள் லயா நக்கலாக.

"இல்ல திடீர்னு வர சொன்னியா அதான் கேட்டன்.." என வார்த்தைகளை மென்று விழுங்கி குரலை கொஞ்சம் தணித்து சொன்னான்.

"இங்க பார் எதுக்கு நீ இப்ப என்ன அவயட் பன்னுற?எனக்கு தெரியும் நீ என்ன லவ் பண்ணுறனு.. என அவள் சொல்லிக்கொண்டு போக இடையில் தேவ் குறுக்கிட்டு

"ஏய் அப்பிடி இல்ல... என்று அவன் சொல்லி முடிப்பதற்க்குள்

"இங்க யாரும் உன் பொய் கதையெல்லாம் கேக்க வரல சரியா? நான் சொல்லுறத மட்டும் கேளு.. எனக்கு தெரியும் நீ என்ன லவ் பண்ணுறன்னு.. நான் உன்ன ரொம்ப லவ் பண்ணுறன் சரியா? பியூச்சர்ல என்ன நடந்தாலும் ரெண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரும் சேர்ந்தே சரி பண்ணலாம்.. மரியாதையா என்னோட ஒழுங்கா கதை.. ஐ மீன் லவ் பண்ணு.. அவ்வளவு தான்.." என்று மூச்சு விடாமல் சொல்லி முடித்து விட்டு முகத்தை கோபமாக திருப்பிக் கொண்டாள்.

தேவ் சுற்றிலும் யாரும் இருக்கிறார்களா என்று ஒரு முறை நோட்டம்விட்டு மெதுவாக அவள் கையை பற்றி "சொறி.. லவ் யூ..லயா" என்றான்.

கையை வேகமாக உதறிவிட்டு அவனை கோபமாக முறைத்து " பெரிய பேரழகன் இவரு.. இவர் பின்னாடி நாங்க கெஞ்சிட்டு திரியனும்.. மூஞ்ச பாரு.. போடா போய் உன் வேலைய பாரு.." என்று கோபமும் கவலையும் கலந்து சொல்லி விட்டு வேகமாக சென்று விட்டாள் லயா.

அவளை எவ்வளவு நோகடித்து விட்டேன் என்று தன்னைதானே நொந்து கொண்டு அவளை சமாதானபடுத்த அவள் பின்னாலேயே வேகமாக சென்றான் அதற்க்குள் அவள் தனது ஸ்கூட்டியை ஸ்டாட் பண்ணிக்கொண்டு வேகமாக சென்று விட்டாள்.

பிறகு வந்த நாட்களில் அவளது அலுவலக வாசலிலும் அவளது வீட்டு தெருமுனையிலும் காத்திருந்து அவளிடம்

கெஞ்சி கெஞ்சி சமாதானப்படுத்திய நாட்கள் இனிமையானவை தான் தேவ்விற்க்கு.

எதிரில் வந்த பஸ் ஒன்று ஹோர்ன் அடித்துவிட்டு செல்ல அந்த ஹோர்ன் சத்தம் அவனது தலைக்கவசத்தையும் தாண்டி காதுகளில் கின்னென்று அதிர காதலியின் நினைவிலிருந்து மீண்டான் தேவ்.

அவசரமாக மீண்டும் கைக்கடிகாரத்தை பார்த்தான் நேரம் 12.09 எனக் காட்டியது. பைக்கை லேசாக முறுக்கினான். வாகனங்களின் இரைச்சல் காதில் ஊவென்று ஊழையிடும் எதிர்காற்றின் சத்தம் என எல்லாவற்றையும் தாண்டி கைக்கடிகாரத்தின் முட்கள் ஓடும் சத்தம் அவன் காதுகளில் இடி முழக்கம் போல் ஒலித்துக் கொண்டிருந்தது. வாழ்நாளில் இப்படி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்றத்தை அவன் அனுபவிக்கவில்லை. படபடப்பிலும் பதற்றத்திலும் காற்றின் குளிர்ச்சியையும் தாண்டி வேர்த்தது அவனுக்கு. வேர்வை தாடை வழியாக இறங்கி கழுத்தில் விழுந்து சில்லிட்டது தேவ்விற்க்கு.

எப்படியும் சரியான நேரத்திற்க்கு அங்கு போய் சேர்ந்து விட வேண்டும். வேலையை சரியாக முடிக்காமல் விட்டால் அதனால் ஏற்படும் விபரீதத்தை நினைக்கையில் தான்

அவசரப்பட்டு அதை செய்ய வந்து விட்டேனோ என்று தோன்றியது அவனுக்கு. ஆனாலும் கண்முன்னே கடந்த காலம் வந்து "நீ செய்வது தவறில்லை" என நினைவூட்டியது.

நேற்றுதான் அந்த பிரபல நிறுவனத்தில் இருந்து அவனுக்கு அழைப்பு வந்திருந்தது "நாளைய தினம் உங்களது வேலைக்கான நேர்முக தேர்வு நடைபெறவிருக்கின்றது. குறித்த நேரத்திற்க்கு கலந்து கொள்ளவும்" என்று.

தேவையான ஆவணங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு தொலைபேசியில் அவர்கள் குறிப்பிட்ட விலாசத்தை கண்டு பிடித்து ஒரு வழியாக சரியான நேரத்திற்க்கு நேர்முக தேர்வு நடக்கும் நிறுவனத்திற்க்கு வந்திருந்தான் தேவ். மட்டக்களப்பு மாநகரின் மத்தியில் அமைந்திருந்து அந்த மிகப்பெரிய நிறுவனம். இங்கு வேலை கிடைத்து விட்டால் நிச்சயம் எல்லாம் சரியாகி விடும் ஆனால் கிடைக்க வேண்டுமே என்ற எண்ணத்துடன் அங்கு வரிசையாக போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்தான்.

அங்கு அவனைப் போல் இன்னும் பலர் நேர்முக தேர்விற்க்கு வந்திருந்தனர். அவர்களை பார்க்கையிலேயே அவனுக்கு

அடிவயிற்றை பிசைந்தது. "இவ்வளவு பேர் இருக்கக்குள்ள நமக்கு இந்த வேலை கிடைக்குமா?" என அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் கண்ணாடி கதவைத்திறந்து கொண்டு உள்ளிருந்து ஒரு பெண் வந்தாள். எல்லோரிடமும் இருந்து அவர்களது சுயவிபரக் கோவையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிகொண்டாள். தேவ்விடம் இருந்து அவனது சுயவிபரக்கோவையை வாங்கும் போது யாரும் பார்க்காத வண்ணம் அவன் கைகளில் ஒரு துண்டு பேப்பரை திணித்து விட்டு போனாள்.

அவன் புரியாமல் நிமிர்ந்து பார்க்க அவள் வேகமாக உள்ளே சென்று விட்டாள். அவன் அதை மெதுவாக பிரித்து படித்தான். அதில் 'உனக்கு இந்த வேலை வேணும் எண்டால் முன்னால இருக்கிற படில ஏறி மேல வா..' என பேச்சு வழக்கில் எழுதியிருந்தது. கொஞ்சம் நடுக்கமாக உணர்ந்தான் தேவ். யோசித்தான் 'என்ன செய்யலாம்.. எனக்கு இப்ப இந்த வேலை ரொம்ப முக்கியம்.. அப்படி என்னவா இருக்கும்..' என்று மனதிற்க்குள் குழம்பியவனுக்கு வீட்டு சூழ்நிலை கண்முன்னே வந்தது.

தேவ்கரண் 29 வயது இளைஞன். அவனுக்கு 17 வயதாக இருக்கும் போது அவனது தந்தை ஒரு விபத்தில் இறந்து விட்டார். அதற்க்கு பிறகு அவனுடைய தாய் ஒரு நிறுவனத்தில் துப்பரவு பணியாளராக வேலை செய்து அவனையும் அவனுடைய தம்பி தங்கை என பிள்ளைகள் மூவரையும் வளர்த்தார். 17 வயது வரை தந்தையின் நிழலில் வளர்ந்தவனுக்கு குடும்ப பொறுப்பு என்று எதுவும் இருக்கவில்லை. "அப்பா பார்த்துக் கொள்ளுவார் தானே" என்ற அலட்சியத்துடனே இருந்து விட்டான்.

திடீரென்று நிகழ்ந்த தந்தையின் இழப்பை அவனால் ஏற்றுக் கொள்ள முடியாமல் போனது. வீட்டு பொருளாதாரமும் தாயின் கஸ்டமும் அவனை பெரிதும் பாதித்தது அதனால் உயர்தரத்தில் நல்ல பெறுபேறுகளை அவனால் பெற முடியவில்லை. பல்கலைக்கழக அனுமதியும் கிடைக்கவில்லை. உயர்தரம் முடிந்த கையோடு அவனது தந்தையின் நண்பர் ஒருவர் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பெற்றுக் கொடுத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ் கெட்டிக்காரன் தந்தையை போல் கடின உழைப்பாளி. அதனாலேயே வேலைக்கு சேர்ந்த ஒரு வருடத்திலேயே

பதவி உயர்வைபெற்று குடும்பத்தை கொண்டு நடத்த கூடிய ஒரு நிலைக்கு வந்திருந்தான். வாழ்க்கை ஓரளவு சுமூகமாக போய்க் கொண்டிருந்தது.

விதி யாரை விட்டது? ஆடம்பரமாக இல்லாவிட்டாலும் நிம்மதியாக போய்க்கொண்டிருந்த வாழ்க்கையில் விதி கொரோனா ரூபத்தில் விளையாடியது. கொரோனா தொற்று உலகம் முழுவதும் பரவி ஆட்டிப் படைக்க மொத்த உலகமும் முடங்கியது. கடைகள் அரச தனியார் நிறுவனங்கள் என அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. பலர் ஒரு நேர உணவிற்க்கும் பெரும் பாடுபட்டனர். தேவ் கரனுடைய குடும்பமும் அப்படி ஒரு நிலைக்குள் தள்ளப்பட்டது காரணம் அவன் வேலை செய்த தனியார் நிறுனமும் மூடப்பட்டது.

வேலை இல்லை சம்பளம் இல்லை அவனிடம் பெரிதாக சேமிப்பு என்று எதுவும் வங்கியில் இருக்கவில்லை. மாதச் சம்பளம் மாதாந்த குடும்ப தேவைகளை நிவர்த்தி செய்வதற்க்கே சரியாக இருந்தது. அங்கு இங்கு என்று தெரிந்தவர்களிடம் உதவியும் கடனும் பெற்று கையில் இருந்த சேமிப்பையும் வைத்து மூன்று மாதங்கள் வீட்டில் சாப்பாட்டு பிரச்சினையை மட்டுமே அவனால் சமாளிக்க முடிந்தது.

இப்படியாக போய்க்கொண்டிருக்கையில் மூன்று மாதங்களில் இலங்கைமீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பியது. மக்களின் வாழ்க்கை கொஞ்சம் கொஞ்சமாக வழமைக்கு வந்து கொண்டிருந்தது. தேவ் வேலை செய்த நிறுவனம் பாரிய அளவில் பொருளாதார பிரச்சினையை எதிர் நோக்கியதால் அந்நிறுவனத்தின் உரிமையாளர் நிறுவனத்தை மொத்தமாக இழுத்து மூடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு வேலை இல்லை ஆனால் வாழ்க்கை வழமை போல ஓடிக் கொண்டிருந்தது. மின்சார கட்டணம் தண்ணீர் கட்டணம் வீட்டு வாடகை தம்பி தங்கைகளில் படிப்பு செலவு என அனைத்தும் சேர்ந்து கொண்டே போனது.

நாடு வழமைக்கு திரும்பி ஒரு மாதம் ஆகியும் அவனுக்கு வேறு வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. பைக்கிற்க்கு பெற்றோல் அடித்துக் கொண்டு ஒவ்வொரு நிறுவனமாக நேர்முக தேர்வுக்கு சென்று வந்தது தான் மிச்சம். ஆனாலும் பயனில்லை.

இயலாமையில் கோபமும் வெறுப்பும் அதிகரித்தது. வீட்டில் அம்மா ஏதாவது சொன்னாலும் சரி அபிலயா அழைத்தாலும் சரி அவனுக்கு விரக்தியாக மட்டுமே

இருந்தது. குடும்பத்தை எப்படி காப்பாற்ற போகிறோனோ என்ற எண்ணம் அவனை வாட்டி எடுத்தது.

பேசாமல் எங்காவது கூலி வேலைக்கு போய் விடுவமா? என யோசித்தான் தேவ். இந்நிலையில் தான் அவன் ஒரு மாதத்திற்க்கு முன் வேலைக்கு விண்ணப்பித்திருந்த ஒரு நிறுவனத்தில் இருந்து அவனுக்கு அழைப்பு வந்திருந்தது நேர்முக தேர்விற்க்கு வரும்படி. இந்த வேலையாவது கிடைக்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு நேர்முக தேர்விற்க்கு செல்ல தயாரானான்.

"தம்பி கொஞ்சம் அப்பிடி சைட்டா நில்லுங்க.." என்று கூறி அவன் முதுகில் தட்டினார் ஒருவர் அதில் கடந்த கால நினைவிலிருந்து மீண்டவன். மீண்டும் என்ன செய்வது என்று யோசித்தான். ஒவ்வொருவாக உள்ளே சென்று வந்து கொண்டிருந்தனர். "உள்ள போவமா.. இல்ல படில ஏறி மேல போவமா.. நமக்குன்னு இந்த ஏழரை எல்லாம் எங்கயிருந்து வருதோ தெரியல.." என்று அலுத்துக் கொண்டு ஒரு பெருமுச்சுடன் எதிரே இருந்த படிகளில் ஏறி மேலே போனான் தேவ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே ஏறிப் போனால் அது வெறும் ஒரு பெரிய மண்டபம் போல் காட்சியளித்தது. அங்கு யாரும் இருக்கவில்லை. இருப்பதற்க்கு ஒரு கதிரை கூட இல்லை. பின்னால் இருந்து அவனது முதுகில் யாரோ தட்டினார்கள் திரும்பிப் பார்த்தான் அங்கு நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒருவர் நின்றார். உடனே தேவ் அவரிடம்"சேர் இந்த பேப்பர்.." என்று சொல்லி முடிக்கும் முன்னே

"தம்பி தேவ்கரன் உனக்கு அப்பா இல்ல அம்மா வீட்ட இருக்கிறா தம்பியும் தங்கச்சியும் படிக்கிறாங்க.. சரி தானே.." என்றார் அவர்.

"இதெல்லாம் எப்படி உங்களுக்கு தெரியும்? என அவன் ஆச்சரியத்தோடு கேட்க

"இதில்ல தம்பி இன்னும் நிறைய தெரியும். யோசிச்சு பார் இப்ப நாடு இருக்கிற.. நாடு என்ன உலகம் இருக்கிற சூழ்நிலையில ஒரு வேலை எடுக்க ஏலுமா? உன்ர வீட்ட எவ்வளவு காசு பிரச்சினை.. இன்னும் கொஞ்ச நாள் நீ வேலை இல்லாம இருந்தா சாப்பாட்டுக்கே வழி இல்லாம போகும்.. விளங்குதா?" என்று நீண்ட ஒரு கேள்வியை அவர் தேவ்விடம் கேட்டார்.

"உங்களுக்கு எப்பிடி எங்கட வீட்டு விசயம் எல்லாம் தெரியுமெண்டு தெரியல.. ஆனா எனக்கு இந்த வேலை கட்டாயம் வேணும்.. நீங்க என்ன செய்யனும் எண்டு சொல்லுங்க நான் செய்யிறன்.. ஆனா எனக்கு வேல வேணும்.." என்று ஒரு தீர்க்கமான குரலில் சொன்னான் தேவ்.

"நான் சொல்லுறத நீ செஞ்சா இந்த வேல உனக்கு தான். இந்த பெரிய கம்பனிட ஜெனரல் மனேஜர்.. உன்ர சம்பளம் என்பத்தையாயிரம்.. விளங்குதா தம்பி?" என்றார்.

அவனுக்கு இப்போது இருக்கும் ஒரே தேவை வேலை தான். குடும்பத்தின் எதிர்காலம் கண்முன்னே நிற்க. கொஞ்சமும் யோசிக்காமல் "ஓகே சேர்.. சொல்லுங்க என்ன செய்யனும்..?" என்றான் தேவ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி.. இந்த வேலய செய்ய வேண்டியவன் வேற பிரச்சினைல மாட்டிட்டான்.. காலைல இருந்து யோசிச்சிட்டு இருந்தன்.. எப்பிடி இத கொண்டு போய் சேர்க்கிற என்டு.. இங்க வந்ததில இருந்து உன்ர முகத்தில இருந்த டென்ஸன பாத்தன்.. உனக்கு வேலை தேவை.. சோ எனக்கு நீ

தேவை.." என்று கூறி தோள்களை குலுக்கி தேவ்வை ஒரு அதிகார பார்வை பார்த்தார் அவர். "சேர் இதில என்ன இருக்கு.. இத எங்க குடுக்கனும்.." என்றான் அவனும்.

"இந்த பக்கட்ல வைட் பௌடர் இருக்கு.. இத கொண்டு போய் நான் சொல்லுற ஆள்ட குடுத்திட்டு வரனும் நீ.. இத நீ செய்யிறதுக்குரிய கூலியும் வேலைக்கான அக்ரிமெண்ட் லெட்டரும் நீ திரும்பி வரும் போது ரெடியா இருக்கும்.." என சொல்லி தேவ்வினுடைய முகத்தை கூர்ந்து பார்த்தார்.

இப்பொழுது தான் தேவ்விற்கு புரிந்தது அவர் என்ன வேலை செய்ய சொல்கிறார் என்று. பக்கென்று இருந்தது அவனுக்கு. ஆனாலும் அவன் யோசித்தான்.

"தம்பி நீ செய்யாட்டி நான் வேற ஒருதன வைச்சு இத செய்வன்.. ஆனா உனக்கு இந்த வேலை வேணும் என்டா நீ இத செய்யதான் வேணும்.

புத்திசாலிதனமான என்ன பொலிஸ்ட மாட்டி விடலாம் என்டு எல்லாம் கனவு காணாத.. அது நடக்காது.. அதே மாதிரி இதை எடுத்திட்டு நீ வெளில போன வேலைய செய்து முடிச்சிட்டு தான் வரனும்..

இடைல ஏதும் வேற பிளான் பண்ணின என்டா பொருளோட சேர்ந்து நீ தான் பிடிபடுவ.. எனக்கு ஒன்டும் இல்ல.." என சொல்லிக் கொண்டே போனார்.

தீர்க்கமாக யோசித்தவன் ஒரு முடிவுக்கு வந்து. "சேர் எனக்கு இந்த வேல வேணும்.. இத எங்க குடுக்கனும் சொல்லுங்க.." என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மனிதர் தேவ்வுடைய கையில் ஒரு சிறிய பொதியை கொடுத்து விட்டு. அவன் அதை கொண்டு போய் சேர்க்க வேண்டிய இடத்தையும் குறிப்பிட்டார். அதோடு"நான் சொன்ன இடத்தில நீ 12.15க்கு நிக்கனும்.. 12.15க்கு பொருள நீ கை மாத்திடனும்.. இல்லாட்டி தானாவே நீ பொலிஸ்ட மாட்டிக்குவ.." என்றார்.

அவர் சொன்ன எல்லாவற்றையும் மனதில் பதித்துக் கொண்டு அவர் கொடுத்த பொதியை பெற்றுக் கொண்டு திரும்பி நடந்தவன் ஒரு நிமிடம் நின்று"நீங்க எனக்கு வேலை தராம ஏமாத்திட்டா.. நான் எப்பிடி உங்கள நம்பிறது.." என்றான் தேவ்சரண்.

அமைதியாக புன்னகைத்து "தம்பி இது என்ட சொந்த கம்பனி.. இதில எதுவும் பிழைச்சால் எனக்கும் கொஞ்சம் நஸ்டம் தான்.. சோ சின்ன நஸ்டத்த கூட நான் விரும்ப மாட்டன்.. குடுத்த வேலைய நீ சரியா செய்தா குடுத்த வாக்க நான் காப்பாத்துவன்.." என்றார் அவர்.வேகமாக அங்கிருந்து வெளியேறி பைக்கை ஸ்டார் பண்ணி முறுக்கினான். அது அவன் சொல்கேட்டு புயலென பாய்ந்தது பிரதான வீதியில்.

காலையில் நடந்தவற்றை நினைத்துப் பார்த்தவன்"நான் செய்யிறதில ஒரு பிழையும் இல்ல.. நியாய தர்மம் எல்லாம் பாத்தா என் குடும்பத்த யார் காப்பாத்துறது.." என தீர்க்கமான ஒரு சமாதானத்தை தனக்குத்தானே சொல்லிக் கொண்டு விரைந்தான் தேவ்.

அந்த நிறுவனத்தின் முதலாளி சொன்ன இடத்திற்கு சரியாக 12.15 க்கு வந்து சேர்ந்து விட்டான் தேவ். பைக்கை நிப்பாட்டி விட்டு அவனுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி தலையிலிருந்த ஹெல்மெட்டை கழற்றி விட்டு கொண்டு வந்த தொப்பியை தலையில் அணிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹலோ இன்டவியூ முடிஞ்சா.." என ஒரு குரல் கேட்டது பின்னாலிருந்து. திரும்பிப் பார்த்தான் தேவ் அங்கு ஒருவன் நின்றுகொண்டிருந்தான் தேவ்வை கேள்விகுறியாய் பார்த்தபடி. கிட்டத்தட்ட அவனுக்கும் தேவ்வினுடைய வயதாக தான் இருக்க வேண்டும் பார்க்க அப்படித் தான் இருந்தான்.

"கடவுளே இவனுக்கு என்ன கஸ்டமோ.. நாட்டில முழுப்பேரும் வேற வேல கிடைக்காம இந்த வேலையா தான் திரியிறானுகள் போல.." என தேவ் யோசிக்க வந்தவன் மீண்டும் ஒரு முறை "ஹலோ இன்டவியூ முடிஞ்சா.." என்றான்.

"செய்யிறது இல்லீகல் வேல.. இதுக்கு கோட் வேட் வேற.. ச்சேக்.." என மனதிற்குள் அலுத்துக் கொண்டு அந்த பொதியை எடுத்து அவன் கையில் வைத்து விட்டு அவசரமாக தலைக்கவசத்தை மாட்டிக்கொண்டு வேகமாக அங்கிருந்து கிளம்பினான் தேவ்.

திரும்பிப் பார்க்காமல் அங்கிருந்து வேகமாக வந்தவன் பைக்கின் வேகத்தை குறைத்து பெருமூச்சு விட்டான். இப்போது நிம்மதியாக இருந்தது அவனுக்கு. இவ்வளவு நேரமும் மூச்சுமுட்ட எங்கோயோ அடைந்து கிடந்த உணர்வு.

ஒருவித நிம்மதியுடன் மீண்டும் அந்த நிறுவனத்திற்கு வந்து சேர்ந்தான். அவன் உள்ளே வந்ததுமே வரவேற்பறையில் இருந்த பெண்" உங்கள இந்த வேலைக்கு செலக்ட் பண்ணி இருக்காங்க.. இது உங்கட அப்பொயிண்ட்மென்ட் லெட்டர்..' என சொல்லி ஒரு கவரை நீட்டி "சேர் உங்கள நாளைக்கு மீட் பண்ணுறதா சொன்னார்.. இந்த செக் உங்களுக்கு தர வேண்டியது.. இதையும் பிடிங்க.." என சொல்லி ஒரு காசோலையையும் நீட்டினாள். வாங்கிப் பார்த்தான் அந்த காசோலை முப்பதாயிரம் ரூபாய்க்கு எழுதப்பட்டு கையொப்பமிடப்பட்டிருந்தது.

இரண்டையும் பெற்றுக் கொண்டு வெளியே வந்தவனுக்கு மனதிற்குள் கொஞ்சம் உறுத்தலாகவே இருந்தது. ஆனாலும் வேலை கிடைத்துவிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதி அதற்க்கு மேலாக இருந்தது. பைக்கை ஸ்டார் பண்ணி கொண்டு நேராக அவனது வீட்டிற்க்கு பக்கத்தில் இருக்கும் டீ கடைக்கு வந்தான். "அண்ணா ஒரு டீயும் ரெண்டு சம்சாவும் தாங்க.." என்று சொல்லிவிட்டு கைதொலைபேசியை எடுத்து பேஸ்புக்கை தட்டினான்.

சுவாரஸ்யங்கள் கொட்டிக் கிடக்கும் இடமல்லவா இந்த முகப்புத்தகம். ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டு போனவன் சட்டென நிறுத்தி வாசித்தான் அந்த செய்தியை. "நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களுக்கு ஐஸ் போதை பொருள் விற்று வந்த இளைஞன் கைது" என்ற தலைப்பில் ஒரு செய்தி. அந்த செய்தியில் இருந்த கைது செய்யப்பட்ட இளைஞனை பார்த்ததும் தேவ்விற்க்கு தலைசுற்றியது கால்கள் தடுமாற சட்டென பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்தான். உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது. காலையில் தேவ்விடம் இருந்து பொருளை வாங்கிக் கொண்டு போன அதே இளைஞன் தான் அவன்.

குற்ற உணர்ச்சியில் குறுகிப் போனான் தேவ்கரண். "ச்சே.. என்ன வேலை செய்திட்டு வந்திருக்கன் நான்.. என்ர தங்கச்சியும் ஸ்கூல்ல படிக்கிறாளே.. வேல கிடைக்கல என்டு இப்பிடி ஒரு கேடுகெட்ட வேலைய செஞ்சிட்டு நிம்மதியா வேற வந்து நிக்கிறன்.." என மனதிற்க்குள் புழுங்கினான்.

கடைக்காரர் வந்து "என்ன தம்பி இப்பிடி வேர்த்து போய் முகமெல்லாம் வாடிப் போய் இருக்கு.. சாப்பிடலயா இன்னும்.." என்று அக்கறையோடு கேட்டு டீயை கொடுத்தார். அவனுக்கு

அவர் சொன்ன எதுவும் காதில் கேட்கவில்லை. மனம் அந்த செய்திலேயே நிலைத்தது. குற்றஉணர்ச்சியில் இருந்த பசியும் களைப்பும் போனது.

"தம்பி.." என்ற கடைக்காரரின் குரலுக்கு திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தவனுக்கு அப்போது தான் புரிந்தது நேரம் போனதே தெரியாமல் நீண்ட நேரமாக தான் யோசித்துக் கொண்டிருந்திருக்கிறேன் என்று எழுந்து சென்று பைக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்த கவரை எடுத்து வந்து அதில் இருந்த வேலைக்கான அனுமதிக் கடிதத்தையும் காசோலையையும் எடுத்து கிழித்து எரிந்து கொண்டிருந்த அடுப்பில் போட்டான்.

"என்ன தம்பி பழைய பேப்பரா.." என்றார் கடைக்காரர்.

"இல்ல அண்ணா தேவையில்லாத பேப்பர்.." என்று சொல்லிவிட்டு. கைதொலைபேசியை எடுத்து ஒரு இலக்கத்தை தட்டி அழைப்பை ஏற்படுத்தினான். எதிர்முனையில் குரல் கேட்டதும் "அண்ணா அந்த பக்ரில லோட் ஏத்துற வேலை இருக்கெண்டு சொன்னீங்களே.. இப்பவும் அதுக்கு ஆள் தேவையா..? என்றான். மறுபக்கம் பேசியவரின் பதிலைத் தொடர்ந்து " அண்ணா ஒரு நாளைக்கு ஆயிரத்தி ஐந்நூறா.. ஒரு ஆயிரத்து எண்ணூறுக்கு கதைச்சு

பாருங்களேன்.. ப்ளீஸ் அண்ணா.." சரி சரி ஓகே.. நாளைக்கு காலைல 8.30 க்கு வேலைல நிப்பன்.." என்று சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்தான்.

"டீ சூப்பர் அண்ணா.. தாங்க்ஸ்.." என்று கடைக்காரரிடம் சொல்லி பணத்தை கொடுத்துவிட்டு வீட்டை நோக்கி பைக்கை முறுக்கினான் தேவ்கரண்.

**(பெண்களின் குரல் – (இந்தியா) சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானம் காணாத வெண்ணிலா

"உனக்கென்ன சரோஜா மூன்டும் பொடியள்.. ஒரு கரச்சலும் இல்ல.. இஞ்ச பார் நான் உவள் ஒரு பெட்டய பெத்துபோட்டு.. உவளுக்கு சீதனம் குடுத்து கலியாணத்த கட்டி வைக்கிறதுக்குள்ள சீவன் போகுது.." என்று பக்கத்து வீட்டு சௌந்தலா அடிக்கடி அலுத்துக்கொள்ளும் போதெல்லாம் ஏனோ சரோஜாவுக்கு கண்களை கரித்துக்கொண்டு கண்ணீர் தான் வரும்.

வயது ஐம்பதை தாண்டி விட்டது ஆனாலும் வாழ்ந்த வாழ்க்கையில் ஏதோ ஒரு குறை மனதை நெருடிக்கொண்டே இருக்கிறது. என்ன பெரிய ஆண்பிள்ளைகளை பெற்று பெருமை கண்டுவிட்டாள் அவள். கொஞ்சம் ஏலாது என்று சாய்ந்தாலும் ஒரு வாய் தண்ணி தரக்கூட ஒருவரும் இல்லை அப்படியான நேரங்களில் எல்லாம் ஒரு பெண் பிள்ளையை பெற்றிருக்கலாமே என்று கணவனிடம் புலம்புவாள்.

அவளின் கணவனோ "விசரே உமக்கு.. பழைய கதைபெல்லாம் கதைச்சுக்கொண்டு.. பேசாம இரும்.. படுக்க போக முதல் தண்ணிய எடுத்தந்து வச்சிட்டு படும் எண்டு சொல்லி அலுத்து போயிட்டு.. இதுக்கு பொம்பிள பிள்ள வேணும் என்டு விசர் கத கதையாதேயும்.." என்பான்.

சரோஜாவும் சிவனேசனும் காதலித்து திருமணம் முடித்துக்கொண்ட போதும். அது பெற்றோரின் விருப்பத்தின் பேரிலேயே நடந்த திருமணம் என்பதால் வாழ்க்கை அவர்களுக்கு அவ்வளவு கஸ்டமாக இருக்கவில்லை. "நீ எப்பிடியோ செட்டில் ஆகிட்ட.. உன்ர அவர் லோயர்.. நீ ரீச்சர்.. பேந்தென்னடி குறை உனக்கு.." என்று அவளது தோழிகளும் கொஞ்சம் பொறாமைப்பட்டதுண்டு.

சரோஜாவுக்கு திருமணம் ஆன புதிதில் கணவனோடு கோவில் கடைத்தெரு என்று வெளியில் போகும் போதெல்லாம் குழந்தைகளை தூக்கி கொண்டு வரும் தம்பதியினரை பார்க்கையில் தானும் சீக்கிரமாக குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தோன்றும். அதிலும் கோவிலில் பட்டுப்பாவாடை போட்டுக்கொண்டு சின்ன கால்களில் கொலுசுச்சத்தம் சல்..சல்.. என்று கேட்க தாயின் கையை பிடித்துக் கொண்டு மற்ற கையால் பாவாடையை தூக்கி பிடித்துக் கொண்டு நடந்து வரும் பெண்

குழந்தைகளை பார்க்கும் போது சரோஜாவுக்கு ஆசை அணைமீறும். தான் பெண் குழந்தை ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று.

கோவிலுக்கு வந்தால் பெண்குழந்தை வேண்டும் என்று நேர்ந்துவிட்டு தான் போவாள். அவள் ஆசைப்படியே முதலில் கருவில் உருவானது பெண் குழந்தைதான். ஸ்கானிங் செய்து பார்த்த போது பெண்குழந்தை என்று வைத்தியர் சொன்னார். அவளுக்கு சொல்ல முடியாத மகிழ்ச்சி. ஆனால் வீட்டில் அவள் எதிர்பார்த்த அளவு மகிழ்ச்சி இருக்கவில்லை.

"எடி பிள்ள.. எனக்கும் மூத்தவன் பெடியன்.. உனக்கும் மூத்தவன் பெடியன் தானே.. உவளுக்கு மட்டும் என்ன உப்பிடி.. புருசன்ட உழைப்பெல்லாம் சீதனத்துக்கு தான் சேத்து வக்கோனும்.." என்று சரோஜாவின் அம்மம்மா தன் மகளிடம் புலம்பிக்கொண்டிருந்த போது அவளுக்கு அது பெரும் கவலையாக தான் இருந்தது.

"சும்மா இரன அம்மா.. அவள் என்ன செய்வாள்.. கடவுள் குடுத்தது எல்லாம் பிள்ள தான்.. பின்னுக்கு அவளுக்கு வயசு போன காலத்தில ஆரும் வேண்டாமோ அவள பாக்க.." என்று தன் தாயை சமாதானப்படுத்துவதே சரோஜாவின் தாயின் வேலையாக இருந்தது. சரோஜா நாளுக்கு நாள் தன் வயிற்றில் வளரும் மகள் மீது அதிக ஆசையும் எதிர்பார்ப்பும் வைக்கத் தொடங்கினாள். நல்லூர் கோவில் திருவிழாவுக்கு போக வெளிக்கிட்ட போது "சரோ.. இண்டைக்கு திருவிழா கடசி நாளடி பிள்ள.. நல்ல நித்துப்பெட்டி பின்னி வைச்சிருப்பாங்கள் கடையல்வழிய.. ரெண்டு நீத்துபெட்டி வாங்கிகொண்டு வா.. மலிவா வச்சிருப்பாங்கள்.." என்று சிவநேசனின் தாய் சொல்லி அனுப்பிய போது சரி என்று தலையாட்டிவிட்டு போனவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு போனதும் பிறக்க போகும் தன் மகளுக்கு கலர் கலரா கண்ணாடி வளையல்களும் பூ வைச்ச அலஸ்பாண்டும் இன்னும் பல அலங்கார பொருட்களையும் வாங்கிக் கொண்டு சனக்கூட்டத்தில் இருந்து வெளியே வந்தவளுக்கு அப்போது தான் ஞாபகம் வந்தது தாய் நீத்துப்பெட்டி வாங்க சொன்னது. பையை திறந்து துளாவினாள் ஒரு சதமும் இல்லை. கணவனிடம் "இஞ்ச அப்பா ஒரு நூறுவா இருந்தா தாங்கோவன்.. நீத்துப்பெட்டி வாங்க மறந்திட்டன்.." என்று கேட்க

"மாத்தின காசு இல்ல சரோ.. நீத்துப்பெட்டி வாங்க திரும்பவும் உந்த சனத்துக்குள்ள போக போறியோ.. பிறகு கடைல வாங்கலாம்.." என்று சொல்லி அவளை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டான் சிவநேசன்.

நீத்துப்பெட்டி இல்லாமல் வீட்டிற்கு வந்து மாமியாரிடம் அன்று இரவு முழுவதும் வாங்கிகட்டிக் கொண்டாள். இப்படியிருக்கையில் ஏழாவது மாதம் தொடங்கியிருந்தது சரோஜாவுக்கு. ஒரு நாள் கிணத்தடியில் உடுப்பு அலசிவிட்டு ஊற்றிய சவர்க்கார தண்ணியில் வழுக்கி விழுந்தவளுக்கு வயிற்றுப் பகுதியில் பெரிய அடி. அதிக ரத்தப்போக்கு. அவளுக்கு ஏதுவும் அடியில்லை ஆனால் அவள் கனவு ஆசை எல்லாவற்றையும் வாரிச்சுருட்டிக்கொண்டு வயிற்றில் இருந்த குழந்தை அழிந்து விட்டது. அவளால் அந்த இழப்பை தாங்கிக் கொள்ள முடியவில்லை. ரொம்பவும் மனமொடிந்து போனாள்.

வீட்டிலுள்ளவர்களின் அன்பும் மருந்தும் சேர்ந்து அவள் உடலும் மனமும் குணமடைந்தாள். அதன் பின் ஒரு வருடத்திலேயே மீண்டும் கருவுண்டாகி முதல் குழந்தை பிறந்து விட்டது. பிறகு ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு வருட இடைவெளியில் மூன்றும் ஆண் பிள்ளைகளை பெற்றாள். ஆனாலும் ஒவ்வொரு முறை கருவுறும் போதும் அது பெண் குழந்தையாக இருக்க கூடாதா என்ற ஏக்கம் அவளை வாட்டியது. ஆனால் மிஞ்சியது ஏமாற்றம் மட்டுமே. அதற்கு பிறகு பிள்ளைகள் அவர்களின் படிப்பு அவர்களின் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வாழ்க்கையில் பொறுப்புகள் கூடி வாழக்கை ஒரு இயந்திரம் போல் இயங்க தொடங்கி விட்டது.

ஆனாலும் அக்கம் பக்கத்தில் சாமத்திய வீட்டுக்கு யாரும் அழைத்து அங்கு போனால் திரும்பி வரும் போது மனம் முழுவதும் ஒரு பாரத்தை சுமந்து கொண்டு தான் வருவாள். தன் வயதொத்த பெண்கள் தமது பெண் பிள்ளைக்கு சேலைகட்டி பூச்சூட்டி அழகுபார்த்து சாமத்தியவீடு செய்வதை பார்க்கும் போது தன்னைமீறி பொங்கி வரும் அழுகையை சில நேரங்களில் அவளால் கட்டுப்படுத்த முடிவதில்லை. வீட்டுக்கு வந்ததும் தகரப்பெட்டிக்குள் பத்திரமாக பூட்டி வைத்திருக்கும் அழிந்து போன அவளின் கனவை எடுத்த ஏக்கமாக பார்ப்பாள். முதல் முதலில் உருவான கரு அதுவும் பெண் குழந்தை. வயிற்றில் உருவான கருவை ஸ்கான் போட்டோ எடுத்து கொடுத்த போது அதை அடிக்கடி எடுத்து பார்த்து சந்தோசப்படுவாள். அந்த பிள்ளை இல்லையென்று

ஆனவுடன் தன் பிள்ளைக்கு வாங்கிய அலங்கார பொருட்களையும் அந்த படத்தையும் கவனமாக அந்த தகரப்பெட்டிக்குள் போட்டு பூட்டி வைத்திருந்தாள்.

சரோஜாவின் மகன்களும் சரி கணவனும் சரி அவளுக்கு வாழ்வில் எந்தவொரு குறையும் வைக்கவில்லை. மகன்களின் திருமணம் கூட சரோஜாவின் விருப்பப்படி தான் நடந்தது. பல நேரங்களில் தாயின் முகத்தில் காணும் ஏக்கமும் சோகமும் ஏன் என்று அந்த பெடியளுக்கு புரிவது கடினமாக இருந்தது. “அம்மா ஏனம்மா.. ஒரு மாதிரி இருக்கிறியள்.. உடம்புக்கு ஏதும் செய்யிதே.. டொக்டரிட்ட போவமே..” என்று பாசத்தோடும் கவலையோடும் கேட்கும் மகனிடம் என்ன சொல்வாள் அவள். நீங்கள் மூன்று ஆண்பிள்ளைகள் இருந்தும் எனக்கு ஒரு பெண் பிள்ளையின் பாசம் இல்லையென்ற கவலை இருக்கிறது என்று சொல்லி மகன்மாரின் மனதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைப்பதா? அப்படி சொன்னால் தன்னை கண்ணைபோல் காக்கும் தன் பிள்ளைகளின் பாசத்தை குறைவாக கூறுவது போல் ஆகி விடாதா?

"ஒண்டும் இல்லையடா தம்பி... இந்த நாரிக்கொதி பெரிய கரச்சலாக்கிடக்கு..

ஒரு இடத்தில கொஞ்ச நேரம் இருக்க ஏலுதா..." என்று எதையாவது சொல்லி சமாளித்து விடுவாள். மகளை போல் இருந்து கவனித்துக் கொள்ளும் மருமகள்கள் அமைந்த போதும் மருமகள் மகளாக மாட்டாளே. மருமகள் தேனீர் தர ஒரு நிமிடம் பிந்தினாலும் கூட என்ர மகளென்டா இப்படி செய்வாளா.. என்ன இருந்தாலும் இவள் மருமகள் தானே என்று நினைப்பது மாமியார் போஸ்டிங்கில் இருக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்கும் மன பிராந்தி.

சரோஜாவுக்கும் அப்படி தான். மகள் என்ற ஒரு விடயம் அவளுக்கு நோய் போல் அவள் மனதை பலவீனமாக்கி அவளை அழித்துக் கொண்டிருந்தது. அவளின் கவலையை யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. சிவநேசன் கூட மனைவியின் மனதை அறியவில்லை.

அன்று வீட்டில் சரோஜா மட்டுமே இருந்தாள். சிவநேசனின் சினேகிதர் ஒருவனின் மகளின் திருமண வீட்டிற்கு அனைவரும் போயிருந்தனர். அங்கு போனாலும் சிவநேசனின் சினேகிதரின் மனைவி தன் மகளை பற்றி ஏதாவது பெருமை பேசக்கூடும் அதை தன்னால் தாங்க முடியாது என்ற எண்ணத்தில் "எனக்கு கால் ரெண்டும் ஒரே

நோவாக்கிடக்குதப்பா.. நீங்கள் எல்லாரும் போட்டு வாங்கோவன்.." என்று அவர்களை அனுப்பி வைத்தாள்.

எல்லோரும் போன பின் தகரப்பெட்டியை எடுத்துக்கொண்டு வந்து வெளியில் விறாந்தையில் உட்கார்ந்தாள். அதை திறந்து பார்த்தாள். எத்தனையோ வருடங்களுக்கு முன் நல்லூர் கந்தன் ஆலய வளவில் இருந்த கடையில் வாங்கிய கலர் கலரான வளையல்கள் கண்ணை கூசின. வளையல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து கையில் வைத்து கிலுக்கி பார்த்தாள். "நல்லூர் கந்தா.. உனக்கு கூட என்ர பிள்ளய காப்பாத்த அண்டைக்கு மனமில்லாம போயிட்டு.. என்ன.." என்று நினைத்து விரக்தியோடு புன்னகைத்துவிட்டு. அந்த படத்தை எடுத்து பார்த்தாள். ஏதோ ஒரு வடிவத்தில் கருப்பும்வெள்ளையுமான நிறத்தில் இருந்தது. அவளது வயிற்றை ஸ்கான் பண்ணி எடுத்த படம். கண்கள் மங்கின சரோஜாவுக்கு. கீழே நிலத்தில் இருந்தவள் பக்கத்தில் இருந்து கதிரையின் கைபிடியில் ஊன்றி எழுந்திருக்க முயன்றால் முடியவில்லை. அப்படியே பொத்தென்று விழுந்து உட்கார்ந்து விட்டாள் முடியாமல். "அம்மா எழும்புங்கோவன்.." என்று சின்ன குரல் அவள் காதுகளின் தேனாய் பாய்ந்தது. அவளால் பேச முடியவில்லை பார்வை மங்கலாக இருந்தது. முன்னால் யாரோ நிற்பது போல் இருந்தது அவளுக்கு தன் சாயலில்.

"அம்மா.. நிலத்தில இருக்காதேங்கோ.. வாங்க உள்ள கட்டில்ல வந்து படுங்கோவன்.." என்று சொல்லி அவள் கையை யாரோ பற்றி தூக்கினார்கள். மென்மையான அந்த கைகளின் ஸ்பரிஸம் அவளை சிலிர்க்க வைத்தது. சரோஜா மெல்ல அந்த கைகளின் உதவியுடன் மெல்ல எழுந்து உள்ளே அறைக்குள் போய் கட்டிலில் படுத்தாள். கண்கள் மேலும் மங்கிக் கொண்டு வந்தது. எதிரில் தெரிந்த அவள் சாயலிலான அந்த உருவம் மறைந்து கொண்டே போனது. அவளும் கண்களை மூடினாள்.

நண்பன் வீட்டு திருமண நிகழ்வு முடிந்து சிவநேசனும் பிள்ளைகளும் வீட்டுக்கு வந்த போது சரோஜா உறங்கிகொண்டிருந்தாள். நீண்ட நேரமாகியும் சரோஜா எழுந்திருக்கவில்லை. மாமியாரை எழுப்பவென்று போன சரோஜாவின் மூத்த மருமகள் கூச்சலிட்டாள். எல்லோரும் ஓடி வந்து பார்க்க அப்போது தான் தெரிந்தது சரோஜா நிரந்தரமாக உறங்கி விட்டிருந்தாள். அவளின் கடைசி மகள் தாயின் கையில் எதையோ பற்றி பிடித்தபடி இருப்பதை கண்டு அதை கையிலிருந்து மெல்ல எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனிடம் கொடுத்தான். "என்னப்பா இது.. அம்மா.. இத வச்சிக்கொண்டு படுத்திருக்கிறா... ஆர்டப்பா.. இது..? என்றான் அழுதபடி.

"கடவுளே.. என்ர ராசாத்தி.. இவ்வளவு காலமா இத நினைச்சு ஏங்கிட்டு இருந்தியா நீ.. நானொரு விசரன்.. உன்ர மனசில இருக்கிறத என்னன்டு கூட.. கேக்காம இருந்திட்டனே.." என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதான் சிவநேசன்.

அந்த ஆடம்பரமான பெரிய வீடு முழுவதும் அழுகை சத்தம் எதிரொலித்தது. சரோஜாவின் கையிலிருந்த படத்தை தவிர அவள் மட்டுமே ஆசையாய் பார்த்து பாதுகாத்த அந்த தகரப்பெட்டியும் அதிலிருந்த அலங்காரப்பொருட்களும் அங்கு இருக்கவில்லை.

**(மித்திரன் வாரமலர் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு ரகசியமே!

தினமும் நாள் இப்படிதான் போய்க்கொண்டிருக்கிறது. இன்றோடு நான்கு மாதங்கள் முடிந்து விட்டது. "ச்சே.. இண்டைக்காவது தைரியமா போய் கதைக்கனும்.." என்று நினைத்துக் கொண்டே ஸ்கூட்டியை கிளப்பினாள் லீனா.

கோவிலுக்கு வந்து சுவாமியை கும்பிட்டுவிட்டு அவனைத் தேடி கண்களை அலைய விட்டாள். அவனைக் காணவில்லை. ஏமாற்றமாக இருந்தது. கோவில் தூண் ஒன்றிற்கு பக்கத்தில் உட்கார்ந்தாள்.

நான்கு மாதங்களுக்கு முன் இதே போல் ஒரு நாளில் தான் அவனை முதன்முதலில் சந்தித்தாள் லீனா. அந்த அலுவலகத்தில் வேலை கிடைத்து முதல் நாள் வேலைக்கு போகும் போது தான் அலுவலகத்திற்கு பக்கத்தில் இருந்த கோவிலைக் கண்டாள். சரி போய் பிள்ளையாரை பார்த்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டே போய்விடலாம் என்று போனாள்.

குழாயில் காலைக் கழுவிக்கொண்டு திரும்பும் போது எதிரில் வந்தவனோடு மோத பார்த்து சுதாகரித்து நின்றுவிட்டாள். ஆனால் அவன் கண்களின் ஈர்ப்பில் விழுந்தே விட்டாள். முகத்திற்க்கு மாஸ்க் அணிந்திருந்தான். நேர்த்தியாக உடை அணிந்திருந்தான். ஒரு கனம் அவன் கண்களின் ஈர்ப்பு அவளை நிலைகுலையத்தான் செய்தது. அவனோ சற்றுவிலகி நடந்து குழாயடியில் போய் கால்களை கழுவிவிட்டு கோவிலுக்குள் நுழைந்தான்.

அடுத்தநாள் அலுவலகம் வரும்போது கோவிலைத்தாண்டி வர அவளுக்கு மனமில்லை. "அவன் இன்றும் வருவானா..?" என்று மனம் நச்சரித்தது. ஸ்கூட்டியை கோவில் பக்கம் திருப்பினாள். மனம் றெக்கை இல்லாமல் சிறகடித்தது. அவனை கோவில் வாசலில் கண்டபோது.

இப்படியே பிள்ளையாரை பார்க்க போகிறானோ இல்லையோ அவனை பார்க்கவென்றே தினமும் கோவிலுக்கு போனாள். அவள் மனம் அறிந்தோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவோ அந்த தேவிக்கு தேவன் தரிசனம் தினமும் கிடைத்தது. லீனா கோவிலுக்குள் போனதும் முகக்கவசத்தை கழட்டிவிட்டு சுவாமி கும்பிடுவாள். அவன் ஒரு நாளும் முகக்கவச்தை கழட்டியதில்லை. ஆனால் கண்களால் சிரிப்பான் அவளைப் பார்த்து. அந்த கண்களின் ஈர்ப்பும் சிரிப்பும் அவளை' இம்சித்தது.

எப்படியாவது அவனுடைய முகத்தை முழுதாக பார்க்கவேண்டும் என்று அவளுக்கு தவிப்பாகவே இருந்தது. கற்பனை பண்ணி பார்த்தாள் மீசை வைத்திருப்பானா? அதை முறுக்கி விட்டிருப்பானா? தாடி வைத்திருப்பானா? என்றெல்லாம். கற்பனை செய்து பார்த்தாள். ஆனால் தினமும் அவன் அவளை பார்த்து கண்களாலேயே சிரிப்பான். "ப்பா.. படுபாவி.. வதைக்கிறடா மனச.." என்று மனதிற்குள்ளே அவனை செல்லமாக திட்டிக்கொண்டு அலுவலகம் வந்து விடுவாள்.

அதையும் தாண்டி சில நேரம் "பிள்ளையாரப்பா.. ப்ளீஸ்.. அவன மாஸ்க்க கழட்ட வைங்களேன்.. கண்ணாலயே சிரிச்சு.. மயக்கிறான்.." என்று விக்னேஸ்வரனிடமும் கெஞ்சிப் பார்த்தாள் அவரும் அவளை கண்டுகொள்ளவே இல்லை. இப்படியே நான்கு மாதங்கள் போய் விட்டது.

இன்று எப்படியாவது அவனிடம் பேசியே ஆக வேண்டும் என்ற முடிவோடு கோவிலுக்கு வந்திருந்தாள் லீனா. ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது. அவன் வரவில்லை. கண்கள் லேசாக எரிந்து கொண்டு அழுகை வந்தது அவளுக்கு. கோபமும் வெறுப்பும் போட்டிபோட்டுக்கொண்டு மனதை வதைக்க வேகமாக எழுந்து ஒரு அடி எடுத்து வைத்தவள் அப்படியே நின்று விட்டாள்.

அதற்கு மேல் ஒரு அடி எடுத்து வைக்க முடியாதபடி அவன் நின்றான் அவள் எதிரில். அவள் அவன் கண்களை பார்க்கவும் கண்ணாலேயே சிரித்தான். அவள் அவனிடம் பேச வாயெடுக்கவும் அவள் பேசும் முன் தன்னுடைய முகத்திலிருந்த மாஸ்க்கை கழட்டினான். லீனாவுக்கு கனவு போல் இருந்தது. அவன் மாநிறமும் இல்லை அதைவிடவும் கொஞ்சம் கருமை. மீசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்து அதை அழகாக முறுக்கி விட்டிருந்தான். தாடி வைத்திருந்தான். நான்கு மாதங்களாக இரவு பகலாக அவள் எண்ணங்களை ஆட்கொண்டு அடிமையாக்கிவிட்டிருந்த அவன் முகத்தை முழுமையாக அதுவும் இவ்வளவு பக்கத்தில் பார்க்க அவளுக்கு மூச்சு முட்டியது.

அவன் தனது தொலைபேசியில் எதையோ பாரக்கும்படி அவளிடம் நீட்டினான். வாங்கி அதில் டைப் பண்ணப்பட்டிருந்ததை வாசித்தாள். லீனா. அதில் அவன் பிறப்பிலேயே பேசமுடியாத மாற்றுதிறனாளியாக பிறந்தவன் என்றும் தற்போது விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றுவதாகவும் தனது பெயர் மிதுரன் எனவும் குறிப்பிட்டிருந்தான்.

தொலைபேசியை அவனிடம் கொடுத்துவிட்டு "தெரியும்.." என்றாள். அவன் புரியாமல் குழப்பத்தோடு அவளை பார்த்தான். "இந்த கோவில்ல அர்ச்சனை டிக்கட் எழுதி தாற ஐயா சொன்னார்.. நீங்க கதைக்க மாட்டீங்க என்டு.." என்றாள் லீனா.

அவன் முகம் வாடிவிட்டது. அவள் தலையை சரித்து அவன்முகத்தை பார்த்து "நா.. ஒன்டு சொல்லனும்.. கேட்டுட்டு போவிங்களா.." என்றாள் கெஞ்சலாக. அவன் ஆம் என தலையாட்டவும் கையை பிசைந்து கொண்டு தயங்கி தயங்கி "ம்ம்ம்... இப்டி அழகா மீசையெல்லாம் வச்சிட்டு.. இம்பிரஸிவா சிரிச்சிட்டு.. கண்ணா... ம்ம்ம்.. கண்ணாலயே பேசிட்டு இருக்கீங்களே.. அப்டி என்கிட்யும் கண்ணாலயே கதைக்கலாமே லைப் லோங்.." என்றாள்.

ஒருவழியாக இவ்வளவு நாள் நெஞ்சுக்கும் தொண்டைக்கும் இடையில் நின்று அவளை வதைத்த வார்த்தைகளை அவனிடம் சொல்லிவிட்டு நிமிர்ந்து அவனை பார்த்தாள். இப்பொழுதும் அவன் கண்கள் தான் புன்னகைத்தது ஆனால் காதலோடு. அவன் கையிலிருந்த மாஸ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து அவன் முகத்தில் போட்டுவிட்டு "மாஸ்க்க போட்டுக்குங்க.. இந்த அழகன நான் மட்டும் ரசிச்சுக்கிறன்.." என்றாள் அவள்.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரைப் போத்தல் கள்ளு

தீபாவளிக்கு இன்னும் ஒரு நாள் இருக்கிறது. நாளை விடிந்து மறுநாள் ஆனால் தீபாவளி. ஒரு வாரமாக முயற்ச்சி செய்தும் இன்னும் வாங்கவில்லை. நாளைக்கு எப்படியாவது வாங்கிவிட வேண்டும். நாளைக்கு மட்டும் தான் ஸ்கூல். பிறகு ஸ்கூலும் லீவு விட்டிடும் என்று தனக்குள்ளேயே யோசித்துக் கொண்டு தூக்கம் வராமல் படுத்திருந்தாள் கவிநயா.

போர்வையை விலக்கி தலையை தூக்கி எட்டிப்பார்த்தாள். குளிர் தலைக்கு ஏறாமல் காதுகள் இரண்டையும் துணியால் இறுக மூடி மனைவியின் பழைய சேலை ஒன்றை போர்த்தியபடி குறட்டைவிட்டு உறங்கிக் கொண்டிருந்தான் சுந்தரம். கவிநயாவை பெற்றவன். தூக்கத்தில் புரண்டு திரும்பிபடுத்த தகப்பனின் முகத்தை பார்த்த கவிக்கு மனதில் ஏனோ இனம்புரியாத கவலை ஒட்டிக்கொண்டது.

நினைவு தெரிந்தநாள் முதலாகவே அவளது உலகம் அவன் தான். எதுக்கென்றாலும் அவளுக்கு "அப்பா" மட்டும் தான். பாடசாலையில் சக பிள்ளைகள் தங்கள் தாயை பற்றி பேசும் போது கவிநயாவுக்கு தனக்கு தாய் இல்லையே என்று ஒரு நாளும் தோன்றியதில்லை. மெல்ல எழுந்துபோய் உள்ளங்காலில் குளிர் ஏறாதவாறு போர்வையை இழுத்து தகப்பனின் கால்களை போர்த்திவிட்டு வந்து படுத்தாள். "எப்பிடிசரி நாளைக்கு அப்பாக்கு தீவாளிக்கு பரிசு வாங்கிடனும்.." என்று தீர்மானமாய் யோசித்தவள் அதை வாங்குவதற்குரிய வழியையும் கண்டுபிடித்துவிட்ட திருப்தியில் உறங்கிப் போனாள்.

கவிநயாவுக்கு இப்போது பதினேழு வயதாகிறது. உயர்தரத்தில் படித்துக்கொண்டிருக்கிறாள். அவள் இந்த உலகில் அறிந்த எல்லாமே "அப்பா" என்ற ஒரு வார்த்தையில் தான். கவிநயாவின் தாய் அவளுக்கு நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதாக இருக்கும்போது இறந்துவிட்டாள். திருமணமாகி ஐந்தே வருடங்களில் வாலிப வயதில் நான்கு வயது பெண்குழந்தையுடன் மனைவியை பறிகொடுத்துவிட்டு நின்ற சுந்தரத்திடம் இன்னொரு திருமணம் செய்துகொள்ளும்படி எல்லோரும் வற்புறுத்தியபோதும் பிடிவாதமாக மறுத்துவிட்டு மகளை தாயைப்போல் இருந்து வளர்த்தெடுத்தான்.

சுந்தரமும் அவனது மனைவி தேவிகாவும் திருமணம் முடித்து ஒரு வருடத்திற்குள் கவிநயா பிறந்தாள். சுந்தரத்திற்கு எஸ்டேட்டில் வேலை. காலையில் மலைக்கு வேலைக்கு போவான். மாலை நேரங்களில் பக்ரியில் வேலைக்கு போவான். கடும் உழைப்பாளி. அந்த லயத்தில் கடைசி வீடு தான் சுந்தரத்தினுடையது.

லயத்தில் உள்ள வீடுகளில் ஒரு அறையும் ஒரு விறாந்தையும் மட்டுமே இருக்கும். சிலர் முன்னால் அல்லது பின்னால் என்று சுவரை இடித்து கொஞ்சம் அறையை பெரிதாக்கியோ அல்லது இன்னொரு சின்ன அறையையோ கட்டிக் கொள்வார்கள். வருமானம் இருப்பவர்கள் அப்படி செய்து கொள்வார்கள் இல்லாதவர்கள் அந்த சிறிய பெட்டிக்குள்ளேயே வாழ்க்கையை ஓட்டிக்கொள்வார்கள். சுந்தரத்தின் வீடு லயத்தின் கடைசி வீடு என்பதால் லயத்தின் முடிவில் இருந்த சிறிய வெற்றிடத்தை எஸ்டேட் நிர்வாகத்திடம் அனுமதி பெற்று ஒரு அறையாக கட்டியிருந்தான். வீட்டின் பக்கவாட்டில் உடைத்து வாசலாக்கி இரண்டு அறைகளும் ஒரு விறாந்தையுமாக ஆக்கி இருந்தான்.

"ஏங்க நானும் தோட்டத்தில பதியிறனே.. நானும் வேலைக்கு போனா நீங்க இப்பிடி அந்திக்கு பக்ரி வேலைக்கு போய் கஸ்டப்பட தேவல தானே.." என்று தேவிகா கேட்டபோது "நீ வேலக்கி போன புள்ளய ஆரு பாக்கிற.. மாடா ஓட்டம் ஒழைச்சாலும் நான் நிம்மதியா வாழ என் புள்ளயும் நீயும் நல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கனும்.. இந்த வேலக்கி போறேன் மலைக்கு போறேன்னு இன்னொருவாட்டி பேச்ச எடுத்தன்னு வச்சுக்க.. தொடய்பக்கட்ட பிஞ்சிடும்.." என்று கோபமாகவே மறுத்து விட்டான் சுந்தரம்.

அப்படியெல்லாம் அவன் பொத்தி பொத்தி பாதுகாத்தும் ஆசையாய் கட்டிக்கொண்ட மனைவியை அவனால் காப்பாற்ற முடியவில்லை. மலை உச்சியில் இருக்கும் முனியாண்டி சாமி கோவிலில் நேர்த்திவைக்க போன தேவிகா மலையிலிருந்து இறங்கி வரும்போது கால்இடறி விழுந்து பெருத்த காயங்களோடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். ஒரு வாரத்தில் குணமாகி வீடுவந்தாள். குணமாகிவிட்டாள் என்று சுந்தரமும் நிம்மதியாய் இருக்க உள்காயங்கள் சற்று தாமதமாக வேலை செய்யதொடங்க திடீரென ஒருநாள் தலைவலிக்கிறது என்று படுத்தவள் அப்படியே நிரந்தரமாக படுத்து உறங்கிவிட்டாள்.

சுந்தரத்துக்கு எல்லாம் இருண்டுவிட்டது போல இருந்தது பித்துபிடித்தவன் போல உட்கார்ந்து விட்டான். நாட்கள் போக போக வீட்டில் வந்து தங்கி இருந்து குழந்தையை பார்த்துக்கொண்ட உறவினர்களின் நச்சரிப்பு அதிகரித்தது. பிள்ளையை சாட்டாக வைத்து அவனை இன்னொரு திருமணத்திற்கு கட்டாயப்படுத்த தொடங்கினார்கள். "ஏன் ஆம்பிளக்கி புள்ள வளக்க தெரியாதா? என் புள்ளய நானே வளக்கிறன்..என் பொண்டாட்டி இருந்தா அவள எப்பிடி சீரும் சிறப்புமா வளப்பாளோ அதவிட நல்லா வளக்கிறன் நா.. சாவு வீட்டுக்கு வந்தீங்க.. எட்டு முப்பதொன்னு எல்லாம் முடிஞ்சு போச்சு.. எல்லாரும் கௌம்புங்க.. என் மக பெரியவளானா தகவல் சொல்லுறேன் முற செய்ய வாங்க.. இப்ப கௌம்புங்க.." என்று முகத்திலடித்தாற்போல பேசி எல்லோரையும் வீட்டைவிட்டு அனுப்பினான் சுந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலாக மகளை கொண்டு போய் பிள்ளைகளை பராமரிக்கும் "பிள்ளை காம்பரா"வில் விட்ட போது இதயமே வெடித்துவிடும் போல் இருந்தது சுந்தரத்துக்கு. பட்டாம்பூச்சி போல அவன் கைக்குள்ளும் காலுக்குள்ளும் ஓடி திரியும் மகளை அள்ளி அணைத்து முத்தமிட்டு "அம்மாடி.. இங்க ஆயா கூட இருந்து வெளாடனும்.. அங்க பாரு நெறய பேர் இருங்காங்க குட்டி குட்டி பாப்பா எல்லாம் வெளயாடுது பாத்தியா..அவங்ககூட இரும்மா.. அய்யா அந்திக்கு ஓடி வந்திடுவன்.." என்று சொல்லி கொஞ்சி பிள்ளைகளை பராமரிக்கும் அந்த பிள்ளை காம்பராவுக்கு பொறுப்பான பெண்ணிடம் மகளை விட்டுவிட்டு வேலைக்கு போனான். மனைவி இறந்த பிறகு சுந்தரம் மாலை நேர வேலைக்கு போவதில்லை. மலைக்கும் முடிந்தளவு கவ்வாத்து வெட்ட தான் போவான் கொழுந்து பறிக்க போவதில்லை. கவ்வாத்து வெட்ட போனால் எப்படியும் இரண்டு மணியோடு வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்துவிடலாம்.

மனைவியின் இழப்பை தாங்க குடியையும் பழக்கப்படுத்திக்கொண்டான். வேலை முடிந்து வரும்போது அரை போத்தல் கள்ளு வாங்கிகொண்டு வந்துவிடுவான். காலம் போக போக சுந்தரத்தின் வாழ்க்கை ஒரு இயந்திரமாக சுழலத் தொடங்கியது. காலையில் எழுந்து வீடு வாசலை பெருக்கி குழாயடியில் போய் குடத்தில் தண்ணீர் பிடித்து வந்து வைத்துவிட்டு பிள்ளையினதும் தன்னுடையதும் உடைகளை

துவைத்து காய போட்டு விட்டு மகளை எழுப்பி குளிப்பாட்டி தலைவாரி தயார்படுத்தி அதன் பின் ரொட்டியை சுட்டு மகளுக்கும் ஊட்டிவிட்டு தானும் சாப்பிட்டுவிட்டு தனக்கும் மகளுக்குமாக தனித்தனியே சாப்பாடு கட்டிக்கொண்டு வீட்டைப் பூட்டி விட்டு மகளை தூக்கிகொண்டு ஓட்டமும் நடையுமாக போய் மகளை பிள்ளை காம்பராவில் விட்டுவிட்டு சரியான நேரத்துக்கு மலைக்கு போய் விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் உணவு வேலை எல்லாம் முடிந்து மகளை தோளில் போட்டு தட்டி தூங்கவைத்துவிட்டு மதியம் வாங்கிவந்து வைத்த கள்ளை எடுத்து குடித்துவிட்டு சாப்பிடாதி சாப்பிடாதபாதி என்று அப்படியே போட்டுவிட்டு மனைவியின் சேலையை எடுத்து போர்த்திக் கொண்டு தூங்கிவிடுவான்.

இப்படியே வாழ்க்கை போக மகளும் பாடசாலை போக தொடங்கிவிட்டாள். முன்பெல்லாம் பிள்ளை காம்பராவில் கொண்டுபோய் விட்டவன் இப்போது மகளை ஒரு தோளிலும் புத்தகப்பையை ஒரு தோளிலும் சுமந்துகொண்டு போய் பாடசாலையில் விடுவான். வளரவளர கவிநயாவுக்கு தந்தையின் மனவேதனை ஓரளவு புரிந்தது. அப்போதும் கூட இப்படி ஒரு மனிதனை தனியாகவிட்டு பொறுப்பில்லாமல் செத்து போய்விட்டதாக தாய் மேல் அவளுக்கு கோபம் வந்தது. கள்ளு குடித்துவிட்டு சாப்பிடாமல் சுவரோடு சாய்ந்தபடி இருந்து யோசித்துக்கொண்டிருக்கும் தகப்பனை பார்க்கையில் அவளுக்கு அழுகை வரும். "அப்பா சாப்பிடுங்கப்பா.. நானும் சாப்பிடாம தூங்கிடுவன்..காலைல ஸ்கூல் போக மாட்டேன்.." என்றெல்லாம் மிரட்டி தகப்பனை சாப்பிட வைத்துவிடுவாள்.

கவிநயா படிப்பில் கெட்டிக்காரி. தான் நன்றாக படிப்பது மட்டுமே தன்னுடைய தந்தைக்கு தான் செய்யும் பெரிய கைமாறு என்பதை அவள் நன்றாகவே புரிந்து வைத்திருந்தாள். வீட்டு வேலைகளையும் தானே செய்து தகப்பனுக்கு கொஞ்சம் ஓய்வையும் கொடுத்தாள். பாடசாலையில் அவள் ஒவ்வொரு விடயத்திலும் வெற்றிபெறும் போதும் அதிபர் சுந்தரத்தை கூப்பிட்டு பாராட்டுவார். ஊருக்குள் கூட சிலர் சொல்லுவார்கள் "சுந்தரத்த போல புள்ள வளக்க எவனுக்கு தெரியும்.." என்பார்கள். தன் பிள்ளையை பராமரிப்பதில் கூட ஒரு குறையும் இருந்துவிடக்கூடாது என்பதற்காக கவிநயா தூங்கிய பின் குடித்துவிட்டு படுப்பது சுந்தரத்தின் வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார் வாழ்க்கை எப்படி மாறினாலும் இயற்கை மாறுவதில்லையே. சூரியன் தன் கதிர்களை பரப்பி பனித்துளிகளை தட்டி எழுப்பினான். பொழுது விடிந்து விட்டது. எழுந்து வீட்டுவேலைகளை முடித்துவிட்டு தகப்பன் கொடுத்த உணவை சாப்பிட்டுவிட்டு புத்தகப்பையை எடுத்துக்கொண்டு பாடசாலைக்கு கிளம்பினாள் கவிநயா.

அந்த லயத்து மாணவர்கள் பாடசாலைக்கு ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்திற்கு நடந்துதான் போக வேண்டும். அந்த எஸ்டேட்டில் இருக்கும் ஒரேஒரு அரசாங்க பாடசாலை அது. ஒவ்வொரு வருடமும் பல மாணவர்கள் அந்த பாடசாலையிலிருந்து சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்வார்கள். கவிநயாவின் இலட்சியமும் அதுவாக தான் இருந்தது. தான் பல்கலைக்கழகத்திற்கு தேர்வாக வேண்டும் என்பது. கொஞ்சதூரம் நடந்ததும் தோழியிடம்

"ஏய் நீ போய்ட்டே இருடி.. நான் சலூனுக்கு போய்ட்டு வெரசா வந்திடுறன்.." என்றாள் கவிநயா.

"சலூனுக்கா.. நீ எதுக்கு அங்க போற.. பயலுக மாதிரி முடிவெட்ட போறியா.." என்று நக்கல் பண்ணி சிரித்தாள் அவள் தோழி.

"சீ போ லூசு.. அழகு மாமாக்கு அப்பா சாப்பாடு குடுத்து விட்டுச்சி.. அத குடுத்திட்டு வாறன்.." என்று சொல்லிவிட்டு தோழியின் பதிலை காதில் வாங்காமல் வீதியின் இடையில் மலைக்கு நடுவே இருந்த படிகளில் இறங்கி ஓடினாள் கவிநயா.

அழகுராஜ் சுந்தரத்தின் சிநேகிதன். சிறுவயது முதல் அவர்கள் நண்பர்கள். அவனுக்கும் திருமணம் முடிந்து மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். அழகுராஜிடைய பிள்ளைகள் கவிநயாவை விட ஏழெட்டு வயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவர்கள். சுந்தரத்தின் எல்லா நல்லதுகெட்டதிலும் அவனுக்கு துணையாக இருக்கும் ஒரு நண்பன். கவிநயாவுக்கு அழகுராஜ் மீதும் அதிக பாசம் உண்டு அழகு மாமா என்று சிறுவயது முதல் தந்தையை போலவே அவனோடும் அன்பாக இருப்பாள். அவனுக்கும் நண்பனின் மகள் மீது தன் பிள்ளைகளை விட பாசம் அதிகம். தாயில்லாமல் வளர்ந்தபிள்ளை என்று அவளுக்கு அதிக செல்லமும் அவனிடம்.

காலையில் வந்து கடையை திறந்து சுத்தப்படுத்திவிட்டு சுவாமிபடத்திற்கு ஊதுபத்தி கொழுத்தி வைத்துக்கொண்டிருந்த அழகுராஜ் கவிநயாவை கண்டதும் "என்னாத்தா.. காலங்காத்தால ஓடியார.. உங்க அப்பன் எங்க? ஏதும் பிரச்சினையா.." என்றான் கலக்கமாக.

"ஐயோ.. அதெல்லாம் இல்ல மாமா.. எனக்கு ஒரு ஹெல்ப் வேணும்.. செய்வியளா..?" என்றாள்.

"எம்புள்ளைக்கி செய்யாமலா..? சொல்லு மாமா என்ன செய்யனும்" என்றான் அழகு.

கவிநயாவுக்கு எப்படி கேட்பதென்று தெரியவில்லை. தயக்கமாக இருந்தது. ஆனாலும் தனக்கு இருக்கும் ஒரே வழி இதுதான். நேரம் வேறு போகிறது. பாடசாலைக்கும் போக வேண்டும். ஒரு வழியாக தைரியத்தை வரவழைத்துக்கொண்டு "அர போத்தல் கள்ளு வேணும்.. வாங்..கி.. தருவியளா..?" என்றாள் வார்த்தைகளை மென்றுவிழுங்கி.

அவள் சொன்னது காதில் விழுந்ததுதான் தாமதம் "அடி கழுத.. என்ன பழக்கம் இது.. உங்கப்பன் படாதபாடுபட்டு உன்ன வளக்கிறான்.. நீ… என்று அழகுராஜ் கோபமாக பேசிக்கொண்டே போக அவனை இடைமறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ மாமா.. அப்பாக்கு தான்.. லூசு மாமா நானா கள்ளு குடிக்கிறேன்..? என்றாள் முறைத்துக் கொண்டு.

"உங்கப்பன் என்னைக்கி குடிக்காம படுக்கிறான்.. ஏதோ புதுசா நீ வாங்கி குடுக்கிற.. அந்த குடிகாரபயலுக்கு ஏக்கனவே குடிக்கிறது பத்தாதாமா.." என்றான் அழகுராஜ்.

தந்தையை பற்றி அவன் அப்படி கூறவும் கவிநயாவுக்கு சுளீரென்று கோபம் வர "மாமா.. எங்கப்பாவ பத்தி எதுனாச்சும் பேசினீங்களோ.. அப்புறம் நல்லாயிருக்காது பாத்துக்குங்க.. எங்கப்பா கஸ்ட்டப்பட்டு வேல செய்யிது.. அது குடிக்கிது.. உங்களுக்கு என்னவாம்..? என்றாள் கவிநயா.

"சரி ஆத்தா கோவப்படாத.. அர போத்தல் கள்ளுதானே இரு நா வாங்கி தாறேன்.." என்ற அழகுராஜிடம்

"இல்ல மாமா நா சல்லி சேத்து வைச்சிருக்கன்.. அப்பாக்கு நான் சேத்து வைச்ச சல்லில தான் வாங்கனும்.." என்றாள் கவி.

"சரி குடு நா வாங்கி வைக்கிறேன்.. அந்திக்கு சலூன்ல பயலுக நிப்பானுக.. நீ ஸ்கூல் முடிஞ்சு போகக்குள்ள வந்து எடுத்திட்டு போ.." என்றான் அழகுராஜ்.

கீழ் லயத்திலுள்ள பெட்டிக்கடையில் அவசர தேவைக்கு வீட்டு சமையல் சாமான்கள் வாங்க கவியை தான் அனுப்புவான் சுந்தரம். அதில் வரும் ஐந்து பத்து மீதிகளை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக பத்திரமாக சேர்த்து வைத்திருந்தாள். ஒரு வாரத்திற்க்கு முன் தான் அதை எல்லாம் சேர்த்து எடுத்து கடையில் கொடுத்து தாள்களாக மாற்றி வைத்திருந்தாள்.

நூறும் ஐம்பதுமாக தாள்களை புத்தகப்பையிலிருந்து எடுத்து அழகுராஜிடம் கொடுத்து "ஐநூத்தம்பது ருவா இருக்கு மாமா.. இது போதுமா.." என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ... அது போதும்.. நீ வெரசா கௌம்பு.. ஸ்கூல்ல பெல் அடிச்சிடுவாங்க.." என்று சொல்லி கவியிடம் இருந்து பணத்தை வாங்கி சட்டைப்பையில் வைத்தான் அழகுராஜ்.

இப்பொழுது தான் கவிநயாவுக்கு நிம்மதியாகவும் திருப்தியாகவும் இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்னே அவளை டவுனுக்கு கூட்டிக்கொண்டு போய் தீபாவளிக்கு உடுப்பு எடுத்துக் கொடுத்திருந்தான் சுந்தரம் அதோடு கூடவே போனவருடம் அவள் கேட்ட வெள்ளிக்கொலுசையும் நகைகடைக்காரரிடம் சொல்லி வைத்து கொஞ்சம் கொஞ்சமாக பணத்தை கட்டி இப்போது வாங்கி கொடுத்திருந்தான். சுந்தரம் இனிப்பு பண்டங்கள் பெரிதாக சாப்பிடுவதில்லை என்றாலும் எல்லா பண்டிகைக்கும் மகளுக்காக கடைசி இரண்டு வகையான பலகாரமாவது செய்து விடுவான்.

தனக்கென்று எதையும் செய்யாமல் எல்லாவற்றையும் தன் மகளுக்காகவே செய்யும் தன் தகப்பனுக்கு சின்ன சின்ன சந்தோசங்களையாவது கொடுக்க வேண்டும் என்பதே கவியின் ஆசை. அதில் ஒரு முயற்சி தான் இந்த தீபாவளி பரிசு.

"அய்யாக்கு என்ன வாங்கி குடுக்கலாம்.." என்று யோசித்து பார்த்தாள். தனக்குபிறகு தன் தகப்பனின் வாழ்வில் அதிகம் செல்வாக்கு இந்த கள்ளு போத்தலுக்கு தான் இருக்கிறது.

குடிப்பது உடலுக்கு கூடாது என்றாலும் அது தான் அவன் நிம்மதியான உறக்கத்துக்கு காரணம் என்பதை கவி புரிந்து வைத்திருக்கிறாள். இந்த தீபாவளிக்கு நல்ல கறிசோறு தானே சமைத்து அரை போத்தல் கள்ளும் வாங்கி கொடுத்து அய்யாவை வயிறார சாப்பிட வைக்கவென்று தீர்மானித்தாள். இப்பொழுது ஒரு வழியாக அரை போத்தல் கள்ளை வாங்கியும் விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இரவு அவளுக்கு தூக்கமே வரவில்லை. எப்படா விடியும் என்றிருந்தது. நாளை விடியபோகும் தீபாவளிக்காக அவள் காத்திருக்கவில்லை . நாளை தன் பெற்றவனின் முகத்தில் காணப்போகும் மகிழ்ச்சிக்காக அந்த இரவை கடக்க பொறுமையில்லாமல் பாடுபட்டுக்கொண்டிருந்தாள் சுந்தரத்தின் செல்ல மகள்.

**முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்லைன் வகுப்பு

நேரம் காலை 6.00 மணியை தாண்டிக் கொண்டிருந்தது. வசந்தி சமையலறையில் பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தாள். அப்போது தான் நித்திரையிலிருந்து எழும்பி வந்த கணவனின் கையில் தேனீர் கோப்பையை கொடுத்து விட்டு

"இஞ்ச அப்பா.. புட்டு அவிச்சு வச்சிருக்கிறன்.. அடுப்பில கறி கிடக்கு கொஞ்சம் வத்தினதும் இறக்கி வையுங்க.. எனக்கு நேரம் போகுது.." என்று சொல்லிக் கொண்டு கழுவி வைத்த பாத்திரங்களை எடுத்து அடுக்கினாள்.

"சரி நீ வெளிக்கிடு.. நான் பாக்கிறன்.." என்று சொல்லி கொண்டு தேங்காய் திருவலையை இழுத்து அடுப்பின் பக்கத்தில் போட்டுக் கொண்டு அமர்ந்தான் கலையரசன்.

"குழம்பு நல்லா வத்த விட்டுடாதீங்க.. பிறகு கறி காணாது எல்லாருக்கும்.." என்று சொல்லிவிட்டு சமையலறையில் இருந்து வெளியேறவும்

"வசந்தி ஒருக்கா கேட்டு பாரன் இன்டைக்கு.. பிள்ளய பாக்க பாவமா இருக்கு.. எங்கட கஸ்டத்துக்கு அதுகள் என்ன செய்யுங்கள்..

"உனக்கு கேக்க ஒரு மாதிரி இருக்கெண்டா நான் வேணுமெண்டா.." என்று வாக்கியத்தை அவன் இழுக்கவும்

"கேக்கிறது சரியப்பா.. ஆனா சம்பளக்காசு வெறும் பத்தாயிரம் தான்.. இந்த நாசமா போன கொரோனாவால உங்களுக்கும் வேல இல்ல..

தந்த நிவாரணமும் இன்டையோட முடிஞ்சிது.. கடசியா கிடந்த சோயாமீற் பக்கற் தான் இப்ப குழம்பு வச்சிருக்கிறன்..

நாளைக்கு கறிக்கு என்ன செய்யிறது.. பிறகு சாப்பாட்டுக்கு என்ன செய்யிறது..?" என்றாள் கவலை தோய்ந்த குரலில் வசந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சொல்வதும் சரி தான். பிள்ளைகளை எப்படி பட்டினி போட முடியும்? ஒன்றும் பேசாமல் கலையரசன் ஒரு பெருமூச்சோடு எரிந்து கொண்டிருக்கும் அடுப்பை விரக்தியோடு பார்த்தான்.

கலையரசன் வசந்தி தம்பதியினருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் ஒரு ஆண் பிள்ளை என மூன்று பிள்ளைகள். அதில் மூத்தவள் இந்த வரும் சாதாரணதர பரீட்சை எழுதவிருக்கிறாள்.

அவன் மேசன் தொழில் செய்பவன். தனது வருமானத்திற்கேற்ப குடும்பத்தை பொறுப்பாக நடாத்திச் செல்வதில் அவனுக்கு திருப்தி தான் அதனால் தான் மேலதிக வருமானம் தேவை என்று யோசித்ததும் இல்லை மனைவியை வேலைக்கு அனுப்ப வேண்டும் என்றும் நினைத்ததில்லை அவன்.

என்னதான் வருவதை வைத்து வாழ்க்கையை ஓட்டினாலும் சில நேரங்களில் சேமிப்பின் அவசியத்தை வாழ்க்கை உணர்த்தி விடுகிறது. நாட்டில் ஏற்பட்ட தொற்றுநோய் காரணமாக போக்குவரத்து தடை லொக்டவுன் என்று வறுமைக்கோட்டின் அடியில் வாழும் மக்களை பசியும் பட்டினியும் விரட்டி அடித்தது.

கலையரசனுக்கு அநேகமாக வெளி மாவட்டங்களில் தான் மேசன் வேலைகள் கிடைக்கும். போய் தங்கியிருந்து வேலை செய்துவிட்டு வருவது தான் வழக்கம். ஆனால் நாட்டில் பயணத்தடை போடப்பட்ட பின் அவனுக்கும் வேலை இல்லை. பிள்ளைகளுக்கு பாடசாலையும் இல்லை.

எல்லாம் முடங்கினாலும் மனித வயிறு முடங்கி விடாதே. வருமானம் இல்லை ஆனால் பசி இருந்தது.

இப்படியிருக்க வசந்தி கலையரசனிடம்

"இங்க.. பக்கத்து ஒழுங்கையில ஒரு பாங்க் மனேஜர் இருக்கிறாரே அப்பா.. அவங்கட வீட்டுக்கு வேலைக்கு ஆள் வேணுமாம்.. முதல் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவ லீவு எடுத்து வீட்ட போனவவாம்.. இப்ப இந்த நிலமையில திரும்பி வரேலாம அங்கயே நிக்கிறாவாம்..

நான் வேணுமென்டா அவங்கட வீட்ட வேலைக்கு போகவா..." என்று கேட்டாள்.

முதலில் கலையரசன் அதற்கு உடன்படவில்லை. ஆனால் மனைவி சொன்ன நியாயமான காரணங்களும் பிள்ளைகளை பட்டினி போட்டுவிடக்கூடாது என்ற எண்ணமும் அவனை சம்மதிக்க வைத்தது.

மாதம் பத்தாயிரம் சம்பளம் காலையிலும் மாலையிலும் வந்து வீட்டு வேலைகள் சமையல் வேலைகள் என்று எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என அந்த வீட்டில் சொன்னார்கள்.

வசந்தி யோசிக்காமல் சரி என்றாள். வேலை அதிகம் என்றாலும் பரவாயில்லை அவளுக்கு மாதம் அந்த பத்தாயிரம் ரூபாய் காசு வேண்டும்.

வேலைக்கு சேர்ந்து இரண்டாவது மாதம். போன மாதம் கிடைத்த பத்தாயிரம் ரூபாவில் வீட்டுசெலவுகளை பாத்தாச்சு. இப்படியே கலையரசன் மீண்டும் வேலைக்கு போக தொடங்கும் வரை சமாளிக்கலாம் என்று கணவனும் மனைவியும் கலந்து பேசியிருந்தார்கள்.

ஆனால் அரிசி விலை கூடினாலும் சரி பெற்றோல் விலை கூடினாலும் சரி இவ்வளவு ஏன் கடலில் கப்பல் தீப்பிடித்தாலும் கூட அதன் பாதிப்பு என்னவோ வறுமைக்குள் வாழும் மக்களுக்கு தான்.

தொடர்ந்து பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதால் ஒன்லைனில் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. கலையரசனின் மூத்தவள் இந்த வருடம் சாதாரணதர பரீட்சை எழுதுகிறாள். அதனால் அவள் ஒன்லைன் வகுப்புகளில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

என்ன செய்வது வீட்டில் சாப்பாட்டு பிரச்சினையே பெரும் பிரச்சினையாக இருக்க அன்ரொயிட் கைபேசிக்கு எங்கே போவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளை பார்க்க வசந்திக்கு கவலையாக இருந்தது. நல்லா படிக்கிற பிள்ளை போன் இல்லாத காரணத்தால் பரீட்சையில் சித்தியடையாமல் போய் விடுவாளோ என்று மனம் பதைபதைத்தது.

வசந்தி வேலை செய்யும் வீட்டில் அவள் எஜமானருடைய பிள்ளை ஒன்லைன் வகுப்புகளில் கலந்து கொள்வதை அவள் கண்டிருக்கிறாள்.

அந்த பிள்ளை தான் பாவிக்கும் கைபேசியை அதிக நேரம் பாவிக்க வசதிப்படவில்லை அதனால் வேறு நல்ல கைபேசி வாங்கித்தரும்படி தாயிடம் கேட்டுக் கொண்டிருந்தது.

அந்த கதை வசந்தியின் காதில் தற்செயலாக விழ அப்படியானால் அந்த பிள்ளைக்கு புதிதாக கைபேசி வாங்கினால் இந்த பழைய கைபேசியை தனது ஒரு மாத சம்பளத்தை கழித்துக் கொண்டு தனக்கு தரும்படி கேட்டால் என்ன என்று தோன்றியது அவளுக்கு.

அதைப்பற்றி வீட்டில் போய் கலையரசனிடம் சொன்னாள். அவனும் அதை ஆமோதித்தான். ஆனால் அதை எப்படி கேட்பது அவர்களிடம்? எப்படியும் அந்த கைபேசி ஒரு முப்பத்தைந்து நாற்பதாயிரம் வரும். என்ன தான் பாவித்த பொருளாக இருந்தாலும் பத்தாயிரம் ருபாய்க்கு அதை எப்படி கேட்பது.

ஒரு வேளை கேட்டபின் தன் மீது நம்பிக்கையிழந்து வேலையும் இல்லை உனக்கு நீ வீட்ட போ என்று சொல்லிவிடுவார்களோ என்றும் பயமாக இருந்தது வசந்திக்கு.

எப்படியும் கேட்டுதான் ஆக வேண்டும். பிள்ளை படிக்க வேண்டும். வேறு வழியில்லை. அதை தான் இன்று அவள் வேலைக்கு வெளிக்கிடும் போது கலையரசன் ஞாபகப்படுத்தினான்.

சரி இன்று கேட்டுதான் பார்த்துவிடுவோமே என்று வேலைகளை எல்லாம் முடித்து விட்டு வீட்டு எஜமானியிடம் போய் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா.. பழைய போன் ஏதும் இருந்தா தாறீங்களா? மகளுக்கு ஒன்லைன்ல வகுப்பு நடக்குது.. ஆனா போன் இல்லாம பிள்ளைக்கு படிப்பு இல்லாம போகுது..

"சும்மா தர வேண்டாம்.. இந்த மாச சம்பளத்த கழிச்சிட்டு தாங்க.." என்றாள் வசந்தி தயங்கி தயங்கி.

"அய்யாட்ட கேக்கனும் வசந்தி.. பொறு பாத்து சொல்லுறன்.." என்றாள் வசந்தியின் எஜமானி.

"சரிங்க அம்மா.. ஒருக்கா கேட்டு சொல்லுங்க.. வேல எல்லாம் முடிஞ்சிது.. நான் வெளிக்கிடுறன்.." என்று அனுமதி வாங்கிக் கொண்டு

தன்னோடு அழைத்து வந்திருந்த தன் மகளையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு கிளம்பினாள் வசந்தி.

அன்றிரவு சாப்பிட்டுவிட்டு பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்தாள் வசந்தி. அவளது கடைசி மகன் தயங்கி தயங்கி தாயிடம் வந்து

"அம்மா இதில அக்கா படிக்கலாம் தானே.." என்று சொல்லி கைபேசி ஒன்றை நீட்டினான் தாயிடம்.

அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"தம்பி யாரிட்ட போனடா இது?.. யார் தந்தது..? என்றாள்.

"அம்மா.. நீங்க வேல செய்யிற வீட்ட ஒரு அக்கா இருக்கிறாவே.. அவ இந்த போன வெளிலயே வச்சிட்டு போனவ.. நான் எடுத்திட்டு போய் கேட்டன் அக்கா இது உங்களுக்கு வேணாமா என்டு..

அதுக்கு அவ.. அந்த போன் சரியில்ல.. அங்கால வை.. என்டவ.. அதான் எங்கட அக்கா படிக்கலாம் தானே என்டு எடுத்திட்டு வந்திட்டன்.." என்று சுவாரஸ்யமாக ஒரு கதையை சொன்னான் வசந்தியின் இளையவன்.

வசந்திக்கு கால்கள் நிலத்தில் நிற்கவில்லை. தலை சுற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ என்ர பிள்ளை களவெடுக்கிற அளவுக்கா நான் அவன வளத்திருக்கிறன்.. என்று புலம்பினாள். சின்ன பிள்ளை என்றும் பாராமல் மகனை போட்டு அடித்தாள் வசந்தி.

தன் வளர்ப்பு பிழைத்து விட்டதே இனி அந்த வீட்டு மனிதர்களின் முகத்தில் எப்படி முழிப்பது? இனி எனக்கு வேலை தருவார்களா? வருமானத்துக்கு எங்கு போவது?

என்றெல்லாம் தன் இயலாமையை நினைத்து அவள் மனம் படபடத்தது. வசந்தி மகனை அடிப்பதை கண்டு கலையரசன் ஓடி வந்து தடுத்தான்.

கலையரசன் தடுத்தும் கேளாமல் மகனின் கையை பிடிந்து இழுத்துக் கொண்டு அந்த இரவு நேரத்தில் தான் வேலை பார்க்கும் வீட்டுக்கு போனாள்.

கதவைத் தட்டினாள். வீட்டு எஜமான் கதவை திறந்தார். அந்த இரவு நேரத்தில் வசந்தி மகனுடன் அங்கு வந்து நிற்பதைக் கண்ட அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன வசந்தி இந்த நேரத்தில.. ஏதும் பிரச்சினையா..? மாஸ்க் கூட போடாமலுக்கு சின்ன பொடியன கூட்டிட்டு வந்திருக்கிற..? என்று விசாரித்தார்.

"அய்யா.. மன்னிச்சிடுங்க.. என்று கண்கள் கலங்கியபடி தன் மகன் செய்ததை அவரிடம் சொன்னாள்.

எல்லாவற்றையும் கேட்ட அவர். "மகன கூட்டிட்டு உள்ள வா.." என்றார்.

அவர்களை உள்ளே அழைத்து அமர வைத்து

"என்ன வசந்தி இது.. அவன் சின்ன பொடியன்.. விளக்கமில்லாம இந்த போன எடுத்திட்டு வந்திருக்கிறான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்காக அவன் களவெடுத்த என்டு போட்டு அடிச்சு.. இந்த நேரத்தில கூட்டிட்டு வாற.. என்ன இது..? " என்று வசந்தியை சமாதானபடுத்தி பேசினார்.

"அந்த அக்கா அவக்கு வேண்டாமெண்டு சொன்னதால தான் எங்கட அக்காவுக்கு படிக்கலாம் தானே என்டு எடுத்தன்.. நான் களவெடுக்கேல அம்மா.." என்று விம்மியபடி தாயிடம் கெஞ்சினான் இளையவன்.

"பிள்ளைக்கு படிக்க போன் வேணும் என்டு கேட்டிருக்கலாம் தானே வசந்தி.. நான் ஏதும் ஏற்பாடு பண்ணி தந்திருப்பன் தானே..

இந்தா இந்த போன எடுத்திட்டு போய் மகளிட்ட குடு.." என்று அவர் கைபேசியை கொடுக்கவும்.

தயங்கி தயங்கி அதை வாங்கியபடி "அய்யா இந்த மாச சம்பளத்த போனுக்கு வச்சுக்கொள்ளுங்க.." என்றாள்.

"நீயும் உன்ர கதையும்.." என்று புன்னகைத்து விட்டு

"மாசம் மாசம் ரெண்டாயிரம் போனுக்கு கழிச்சிட்டு எட்டாயிரத்த வாங்கிக்க.." என்றார் வசந்தியின் எஜமான்.

அவளுக்கு ஏதோ தான் பெரிதாக சாதித்தது போல் இருந்தது.

கைபேசியை வாங்கி கையில் இறுகப்பற்றி பொத்திக் கொண்டாள். "நன்றி ஐயா.. நான் வெளிக்கிடுறன்.." என்று சொல்லிவிட்டு

மகளைத்தூக்கி கொஞ்சிக்கொண்டு நடந்தாள் வீட்டை நோக்கி.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு

அன்று விடுமுறை நாள். ரேணுகாவுக்கு விடுமுறை நன்றாக தூங்கி கொண்டிருந்தாள். கைபேசி சிணுங்கியது போர்வையை விலக்கி எடுத்துப் பார்த்தாள். அவளுடைய தோழி ரெபேக்கா அழைப்பில் இருந்தாள். அழைப்பை எடுத்து காதில் வைத்து

"ஹலோ ஹப்பி ஈஸ்டர்டி.." என்றாள் ரேணு

"தாங்ஸ்டி.. நீ எங்க நிக்க..?" என்றாள் ரெபேக்கா

"வீட்டதான்.. இன்னும் எழும்பலடி.. ஆமா நீ சேர்ச்க்கு போகலயா..?" என ரேணு கேட்க

"வெளிக்கிட்டன்டி.. அம்மா ஆக்கள் போயிட்டாங்க.. நேத்து தைக்க குடுத்த சாறிபிளவுஸ் சரியில்லடி.. அந்த ஹூசு மனிசி ஒழுங்கா தைக்கல.. அத அஜஸ்ட் பண்ணி வெளிக்கிட நேரம்போயிட்டு.. இப்ப பைக் ஸ்டார்ட் வருதில்ல.." என்றாள் ரெபேக்கா.

"நேரம் என்னடி.. எட்டு மணி ஆகுதேடி.. ம்ம்ம.. பொறு முகத்த கழுவி உடுப்பு மாத்திட்டு வாறன்.." என்று சொல்லி அழைப்பை துண்டித்துவிட்டு வேகமாக எழும்பி தயாராகி நண்பியை சேர்ச்சுக்கு கொண்டு போய் இறக்கி விட்டு வருவதாக தாயிடம் சொல்லிவிட்டு தனது ஸ்கூட்டியை ஸ்டார்ட் பண்ணிக்கொண்டு கிளம்பினாள் ரேணுகா.

ரேணுகாவின் குடும்பம் ஒரு சாதாரண நடுத்தரவர்க்கம். அம்மா அப்பா அண்ணா அவள் என்று சிறிய குடும்பம். அப்பா கூலி தொழிலாளி. தாங்கள் படிக்காவிட்டாலும் ஏதோ தங்களால் இயன்றதை செய்து பிள்ளைகள் இருவரையும் படிக்க வைத்துவிட்ட திருப்தி ரேணுகாவின் தகப்பனுக்கு இருந்தது. ரேணுகாவின் தமையன் பிரதேச செயலகத்தில் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறான். ரேனுகா ஒரு தனியார் வங்கியில் வேலை செய்கிறாள். ஆடம்பரம் இல்லாவிடினும் அளவான நிம்மதியான வாழ்க்கை. வீட்டு ஆட்களை தவிர்த்து ரேனுகாவின் இன்பம் துன்பம் என்று எல்லாவற்றிலும் கூடவே இருக்கும் ஒரு உறவு என்றால் அது தோழி ரெபேக்கா தான்.

ரெபேக்காவின் வீட்டை அடைந்தவள் அவளை ஏற்றிக்கொண்டு பைக்கை முறுக்கினாள்.

"ஏய் பிளவுஸ் கொஞ்சம் நல்லா இல்லா தான்.. ஆனா சாறி சூப்பரா இருக்குடி.. நீ கொஞ்சம் உடம்பு தானே அதான் நல்லா இருக்கு.." என்றாள் ரேனு

"நான் குண்டா இருக்கன்ற என்ன.. துரோகி.. நீ மெல்லிசா இருக்கன்டு கதைக்கிறா.. ம்ம்ம்.. சரி..சரி.." என்று தோழியை வம்பிழுத்தாள் ரெபேக்கா.

"போடி குண்டம்மா.. நான் என்ன சொல்லுறன்.. நீ என்ன சொல்லுற.." என்றாள் ரேனு

"அது சரி.. நேத்து பிரதீபன் வீட்ட வந்தவன்டி.. அண்ணாட்ட ஏதோ கதைக்க வந்தான் போல.." என்று ரெபேக்கா கூறவும் ரேனுவின் கைகள் தானாகவே ஸ்கூட்டியின் வேகத்தை குறைத்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு

"அதுக்கு நான் என்ன செய்ய..?" என்றாள் ரேனு

"ஓஹோ.. நீ வேணுமெண்டா பாரன் ஒரு நாளைக்கு உங்கட வீட்ட வந்து நிப்பான்.. நான் ரேனுவ விரும்புறன்.. அவள எனக்கு கலியாணம் முடிச்சு தாங்க.. என்டு கேப்பான் பாரு.." என்று சொல்லி சிரித்து விட்டு ரேனுவை பதில் பேச விடாமல் தானே பேசினாள் ரெபேக்கா

"ஆனா அவன் நல்ல பொடியன்டி.. நம்மட பொடியள பாரு அரசாங்க வேல வேணும் எண்டு ரோட்டுல நிண்டு கத்திட்டு கிடக்கானுவள்.. ஆனா அவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரு அவனும் யூனிவர்சிட்டி முடிச்சிட்டு தானே வந்தவன்.. படிச்சத வைச்சு சொப்ட்வெயார் டெவலப்பிங் கம்பனி எண்டு ஸ்டார் பண்ணினான். நம்மட பட்ச்ல மற்ற பொடியனுவள் கூட மட்டக்களப்புல இந்த பிஸ்னஸ் சரிவரா மச்சான் என்டானுவள்... இப்ப அவன்ட ஒப்பிஸ பாத்தியா.. அந்த பில்டிங்ல பாதி அவன்ட ஒப்பிஸ் தான்.. ஆறு பேர் வேல செய்றாங்க அவன்ட்ட.. அண்டு போனனே நான்..." என்று அவள் சொல் முடிப்பதற்குள் அவளை இடைமறித்து

"நீ எதுக்கு அங்க போன.." என்றாள் ரேணுகா

"ஆஆஆ.. அவன மாப்பிள பாக்க.. லூசு.. எங்கட ஒப்பிஸ்ல சிஸ்டம் ப்ராப்ளம்.. அதான் அத பத்தி கதைக்க போனன்.. ஆனா உண்மையாடி இவ்வளவு காலத்தில நான் அவனிட்ட கண்டது ஒன்டுதான்.. நான் ஜீஸஸ் மேல சத்தியமா சொல்லுறன்.. பிரதீபன் உன்ன லவ் பண்ணுறான்.. அத நான் நிறைய தடவ அவன்ட அக்டிவிட்டீஸ்ல கண்டிருக்கன்.." என்று ரெபேக்கா சொல்லவும் சரேலென பிரேக் போட்டு பைக்கை நிப்பாட்டினாள் ரேணுகா.

"ஏய் என்னடி.." என்று ரெபேக்கா புரியாமல் கேட்கவும்

"ஆ...ஆஆ.. பைக்ல பெட்ரோல் இல்ல.. கத முட்ட.. சேர்ச் வந்திட்டு லூசு.. இறங்கு.." என்றாள் ரேணுகா.

"ஆமா என்ன.. தாங்ஸ்டி.. ப்ரேயர் முடிய வீட்ட போய் கேக் எடுத்திட்டு வாறன்.. " என்று சொல்லி ரெபேக்கா புன்னகைக்கவும்

"ஆமா இப்ப தான் ஆறு மணிடி.. இனி தான் உனக்கு ப்ரேயர் தொடங்க போகுது.. போய்ச்சேரு அங்க எல்லாம் இன்னேரம் முடிஞ்சிருக்கும்.. "என்று சொல்லி சிரித்தாள் ரேணுகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு நகர் பகுதிக்குள் அமைந்திருந்தது அந்த தேவாலயம். தேவாயல வளாகத்தை சுற்றியும் வீதியின் இருமருங்கிலும் மோட்டார் பைக்குகளும் கார்களும் நிறுத்தப்பட்டிருந்தது. உயிர்த்தஞாயிறுதின ஆராதனைக்கு வந்திருந்த மக்களால் தேவாலயம் வண்ணமயமாக நிரம்பி வழிந்தது. சிறுவர்கள் பல வண்ண பட்டாம் பூச்சிகள் போல தேவாலய வளாகத்தினுள் ஓடி திரிந்தனர்.

அதையெல்லாம் பார்த்து ரசித்தபடி தோழியை தேவாலய வாசலில் இறக்கிவிட்டு பைக்கை திருப்பிக்கொண்டு விரைந்தாள் ரேணுகா. கொஞ்சதூரம் வந்திருப்பாள் திடீரென ஒரு பெருஞ்சத்தம் கேட்டது. சட்டென பைக்கை பிரேக் போட்டு நிறுத்தினாள். அவள் மட்டுமல்ல அந்த வீதியில் நின்ற அனைவருமே சத்தம் வந்த இடத்திற்கு ஓடினார்கள்.

அங்கு கண்ட காட்சி அனைவரின் ரத்தத்தையும் உறையச்செய்தது. அவ்விடத்தில் ஒரே மரணஓலமாக இருந்தது தேவாலயத்தின் சுவர்கள் நொறுங்கி விழுந்திருந்தன. மனித உடல்கள் சிதறிப்போய் கிடந்தன. சிலர் குற்றுயிராய் துடித்துக்கொண்டு கிடந்தார்கள். பூவும் பிஞ்சும் என பாரபட்சம் எதுவும் இல்லாமல் பல உயிர்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தன. காயங்களோடு உயிர்பிழைத்தவர்கள் தட்டுத்தடுமாறு தம் உறவுகளை தேடிக்கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் சிதறிக்கிடந்த உடல்களை வாரி எடுத்து தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு கதறினார்கள்.

சற்று நேரத்தில் அம்பியூலன்ஸ் வண்டிகளும் போலிஸ் வண்டிகளும் அவ்விடத்தில் வந்தடைந்தன. வேகமாக செயற்பட்டு காயமடைந்தவர்களை அம்பியூலன்ஸ் வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள். போலிஸார் அங்கிருந்த சிலரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். "சேர்.. நான் ஹயர் கொண்டு வந்தன் சேர்.. அவடத்தில ஆட்டோவ விட்டுத்து நிக்கன் திடீரென்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டு வெடிச்சபோல சத்தம் சேர்.. ஓடி வந்து பாத்தா.. இப்பி... இப்பிடி சிதறிக்கிடக்கு..." என்று ஒருவர் போலிஸ் அதிகாரியிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

"நாங்கள் இப்போது மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் நின்று கொண்டிருக்கிறோம்.. இன்றையதினம் உயிர்த்தஞாயிறு விசேட திருப்பலி இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை இவ்விடத்தில் பாரிய குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது..." என கையில் மைக்கை பிடித்தபடி கமராவுக்கு முன் நின்று சிலர் ஊடகங்கள் வழியாக செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவ்விடத்துக்கு வந்த ரேனுகாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சிதறிக்கிடந்த மனித உடல்களையும் சுவர்களிலும் தளபாடங்களிலும் தெறித்துகிடந்த இரத்தத்தையும் பார்க்கையில் தலைசுற்றியது அவளுக்கு அடிவயிற்றிலிருந்து குமட்டிக்கொண்டு வந்தது. "ஐயோ.. ரெபேக்கா.." என்று மனம் கதறியது. தோழியை தேடி ஆட்களை விலக்கிக்கொண்டு ஓடினாள். ரெபேக்காவை கண்டுபிடிக்க முடியவில்லை அவளால். அழுதுகொண்டு மீண்டும் வெளியில் வர அவள் காலை யாரோ பற்றிப்பிடித்தார்கள். திடுக்கிட்டு பயந்தவள் திரும்பிப்பார்த்தாள் சரிந்துவிழுந்து கிடந்த மேஜைக்கு கீழ் ஒரு ஆண் குப்புற விழுந்து கிடந்தான். அவன் முதுகில் முழுவதும் இரத்தம் பேச முடியாமல் கையால் சைகை காட்டி ஏதோ காட்டினான் ரேனுகாவிடம். ரேனுகா அந்த மேஜையை புரட்டி மறுபக்கம் தள்ளி விட்டு அவனை கையை பிடித்து நிமிர்த்தினாள்.

அங்கு அவன் நெஞ்சோடு அணைத்தப்படி ஒரு குழந்தை அடிபட்டு காயங்களோடு கிடந்தது. அநேகமாக இரண்டு வயது இருக்கும் அந்த குழந்தைக்கு. அந்த ஆண் ரேனுகாவை ஏக்கத்தோடு பார்த்தபடி கிடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேனு அந்த குழந்தையை தூக்கிகொண்டு அவனை தட்டி எழுப்பினாள். அவனிடம் ஒரு அசைவும் இல்லை. ரேனு குழந்தையை தூக்கிக்கொண்டு ஓடி போனாள் எதிரில் வந்தவரிடம் "அண்ணா அங்க ஒருத்தர் காயத்தோட இருக்கார்.. ஒருக்கா பாருங்களேன்.." என்றுவிட்டு குழந்தையை அம்பியூலன்ஸ் வண்டிக்குள் நின்ற வைத்தியசாலை ஊழியரிடம் கொடுத்தாள். கொஞ்ச நேரத்தில் அந்த இடத்தில் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. எல்லாம் ஓய்ந்துவிட்டது.

ரெபேக்காவின் தகப்பன் ஒரு ஆஸ்த்துமா நோயாளி. அன்று உயிர்த்தஞாயிறு தின ஆராதனை முடிவதற்கு கொஞ்ச நேரம் இருக்கையில் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போகவே ரெபேக்காவின் வீட்டு ஆட்கள் தேவாலயத்தில் இருந்து வீட்டிற்கு கிளம்பிவிட்டிருந்தனர். அவள் மட்டும் அன்றைய குண்டுவெடிப்பில் சிக்கி உயிரிழந்து விட்டாள். ரேனுவுக்கு அந்த கவலையிலிருந்து வெளிவரவே முடியவில்லை. தானே தன் தோழியை மரணவாயிலில் கொண்டு போய் விட்டுவிட்டதாக தன் மீதே அவளுக்கு வெறுப்பாக இருந்தது.

அந்த குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்து இரண்டு வாரங்கள் கடந்திருந்தன. அன்றைய சம்பவம் பற்றிய செய்திகள் மட்டும் வெளியாகியவண்ணம் இருந்தது. ரேனுகாவுக்கு இந்த இரண்டு வாரங்களில் அதிகம் நினைவில் நின்றது அந்த குழந்தைதான். அன்று இரத்த காயங்களோடு அம்பியூலன்ஸ் வண்டியில் அவள் தூக்கி ஏற்றிவிட்ட அந்த குழந்தையை பற்றிய நினைவு அவளை பெரிதும் வாட்டியது. இப்பொழுது அந்த குழந்தை எப்படி இருக்கிறதோ என்று ஒரே யோசனையாக இருந்தது அவளுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று வேலை முடிந்ததும் நேராக வைத்தியசாலைக்கு போய் அந்த குழந்தை பற்றி விசாரித்தாள். அந்த குழந்தையின் பெற்றோர் அன்றைய குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிழந்துவிட்டதாகவும் குழந்தை இன்னும் குணமாவில்லை சிகிச்சை அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது குழந்தையை பொறுப்பேற்க யாரும் வரவில்லை அதனால் குழந்தை குணமாகியவுடன் வைத்தியசாலை நிர்வாகம் குழந்தைகள் பராமரிக்கும் இல்லத்தில் அக்குழந்தையை ஒப்படைப்பார்கள் என அவளிடம் தெரிவிக்கவும் ரேணுகாவால் அதை தாங்கிக்கொள்ள முடியவில்லை.

வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் அனுமதி வாங்கிக்கொண்டு குழந்தையை போய் பார்த்தாள். அந்த பிஞ்சுக்குழந்தை சுயநினைவில்லாமல் கட்டிலில் கிடந்தது. அன்று குழந்தையை தூக்கி வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு வீட்டுக்கு போன பின் எவ்வளவு நேரம் குளித்தும் கையிலும் உடையிலும் படிந்திருந்த இரத்தக்கறை போகவில்லை அவளுக்கு. அங்கு நிற்க பிடிக்காமல் வேகமாக வெளியேறி ஸ்கூட்டியை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு புறப்பட்டாள்.

அதிலிருந்து குழந்தையை பற்றிய யோசனை பூதகரமாக அவள் மனதை ஆக்கிரமித்தது. எப்படியும் குணமடைந்தவுடன் குழந்தையை இல்லத்திற்கு அனுப்பிவிடுவார்கள் என்பதை நினைக்கையில் மனம் கனத்தது. அன்று அந்த குழந்தையை கையில் தூக்கிய ஸ்பரிசத்தை இன்றும் உணர்ந்தாள். ஒரு வேளை அன்று குழந்தையை தன்னிடம் காட்டிய அந்த ஆண் தான் அதன் தகப்பனாக இருக்குமோ என்று நினைக்கையில் அன்று அவனின் கண்களில் கண்ட ஏக்கமும் இயலாமையும் அவளுக்கு யோசிக்க யோசிக்க பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. என் பிள்ளையை இந்த பெண் காப்பாற்றிவிடுவாள் என்ற நம்பிக்கையில் அந்த உயிர் பிரிந்திருக்குமோ என்று நினைக்கையில் அவளுக்கு அழுகை வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கைந்து நாட்களாக யோசித்து யோசித்து இரவில் சரியான தூக்கம் இல்லை அவளுக்கு. நாட்கள் போக போக குழந்தை குணமடைந்து கொண்டு வந்தது. வைத்தியசாலையில் விசாரித்ததில் முழுமையாக குணமடைந்ததும் அநேகமாக இன்னும் ஒரு வாரத்தில் குழந்தையை பராமரிக்கும் இல்லத்திற்கு அனுப்பி விடுவதாக தெரிவித்தார்கள். ரேணுகாவுக்கு ஏன் நான் அந்த குழந்தையை தத்தெடுத்துக் கொள்ள கூடாது என்று தோன்றியது. பின் தீர்க்கமாக முடிவெடுத்தாள் குழந்தையை தத்தெடுத்துக் கொள்வதென்று. தன்னுடைய முடிவை வீட்டில் பெற்றோரிடமும்

அண்ணனிடமும் சொல்லவும் மூவரும் ஒரே நேரத்தில் அவளது விருப்பத்தை மறுத்து விட்டார்கள்.

"பைத்தியமா உனக்கு அந்த பிள்ளைய ஹொஸ்பிட்டல் பொறுப்பெடுத்திட்டாங்க.. அவங்க பாப்பாங்க.. உனக்கெதுக்கு தேவையில்லாத வேல.." என்று ரேணுவின் தமையன் அவளுக்கு அறிவுரை வழங்கினான்.

"என்ன மனே இதெல்லாம்.. நாங்க இருக்க நிலைல ஒரு பிள்ளைய எடுத்து வளக்க ஏலுமா.. நாளைக்கு நீ கலியாணம் முடிச்சு போன பிறகு யார் அந்த பிள்ளைய பாப்ப.. அய்யாவும் நானும் எவ்வளோ நாளைக்கி இருப்பம்.." என்று ரேணுவின் தாய் கவலைப்பட்டார்.

வீட்டில் எல்லோரும் மறுத்துவிடவே ஒரு வேளை தான் ஆண் பிள்ளையாக பிறந்திருந்தால் சுயமாக யோசித்து தன் ஆசைப்படி அந்த குழந்தையை தானே வளத்திருக்கலாமோ என்று தோன்றியது அவளுக்கு. என்ன பிரயோசம்? நாளைக்கு அந்த பிஞ்சுகுழந்தை தன் பார்வையிலும் இருந்து போய்விடும் என்று தன் இயலாமையை நினைத்து மனதிற்குள் குமுறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தநாள் வேலைக்கு போக முதல் குழந்தையை பார்க்கவேண்டும் போல் மனது தவித்தது. நோயாளர்களை பார்வையிடும் நேரத்தில் சென்று பார்த்துவிட வேண்டுமென்று நேரத்திற்கு எழுந்து தயாராகி வைத்தியசாலைக்கு புறப்பட்டாள். வைத்தியசாலைக்குள் சென்று ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு ஏதோ யோசித்தபடியே உள்ளே போனவள் எதிரில் வந்தவருடன் மோதிக் கொண்டாள். மோதிய வேகத்தில் நிமிர்ந்து பார்த்து மன்னிப்பு கேட்க வாயெடுத்தவள் அப்படியே நின்றுவிட்டாள் இமைக்காமல்.

எதிரில் நெற்றியை தேய்த்துக்கொண்டு சின்ன புன்னகையுடன் நின்றான் பிரதீபன். அவளுக்கு பிரதீபனை பாடசாலை நாட்களில் இருந்தே தெரியும் கூடவே அவனை அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும் ஆனாலும் அவனுடைய குடும்பம் மட்டக்களப்பில் கொஞ்சம் பெயர் சொல்லும் வசதியான பின்னனியை சேர்ந்தவர்கள் அதனாலேயே அவள் அவனோடு பேசுவதையும் முடிந்தளவு தவிர்த்து வந்தாள். நமக்கு ஏன்

தேவையில்லாத ஆசைகள் தேவையில்லாத பிரச்சினைகள் என்று ஒதுங்கிக் கொள்வாள். ரெபேக்கா மட்டுமல்ல வேறு சில நண்பர்களும் பிரதீபன் அவளை காதலிப்பதாக சொன்னாலும் கூட அவனாக தன்னிடம் எதுவும் பேசியதில்லை அதனால் அது தேவையற்ற கதை என்று அதை அவள் கணக்கெடுப்பதில்லை.

ஆனால் இப்பொழுது நீண்ட நாட்களுக்கு பிறகு மிக அருகில் அவனை கண்டது ஒரு மாதிரியாக இருந்தது அவளுக்கு. அவனோடு என்ன பேசுவது? முதலில் பேசுவதா வேண்டாமா? என்று குழப்பமாக இருந்தது ஆனால் குழந்தை பற்றிய கவலை அவள் மனதை அதிகமாக ஆட்கொண்டிருக்க அவனிடம் எதுவும் பேசாமல் விலகி வேகமாக சென்று விட்டாள். உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று குழந்தையை பார்த்தாள். குழந்தை உறங்கிக்கொண்டிருந்தது. கிட்ட போய் அதன் பிஞ்சுக்கைகளை தொட்டு முத்தமிட்டாள். அவளை மீறி கண்ணீர் கன்னத்தில் விழுந்தது. அந்த கையின் ஸ்பரிசத்தில் அவள் உடல் சிலிர்த்தது.

"நாளைக்கு இங்கயிருந்து போயிடுவியா குட்டி.. அங்க உன்ன நல்லா பாப்பாங்களா.." என்று குனிந்து குழந்தையிடம் பேசினாள். குழந்தையோ நன்றாக உறங்கிக்கொண்டிருந்தது. தன் இயலாமையை நினைத்து கனத்த மனதோடு ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு நிமிர்ந்தவள் அந்த குழந்தையை கவனித்துக்கொள்ளும் வைத்தியசாலை ஊழியரிடம்

"நாளைக்கு சில்ரன்ஸ் ஹோமுக்கு அனுப்பிடுவிங்களோ.." என்றாள் ரேணு.

"ஓம்.. தங்கச்சி.. இண்டைக்கு பின்னேரமே வெளிக்கிடுவாங்க.." என்றார் அந்த வைத்தியசாலை ஊழியர்.

ரேணுகாவுக்கு என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை. ரேணுகாவோடு வங்கியில் வேலை பார்க்கும் ஒருவரின் சகோதரன் அங்கு தான் வைத்தியராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் நன்கு பரிச்சயமானவர் அவளுக்கு. அவரிடம் தான் ஏற்கனவே குழந்தையை பற்றி பேசியிருந்தாள். இப்பொழுது அவரை தேடி போனாள்.

"சேர்.. ப்ளீஸ்.. இன்னும் ஒரு வன் வீக் டைம் தரஏலாதா..? நான் எப்படியாவது அம்மா அப்பாவ சம்மதிக்க வைக்கிறன்.. ப்ளீஸ்.." என்று கெஞ்சினாள்.

"ரேணுகா எனக்கு உங்கட மனநிலம விளங்குது.. ஆனா நீங்க நினைக்கிற மாதிரி இதெல்லாம் அவ்வளவு ஈஸி இல்ல..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ட்.. இப்பிடி இன்ஸிடன்ஸ்ல யாரும் இல்லாம வார பிள்ளைகள ஹொஸ்பிட்டல் பொறுப்பெடுத்து இப்பிடி அனுப்புறது தான் நோர்மல் புரொஸிஜர்..

ஒரு வேள நீங்க மரீட் என்டா பிள்ளைய தத்தெடுக்கிறது ஈஸி.. நீங்க யங் கேர்ள்.. ஒரு நலன்விரும்பியா என்ர அட்வைஸ் ப்ளீஸ் லீவ் இட்.. கொஞ்ச நாளைக்கு கஸ்டமா இருக்கும்.. பிறகு மறந்திடுவீங்க.." என்று அவளை சமாதானப்படுத்த முயன்றார் அவர்.

அவருக்கும் ரேணுகாவை பார்க்க பாவமாக இருந்தது. இந்த மூன்று வாரங்களாக அவள் வைத்தியசாலைக்கு வந்து குழந்தையை பார்ப்பதும் அதன் மேல் அக்கறை அன்பும் காட்டுவதும் அவர் கவனத்தில் வரத்தவறவில்லை.

ஆனால் அவளுக்கோ குழந்தையை விட மனமில்லை. இயலாமையில் அழுகைவர கண்ணீரோடு "ப்ளீஸ்.. டொக்டர்.." என்றாள்.

அந்நேரம் அறைக்கதவை யாரோ தட்டினார்கள். அந்த அறைக்கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தான் பிரதீபன்.

"ஆஹ்... பிரதீப்.. வாங்க.. அப்பா மோர்னிங் கோல் எடுத்து சொன்னவர்.. நீங்க ஏதோ கதைக்கனும் என்டு.."என்று அந்த வைத்தியர் பிரதீபனை வரவேற்கவும்

அவனை அங்கு சற்றும் எதிர்பாராத ரேணுகா இனியும் அங்கு நிற்பதில் பிரயோசனமில்லை என்று கண்களை துடைத்துக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள். வெளியேற கதவைத்திறக்க போனவளின் கையை பற்றி நிறுத்தினான் பிரதீபன். அவள் அதிர்ச்சியோடு அவனைப் பார்க்கையில் மெல்ல அவள் காதருகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரேனு ப்ளீஸ்.. எனக்காக கொஞ்சம் வெயிட் பண்ணு.. டொக்டர்ட கதைச்சிட்டு வாறன்.." என்று சொல்லி அவள் கைகளை விடுவித்தான்.

ரேனுகா வெளியில் வந்து அங்கு போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்தாள். சற்று நேரத்தில் பிரதீபன் வெளியே வந்தான். வந்து ரேனுகாவுக்கு பக்கத்தில் அமர்ந்து

"ஏன் ரேனு.. உன்ர லைப்ல ஒரு செக்கன் கூட நீ என்ன நினைச்சதில்லயா..? என்ன நீ விரும்பினதில்லயா.." என்றான் கரகரத்த குரலில்.

அந்த கேள்வியை அவனிடம் இருந்து சற்றும் எதிர்பாராதவள் விடுக்கென நிமிர்ந்து அவனை பார்த்தாள் ஒன்றும் புரியாமல்.

"ரேனு.. நம்மட சேர்க்கிள்ள இருக்கிற எல்லாருக்கும் தெரியும்.. பிரதீபன் ரேனுகாவ லவ் பண்ணுறான் என்டு.. ஏன் உனக்கு மட்டும் தெரியல.. தெரியலயா.. இல்ல..?" என்ற கேள்வியோடு அவள் கண்களை கூர்ந்து பார்த்தான் பிரதீபன்.

அவள் எதுவும் பேசவில்லை. மனதிற்குள் என்ன நினைத்தாளோ கண்களில் இருந்து வழியும் கண்ணீர் மட்டும் நிற்கவில்லை அவளுக்கு. பிரதீபன் ஒரு பெருமூச்சோடு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

கொஞ்சம் நகர்ந்து அவளுக்கு நெருக்கமாக அமர்ந்து அவள் கன்னங்களை இரண்டையும் தன் கைகளால் பற்றி கண்ணீரை துடைத்து

"அழாதடி.. லூசு.. உன்ர இந்த லூசுத்தனமான மனசு யாருக்கு வரும்.. சொல்லு.. அது தானே என்ன உனக்கு பின்னாலயே திரிய வைக்கிது..

"நானும் டெய்லி உன்ன பாத்திட்டு தான் இருக்கன்.. அழகா சிரிக்கிற.. நடக்கிற.. கோவப்படுற.. இந்தா.. இப்ப கொஞ்ச காலமா ஒரே முகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிப்போய் அழுற.. ஆனா என்ன மட்டும் நினைக்கிற இல்லையேடி.. ஆஹ்..?" என்று கேட்டு புருவங்களை உயர்த்தி அவளை கேள்வியோடு பார்த்தான்.

அவன் பேச பேச அவளுக்கு மேலும் மேலும் அழுகை தான் வந்தது. "ப்ளீஸ்.. பிரதீப்.." என்று அழுகையோடு அவன் கைகளை விடுவிக்க முயன்றாள்.

"ப்ப..ப்பாஆ.. இங்க பார் நீ என்ர பேர சொன்னதும் எனக்கு புல்லரிக்குது.. உனக்கு தெரியுமா.. நான் உன்ன எவ்வளவு லவ் பண்ணுறன் என்டு.. இப்ப கொஞ்ச நாளா நீ மட்டும் தான் அந்த பேபிக்காக அழுது கவலப்படுறியா.. நானும் தான் நைட்ல தூக்கம் கூட இல்லாம யோசிச்சு கவலப்பட்டுட்டு இருக்கன்.. உனக்காக.." என்றான் அவன்

அவள் யோசனையோடு அவனை பார்க்கவும்

"ம்ம்..ம்.. விளங்குது.. உனக்கு விளங்கலன்டு.." என்று சொல்லி சிரித்துக்கொண்டு

"உனக்கு எது பிடிக்குமோ.. உனக்கு எது சந்தோசமோ.. அதயெல்லாம் செய்ய தானே நான் இருக்கன்.. பிரதீப் இப்பிடி ஒரு பிரச்சினை.. என்டு நீ என்னட்ட தானே சொல்லி இருக்கனும்.. ம்ம்..?"

"சரி விடு.. நான் டொக்டர்ட எல்லாம் கதைச்சிட்டன்.. நீ என்ன செய்யோனுமென்டா.. இந்த மூவிஸ்ல எல்லாம் காட்டுற போல.. நீ... அந்த குட்டி பேபிய மடில வச்சிட்டு.. அழகா வெக்கப்பட்டுட்டு உட்காந்து இரு.. நான் உனக்கு தாலி கட்டுறன்.. சரியா.." என்று சொல்லி குனிந்து தலையை சரித்து அவள் முகத்தை ஆராய்ந்தான் பிரதீபன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேணுகாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அழுவதா? இல்லை அவனை ஆசை தீர கட்டிக்கொள்வதா? இல்லை அவனுக்கு நன்றி சொல்வதா? தன் மனம் இந்த நொடி அனுபவிக்கும் நிம்மதியை என்ன செய்து அதை தந்தவனிடம் வெளிப்படுத்துவது என்று அவளுக்கு தெரியவில்லை.

"ரேணு.. என்னம்மா..?" என்றான் அவன்.

"ம்ம்..ம்.. ஒன்டுமில்லையே.." என்றாள் அவள்

"அது சரி.. எதும் இருக்கெண்டு நீ சொன்னா தான் அதிசயம்.. ஈவினிங் உங்கட வீட்ட வந்து உன்ர அப்பாட்ட கதைக்கிறன்.. யோசிக்காத என்ன நம்பு.. நீ விரும்புற மாதிரி எல்லாத்தையும் செய்வன்.."

"எனக்கு நேரம் போகுது.. பேபிய அடப் பண்ணுற டொக்கியூமென்ஸ் கொஞ்சம் ரெடி பண்ணனும்.. அதோட ஒப்பிஸ்ல வேலையும் இருக்கு.. இன்டைக்கு உனக்கு வேர்க் தானே.. நீ வெளிக்கிடு.." என்று சொல்லி அவள் கண்களை துடைத்து நெற்றியில் விழுந்திருந்த முடியை கோதி சரிசெய்து விட்டான் பிரதீபன்.

காற்றே வராமல் இருட்டறையில் மூச்சுமுட்ட கிடந்தவளுக்கு அவன் வந்து கதவு ஜன்னல்களை திறந்து சுவாசிக்க வைத்தது போல் இருந்தது ரேணுகாவுக்கு.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோகரி

சூரியன் மறைந்து இருளத் தொடங்கி விட்டது. மனோகரி வாசலை எட்டிப் பார்த்தாள். ஏமாற்றத்ததுடன் திரும்பி மிச்சம் இருந்த பாத்திரங்களை கழுவித் தொடங்கினாள். மனம் படபடப்பாக இருந்தது. தொண்டையெல்லாம் வறண்டு இருமல் வந்தது. வாளியிலிருந்த தண்ணீரை ஒரு டம்ளரில் அள்ளி குடித்து விட்டு மீண்டும் வாசலுக்கு வந்தாள்.

ஏதோ இனம்புரியாத பயம் மனதை அழுத்தியது. மனோகரியின் இந்த பதட்டத்திற்கு காரணம் மாலை வெளியே விளையாடப் போன அவளுடைய மகள் இரவு ஏழு மணியாகியும் இன்னும் வீட்டுக்கு வரவில்லை. ஒருநாளும் இப்படி தாமதமானதில்லை. மனோகரியின் மகளுக்கு ஏழு வயதாகிறது. பள்ளி முடிந்து வந்து பக்கத்து வீட்டு தன்வயதொத்த பிள்ளைகளுடன் விளையாடச் சென்று விடுவாள். மாலை ஆறு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு எட்டு மணிக்கெல்லாம் தூங்கிவிடுவாள் மனோகரியின் ஒரே மகள் துஸ்யந்தி.

இன்று ஏழு மணியாகியும் பிள்ளை வீட்டுக்கு வராமல் இருக்க மனோகரிக்கு பயத்தில் நெஞ்சு படபடக்க தொடங்கியது. பக்கத்து வீட்டு வேலிக்கப்பால் எட்டிப் பார்த்து "ராகினிக்கா உன்ர மகன் வீட்டி வந்திட்டானா.. என்ர பெட்ட இன்னும் வீட்ட வரலேயேக்கா.." என்றாள்.

"அவன் அப்போதே வந்திட்டானேடி மனோ.. வடிவாப் பாரு இஞ்சால எங்கயும் நிப்பாள்.." என்றாள் பக்கத்துவீட்டுப் பெண். தாய்க்கு பின்னால் நின்ற சிறுவனிடம் "தம்பி எங்கயடா விளையாட போனியள்.. அவள் உன்னோட வரேலயே.." என்றாள் கம்மிப்போன குரலில். அதற்க்கு அந்த சிறுவன் "எப்பயும் போல குளத்துக்குகிட்ட தான் விளையாடினம் அன்ரி .. துஸி கால் கழுவிட்டு வாறன் என்டு போனவ.. நாங்க வந்திட்டம்.." என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே "மனோக்கா இஞ்ச ஓடி வாவான்.. உன்ர மகள் குளத்திக்க விழுந்திட்டாளாம்.." என்று கத்திக்கொண்டு ஒரு சிறுபெண் ஓடி வந்தாள். மனோகரிக்கு உயிரே போய்விடும் போல் இருந்தது. "ஐயோ என்ர பிள்ள.." என்று கத்திக்கொண்டு குளக்கரையை நோக்கி ஓடினாள் மனோகரி.

அங்கு ஒரு கூட்டமே கூடி நின்றது. கிராமத்திற்கு பொறுப்பான அதிகாரி கேசவனும் ஒரு பொலிஸ் அதிகாரியும் நின்று அங்கிருந்த சில ஆண்களிடம் ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தனர். ஒரு வயதான பெண் கீழே கிடத்தி இருந்த மனோகரியின் மகளின் கன்னத்தை தட்டி எழுப்பிக்கொண்டிருந்தாள். மனோகரி ஓடி வந்து பிள்ளையை வாரி அணைத்து தூக்கி "துஸிம்மா எழும்படி.. என்ர செல்லமே அம்மாவ பாரடி.." என்று கத்திக் கத்தி மகளை எழுப்பினாள்.

ஊஊஊ... என்ற சத்தத்துடன் அம்பியூலன்ஸ் வண்டி வந்து நின்றது. அங்கு நின்ற ஒருவர் வேகமாக வந்து மனோகரியின் கையிலிருந்து பிள்ளையை தூக்கி வண்டியில் ஏற்றினார். மனோகரியும் இன்னும் இரண்டு ஊர்காரர்களும் ஏறிக்கொள்ள அம்பியூலன்ஸ் வண்டி அதே ஊஊஊ.. என்ற பெருஞ்சத்தத்துடன் வீதியில் சீறிப் பாய்ந்தது.

பிள்ளையை தொட்டுப்பார்த்து பரிசோதித்துவிட்டு "பிள்ளை செத்து கணநேரமாகிட்டு.. ஒரு போர்ட்டிபை மினிட்ஸ்க்கு முதலே உயிர் போய்ட்டு.." என்றார் டொக்டர். மனோகரி பொத்தென கீழே விழுந்தாள். ஊர்காரர்கள் இருவர் மனோகரியை கைத்தாங்கலாக தூக்கிச் சென்று வைத்தியசாலைக்கு வெளியில் போடப்பட்டிருந்த மரக்கதிரையில் இருத்தி மயக்கம் தெளிய தண்ணீரை தெளித்தனர்.

சில்லென்று முகத்தில் அடித்த தண்ணீரின் வேகத்தில் கண்முழித்த மனோகரி "என்ர பிள்ள எங்கயண்ண.. ஐயோ அவள் என்ன விட்டிட்டு போய்ட்டாளே.." என்று கத்தவும் "குளத்திக்க விழுந்த பிள்ள முச்செடுக்க ஏலாம முச்சுதிணறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்து போயிருக்கிறாள்.. விசரி.. பிள்ளய குளக்கரையில விளையாட விட்டுட்டு என்ன வெட்டி முறிக்க போனியாடி.." என்று ஒரு வயதான கிழவி தலையிலடித்துக் கொண்டு கத்தினாள். மனோகரி மண்ணைவாரி வீசி கடவுளை சபித்து மார்பிலும் தலையிலும் அடித்துக் கொண்டு கதறினாள்.

ஊரே கூடி நின்று அழுதது. நடுவில் தேவதை போல் பூக்களாலும் பூமாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டு உறங்கிக்கொண்டிருந்தாள் மனோகரியின் மகள் துஸ்யந்தி. மனோகரி அழவும் தெம்பற்றவளாய் பிள்ளையின் தலைமாட்டில் தலைவிரிகோலமாக பித்துபிடித்தவளாய் உட்கார்ந்திருந்தாள். அவளது வாழ்க்கையின் அர்த்தம் அவளுக்கென்று இருந்த ஒரே சொத்து அவளுடைய மகள் தான். வாழ்க்கையில் எந்த நல்லதையும் அனுபவிக்காமல் மாடு மேய்த்து தன்

வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்த மனோகரிக்கு வாழ்வில் இருந்த ஒரே ஒரு பிடிப்பு அவள் மகள் தான்.

நாடு அபிவிருத்தியில் பல மைல்களைக் கடந்து விட்ட போதும் சில கிராமப்புறங்களில் மக்களின் வாழ்க்கை மிகவும் பின்தங்கியதாகவே காணப்பட்டது. அந்த கிராமமும் அப்படிப்பட்டது தான். அங்கு தோட்டங்கள் செய்வதும் கால்நடைகள் வளர்ப்பதும் தான் மக்களின் பிரதான வாழ்வாதார வழியாக இருந்தது. ஒரு சிலர் ஏக்கர் கணக்கில் தோட்டங்களில் பயிர்களை விளைவித்தும் பெரிய பண்ணைகளை வைத்தும் வருமானத்தை ஈட்டினர். மிகுதி மக்கள் அத்தகைய தோட்டங்களில் கூலி வேலை பார்ப்பதும் பண்ணைகளில் வளர்க்கப்படும் கால்நடைகளை பராமரிப்பதையும் தொழிலாக கொண்டிருந்தனர்.

மனோகரியின் தாயும் தந்தையும் கூலித் தொழிலாளர்கள். அவர்களுக்கு மூத்தவள் மனோகரி இளையவன் செல்வக்குமார் என இரண்டு பிள்ளைகள். அந்த கிராமத்தில் உள்ள பாடசாலையில் ஒன்பதாம் தரம் வரை தான் இருந்தது. அதற்க்கு மேல் படிப்பதென்றால் பக்கத்து ஊருக்கு தான் போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். கூலி வேலை செய்து குடும்பத்தை ஓட்டும் மனோகரியின் பெற்றோருக்கு பிள்ளைகளை படிக்க வைப்பது ஒரு பெரிய போராட்டமாகவே இருந்தது. அப்படியிருக்கையில் தான் ஒரு தொண்டு நிறுவனம் மிகவும் வறுமையில் இருக்கும் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளை வீட்டுக்கு ஒரு பிள்ளையை உயர்தரம் வரை படிப்பிக்கும் ஒரு செயற்திட்டத்தை முன்னெடுத்தார்கள். அதில் மனோகரியின் பெற்றோரிடம் ஒரு பிள்ளையை தாங்கள் படிப்பிப்பதாக கேட்ட போது அவர்கள் மனோகரி பெண் பிள்ளை ஆகவே அவளை விட ஆண்பிள்ளையான அவளது தம்பிக்கு தான் படிப்பு மிக அவசியம் என முடிவெடுத்து மனோகரியின் தம்பியை படிக்க அனுப்பினார்கள்.

பெண்பிள்ளையை பெற்றவர்களுக்கு இருக்கும் ஒரே யோசனை பிள்ளைக்கு திருமணம் செய்து வைப்பது தான். மனோகரிக்கும் 20 வயதில் அவளது மச்சான் முறையான சுதாகரனை திருமணம் செய்து வைத்தனர். திருமணமாகி ஒரு வருடத்தில் அவளுக்கு பெண் குழந்தை பிறந்தது. சுதாகரனுக்கு வேலை இல்லை. "கூலி வேல செஞ்சு பெட்டச்சிய வளக்க ஏலுமே மனோ.. இஞ்ச பாரு படகில ஒஸ்ரேலியா போறாங்கள்.. நானும் போனனென்டா பிறகென்ன நல்ல உழைப்பு.. நாங்களும் நல்லா இருக்கலாம்..

ஆரிட்டயும் கதைச்சு ஒரு ஐஞ்சு லச்சம் வாங்கி தாவன்.." என்று மனோகரியை நச்சரித்தான் அவள் கணவன்.

ஒரு கட்டத்தில் அவன் நச்சரிப்பு தாங்க முடியாமல் அந்த ஊரில் பெரிய பண்ணை வைத்திருந்தவரிடம் கடனாக ஐந்து லட்சம் ரூபாய் பணத்தை வாங்கினாள் மனோகரி கணவன் அவுஸ்திரேலியா போய் பணம் அனுப்ப தொடங்கியதும் மொத்தமாக திருப்பி தருவதாகவும் அதுவரை அவருடைய பண்ணையில் ஆடு மாடுகளை மேய்க்கும் வேலையை தான் செய்வதாகவும் அந்த கூலிப்பணத்தில் மாதாமாதம் பாதியை கடனுக்கு கழித்துவிட்டு மீதியை தருமாறும் சம்மதித்து கடனைப் பெற்றாள். மனோகரியிடம் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைப் பெற்றுக் கொண்ட போனவன் போனது தான் எந்த தகவலும் இல்லை சுதாகரனிடமிருந்து. காத்து காத்து இருந்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. மகளுக்கும் மூன்று வயதாகிவிட்டது. போன கணவனும் திரும்பி வரவில்லை அவனைப்பற்றி ஒரு தகவலும் இல்லை.

மனோகரி ஊரில் கால்நடைகளை வளர்க்கும் எல்லோரிடமும் ஆடு மாடுகளை மேய்க்கும் வேலை செய்யத் தொடங்கினாள். மனோகரி என்பது போய் மாடு மேய்க்கும் மனோகரியாகி அது காலப்போக்கில் மாட்டுக்காரி மனோகரி ஆயிற்று. மாட்டுக்கார மனோ என்றால் ஊரில் எல்லோருக்கும் தெரியும். அடுத்த இரண்டு வருடங்களில் தாயும் தந்தையும் இறந்து போக தம்பியும் படித்து முடித்து தனக்கென்று ஒரு குடும்பம் வேலை என்று ஒதுங்கிக் கொண்டான்.

மனோகரிக்கு என்று மிஞ்சியது அவள் மகள் மட்டும் தான். மகள் மீது அளவில்லாத பாசம் வைத்திருந்தாள். தன் வாழ்வில் நடந்த எதுவும் தன் பிள்ளைக்கு நடந்து விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள் மனோகரி.ஆனால் இருபத்தியெட்டு வயதே நிரம்பிய மனோகரியின் தனிமையும் அவளது வனப்பான அழகும் அந்த ஊரில் பல ஆண்களின் கண்களை உறுத்திக் கொண்டு தான் இருந்தது. நீண்ட கூந்தலை அள்ளி முடிந்து பாவடையை தூக்கி இடுப்பில் சொருகிக் கொண்டு மாடுகளை மேய்க்கும் மனோகரியின் அழகு பல ஆண்களின் மனதை தடுமாற வைத்தாலும் அவள் இடுப்பில் செருகி வைத்திருக்கும் களை அறுக்கும் சிறிய கத்தியும் ஆவேசமாக ஓடும் மாட்டின் முக்கணாங்கயிற்றை கைகளில் பிடித்து சுற்றி வளைத்து இழுத்து நிறுத்தும் அவளது முறுக்கேறிய ஆணுக்கு சமனான பலமும் ஆவேசமும் அவளிடம் நெருங்க யோசிக்க வைத்தன. அந்த கிராமத்திற்கு பொறுப்பான அதிகாரி கேசவனுக்கும் மனோகரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது ஒரு ஆசை இருக்கத்தான் செய்தது. அவளுக்கு உதவிகள் செய்கிறேன் என்ற பெயரில் அடிக்கடி அவள் வீட்டு வாசலில் போய் நிற்பதும் அவளின் அலட்சியத்தால் மூக்குடைந்து வருவதும் அவருக்கு வழக்கமாக இருந்தது.

இது எல்லாவற்றையும் தாண்டி தனிஒரு பெண்ணாக நின்று ஏழு வருடங்களாக மகளே தன் உலகம் என்று அவளை பாராட்டி சீராட்டி வளர்த்தாள். அப்படி அவளது உலகமாக இருந்த மகளை இன்று தொலைத்து விட்டு பித்துப் பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள் மனோகரி."நேரம் போயிட்டு பொடியை எடுப்பம்.." என்றார் கூட்டத்தில் நின்ற ஒருவர். மனோகரி வீறிட்டு கத்திக்கொண்டு எழுந்தாள். "என்ர பிள்ளைய விடுங்கோ.. அவள கொண்டு போகாதீங்க.." என்று தலையில் அடித்துக்கொண்டு கதறினாள். இரண்டு பெண்கள் வந்து மனோகரியை பிடித்துக் கொண்டனர். சவப்பெட்டியை மூடி தூக்கினார்கள். ஊர்பெண்கள் எல்லோரும் ஒப்பாரி வைத்து கதறினார்கள். எல்லாம் முடிந்து விட்டது. மனோகரியின் வாழ்வின் அர்த்தம் முற்றுப்பெற்றுவிட்டது.

மூன்று மாதங்கள் கடந்து விட்டிருந்தது மனோகரியின் மகள் இறந்து. மனோகரி வேலைக்கும் போவதில்லை வீட்டை விட்டு வெளியிலும் போவதில்லை. அயல் வீடுகளில் இருக்கும் பெண்கள் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்து அவளை சாப்பிட வைத்து சமாதானப்படுத்தினார்கள். அவளின் தம்பி குடும்பத்துடன் வந்து அவளை பார்த்துவிட்டு போனான். "இப்பிடியே சாப்பிடாம இருந்து சாகப்போறியேடி.." என்று எதிர்வீட்டு கிழவி அவளை அக்கறையுடன் திட்டிவிட்டு தினமும் மனோகரி வீட்டில் வந்து அவளுக்கு துணையாக படுத்துக் கொண்டாள்.

அன்று மனோகரியின் மகளின் பிறந்தநாள். அவள் உயிரோடு இருக்கையில் ஒவ்வொரு வருடமும் பிறந்தநாள் வருவதற்க்கு ஒரு வாரத்திற்கு முன்னிருந்தே தாயிடம் பிறந்தநாளுக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று அடம்பிடிக்க தொடங்கிவிடுவாள். "அம்மா எனக்கு பாபி டோல் படம் போட்ட ஸ்கூல் பேக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும்.. பிறந்தநாளைக்கு வாங்கி தாங்கோவன்.."என்று மனோகரியின் சட்டையை பிடித்து தொங்கிக்கொண்டு கெஞ்சுவாள். அந்த முகத்தை நினைத்து பார்க்கையில் மனோகரிக்கு நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது. சுவரோடு சாய்ந்து விழுந்து கத்தி அழுதாள். சத்தம் கேட்டு ஓடி வந்த பக்கத்துவீட்டு பெண் "மனோ.. என்னடி.. ஏன்டி அழுற.." என்று மனோகரியின் தோளை உலுப்பினாள். விம்மி விம்மி

அழுதபடியே "ஒண்டுமில்லக்கா.. நீங்க போங்கோ.." என்றாள் மனோகரி. மகளின் நினைப்பில் அழுகிறாள் என்று புரிந்து கொண்ட அந்தபெண் "அதையே நினைச்சுகொண்டு இருக்காத.. வெளில காலாற போய்ட்டு வா.." என்று சமாதானப்படுத்தி விட்டு ஒரு பெரும்மூச்சோடு மனோகரியை கவலையாக பார்த்து கண்கலங்கி விட்டு போனாள் பக்கத்துவீட்டு பெண் ராகினி.

நீண்டநேரம் அழுதுகொண்டு இருந்தவள் அப்படியே சுவரில் சாய்ந்தபடியே தூங்கிப் போயிருந்தாள். திடிரெனமுழித்து பார்த்தாள். பின்னேரமாகி விட்டிருந்தது. கூந்தலை அள்ளி முடிந்து கொண்டு எழுந்தாள். போன வருடம் தீபாவளிக்கு தனக்கும் மகளுக்கும் ஒரே மாதிரி உடுப்பு வாங்கியிருந்தாள். இரண்டு மாதமாக சிறுகசிறுக சேர்த்த வைத்த இரண்டாயிரம் ருபாவில் மகளுக்கு ஆயிரத்து இருநுஉறு ருபாய்க்கு பட்டுப்பாவாடையும் தனக்கு என்னுஉறு ருபாய்க்கு சேலையும் வாங்கியிருந்தாள் அதுவும் மகளுக்கு பிடித்த சிவப்பு நிறத்தில். குளித்துவிட்டு வந்து அந்த சேலையை எடுத்துக் கட்டிக்கொண்டு வீட்டைப்பூட்டிவிட்டு கிளம்பினாள். பொடி நடையாக கோவிலுக்கு வந்து சேர மாலை ஆறு மணியாகிவிட்டது. அப்பொழுது தான் கோவிலில் பூசை முடிந்து எல்லோரும் வெளியே போய்க்கொண்டிருந்தனர். மனோகரியை கண்ட கோவில் பூசகர் "வா மனோகரி.. பூசை இப்பதானடியம்மா முடிஞ்சது.." என்றார். "ஐயா மகள்ட பேருக்கு ஒரு அர்ச்சனை செய்யோனும்.." என்றாள் கம்மிய குரலில் மனோகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசகர் பதிலுக்கு ஒன்றும் சொல்லாமல் உள்ளே போய் அர்ச்சனை செய்து விபூதியை கொண்டு வந்து கொடுத்தார். "மனசில இருக்கிற பாரத்தையெல்லாம் இந்த ஈஸ்வரி பாதத்தில இறக்கி வையடியம்மா.. அவள் எல்லாத்தையும் பாப்பாள்.." என்று மனோகரியிடம் சொல்லிவிட்டு மேல்சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு பையையும் எடுத்துக்கொண்டு அவர் கிளம்பினார். உள்ளே வீற்றிருந்த அந்த ஆதிபராசக்தியை கைகூப்பி வேண்டிவிட்டு அங்கிருந்த கோவில் தூணில் சாய்ந்தபடி உட்கார்ந்தாள் மனோகரி. மனதில் பல எண்ணங்கள் வந்து வதைத்தது. மகளின் செல்ல குரலும் பிஞ்சு முகமும் நினைவில் வந்து வந்து மனோகரியை கொன்றது. தான் தன் பிள்ளையை சரியாக கவனிக்கவில்லையோ அது தான் அவள் தன்னைவிட்டு போய்விட்டாளோ என்று தோன்றிது மனோகரிக்கு. "அம்மா வாங்கோவன்.. எனக்கு மூச்சுவிட ஏலாம இருக்கு.." என்று அவள் பிள்ளை கத்தி கூப்பிடும் சத்தம் கேட்டு சுயநினைவுக்கு வந்தாள் மனோகரி. அந்த குரல் கனவு என்று

உணர்ந்தபோது மனோகரிக்கு தொண்டை அடைத்துக் கொண்டு அழுகை வந்தது. சுற்றிலும் பார்த்தாள். நன்றாக இருண்டு விட்டிருந்தது. அப்போது தான் புரிந்தது நீண்ட நேரமாக தான் கோவிலிலேயே உட்கார்ந்திருப்பது. எழுந்து நடந்தாள் வீடு நோக்கி.

வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்த மனோகரியின் கால்கள் மெல்ல வேகம் குறைந்தது. வீட்டுக்கு போகும் பாதையை விட்டு பக்கத்தில் தெரிந்த வளைந்த சிறு பாதைக்குள் நடந்தாள். இங்கு தான் அவள் மகள் விழுந்து இறந்த குளம் இருந்தது. குளத்தை நெருங்க நெருங்க யாரோ சிலர் கதைக்கும் சத்தம் கேட்டது. நேரம் எப்படியும் இரவு எட்டு மணியை தாண்டியிருக்கும். இந்த நேரத்தில் குளத்தடியில் யாருக்கு என்ன வேலை என்று யோசித்துக் கொண்டு குளத்தை நெருங்கியவள் திடீரென அங்கு நின்ற பெரிய மரத்தின் பின்னால் ஒளிந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள். அங்கு ஒரு டிரக்டர் நிப்பாட்டியிருந்தது. மூன்று பேர் ஆற்றிலிருந்து மணலை அள்ளி டிரக்டரில் நிரப்பிக் கொண்டிருந்தனர். அதற்க்கு பக்கத்தில் கேசவனும் ஒரு ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவரும் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். மனோகரி குடும்ப வறுமை காரணமாக ஒன்பதாம் வகுப்போடு படிப்பை இடைநிறுத்தி விட்டாள் ஆனாலும் அவளுக்கு உலக அறிவு அதிகமாகவே இருந்தது. அங்கு சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடக்கிறது என்பதை புரிந்துகொண்டாள். கேசவனை சும்மாவே மனோகரிக்கு பிடிக்காது. அவனை பார்த்து "ச்சேச்.. இவனெல்லாம் ஒரு மனுசனெண்டு.. காசு என்டால் என்னவும் செய்வான்.. நாசமாபோனவன்.." என்று மனதிற்க்குள் திட்டினாள்.

அவர்கள் பேசுவது மனோகரிக்கு இபொழுது தெளிவாக கேட்டது. "அண்ண கொஞ்ச நாளைக்கு இத நிப்பாட்டுவம்.. அண்டு நான் நல்லா மாட்டியிருப்பன் ஏதோ சமாளிச்சு தப்பிச்சிட்டன்.. உங்களுக்கு தெரியுமண்ண.. இப்ப நாட்டு நிலமையள் கொஞ்சம் இறுக்கம்.. பிடிபட்டிட்டால் சிக்கலா போயிடும்.." என்றான் கேசவன். அதற்கு அந்த வயதானவர் "சரி எங்கள மாட்டிவிட்டுடாதேயும்.. தர வேண்டியத நேரத்துக்கு நேரம் தாறன் தானே.." என்றார் ஒரு வித அதிகாரமும் சலிப்பும் கலந்த குரலில். "அது இல்லயண்ண.. மூண்டு மாசத்துக்கு முதல் தெரியும் தானே.. இஞ்ச ஊருக்குள்ள மாடு மேய்க்கிறவள்ட பெட்ட இந்த கிடங்கிக்க விழுந்து தான் செத்திட்டாள்.. ஆனா அவள் குளத்திக்க தான் விழுந்து செத்தவள் எண்டு கேஸ மாத்தி எழுத என்ன பாடு தெரியுமே.. விசயம் வெளிய வந்தா இந்த மணல் அள்ளுற விசயம் அதுக்கு நான்

உடந்தை என்டதெல்லாம் வெளிச்சமாயிடும்... அரசாங்க வேலையுமில்ல.. உழைப்புமில்ல.. ஜெயில்ல தான் மிச்ச வாழ்க்க.. அதான் அண்ண கொஞ்ச நாளைக்கு நிப்பாட்டி வைப்பம்.."என்றான் கேசவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பேசிக்கொண்டு வேலையை முடித்து டிரக்டரை ஸ்டார்ட் பண்ணிக்கொண்டு கிளம்பினார்கள்.

"மாடுமேய்க்கிறவள்ட பெட்ட இந்த கிடங்கிக்க விழுந்து தான் செத்தவள்.." இந்த வாக்கியம் மனோகரியின் காதுகளில் இடியென இறங்கியது. கை காலெல்லாம் விறைத்தது அவளுக்கு. தன் பிள்ளையை இழந்தது விதியே என்று நினைத்துக் கொண்டிருந்தவள் அது பொய் என்று தெரிந்தபோது அவளால் தாங்க முடியவில்லை. "இந்த நாயின்ட காசு ஆசைக்கு என்ட பிள்ள பலியாகிட்டாளே.." என்று மனம் கொதித்தது. அன்று செத்தவீட்டில் சிலர் "இந்த குளம் முன்னுக்கு அவ்வளவு ஆழம் இல்லையே.. பிள்ள என்னெண்டு அதுக்குள்ள மூச்சு திணறினவள்.."என்று பேசிக்கொண்டது மனோகரிக்கு நினைவு வந்தது. உண்மைதான் அந்த குளம் நடுவில் தான் ஆழம் அதிகம். கரையில் நின்று யாரும் தவறிவிழுந்தால் எழுந்துவந்துவிடலாம். ஆனால் மணல்அகழ்வதால் குளத்தின் ஒரு பகுதியில் ஆழமான குழி உருவாகியிருந்தது. சாதாரணமாக அங்கு ஆற்றுக்குள் பெரிய பள்ளம் உருவாகியிருப்பது தெரியாது. யாரேனும் கால் வைத்துப் பார்த்தால் தான் ஆழம் தெரியும். அதில் தான் அன்று மனோகரியின் மகள் தவறி விழுந்துவிட்டாள். மனோகரிக்கு எல்லாம் புரிந்தது. கணப்பொழுதில் மனதை திடப்படுத்தினாள். மரத்தின் பின்னாலிருந்து ஆவேசமான கண்களுடன் வெளியே வந்தாள் மனோகரி.

"கொஞ்ச நாளைக்கு இதெல்லாம் நிப்பாட்டிட்டு சிவனேண்டு வீட்ட இருக்கோணும்.." என்று மனதிற்க்குள் நினைத்துக்கொண்டு யாரும் அவ்விடத்தில் இல்லையே என்பதை சுற்றும் முற்றும் பார்த்து உறுதி செய்துகொண்டு திரும்பியவன் திடுக்கிட்டு பேறைந்தவன் போல நின்றான். எதிரில் மனோகரி நின்றாள். சட்டென தன்னை சமாளித்துக்கொண்டு குரலை உயர்த்தி "என்ன மனோகரி இந்த நேரத்தில இஞ்சால பக்கம் வந்திருக்கிற.." என்றான் கேசவன். "ஏன்டா என்ர பிள்ளைய கொன்ட.." என்று ஆவசமாக கத்திக்கொண்டு பாய்ந்து அவன் சட்டையை பிடித்து உலுப்பினாள் மனோகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை தள்ளி விட்டு சட்டையை சரி செய்துகொண்டு "ஏய் மாட்டுக்காரி உனக்கென்ன விசரா..? என்ன அலம்புற.." என்றான் அவன். "ஓமடா நான் விசரி தான்.. என்ட பிள்ளைய சாககுடுத்திட்டு நிக்கிற நான் விசரி தான்.." என்று கத்தினாள் அவள்.

அவளுக்கு எல்லாம் தெரிந்துவிட்டது என்பது கேசவனுக்கு புரிந்தது. பெண்களை எப்போதும் அடாவடியாக இல்லாமல் அன்பாக அணுகினால் எளிதில் அடக்கி விடலாம் என்ற எண்ணம் கொண்டவன் கேசவன். அந்த எண்ணத்தில் "இஞ்ச பாரு மனோ.. நீ எவ்வளவு வடிவான பெட்ட தெரியுமா.. எனக்கு உன்ன ரொம்ப பிடிக்கும்.. நீ தான் என்ன கண்டுகிறதே இல்ல.. நான் நல்லா உழைக்கிறன்.. நான் சொல்லுறபடி நீ கேட்டா.. நல்லா இருக்கலாம்.." என்றான் கனிவான குரலில். சொல்லிவிட்டு மனோகரியின் முகத்தை கூர்ந்து பார்த்தான். "இடுப்பில் சொருகி வைத்திருந்த சிறிய பையை எடுத்து திறந்து அதற்க்குள் இருந்த சில ரூபாய் நோட்டுக்களை எடுத்து சேகவனின் முகத்தில் வீசினாள். "இந்தா காசு.. நான் ஆடு மாடு மேச்சு சேத்த காசு.. என்ட பிள்ளைக்கு பட்டுப்பாவடை வாங்க வச்சிருந்தன்.. சரஸ்வதி பூசைக்கு பட்டுப்பாவடை வாங்கி தாங்க அம்மா என்டு கேட்டவள்.. இதயும் எடுத்து உன்ர பொக்கற்ல வையடா விசரா.." என்று கத்தினாள்.

எவ்வளவு கத்தியும் அவனை திட்டியும் அந்த தாய் மனம் ஆறவில்லை. இனி பேசவோ இல்லை வாழவோ தனக்கு எந்த அவசியமுமில்லை என்று தோன்றியது மனோகரிக்கு. சேலையை தூக்கி இடையில் செருகிக் கொண்டு சேகவன் மீது பாய்ந்து அவனை குளத்தில் தள்ளினாள் மனோகரி. அவள் கத்திக் கூச்சலிட்டு விட்டு ஓய்ந்துவிடுவாள் என்று நினைத்துக் கொண்டு நின்ற கேசவன் அதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. தடுமாறி குளத்தில் விழுந்தான். விழுந்தவனை ஆவேசமாய் நீரில் அமிழ்த்தினாள் மனோகரி. கட்டுக்கடங்காமல் ஓடும் ஆடு மாடுகளை கயிற்றைபோட்டு கட்டி இழுத்து கட்டுப்படுத்தி மரத்துப்போன மனோகரியின் வலிய கரங்களை கேசவனால் சமாளிக்க முடியவில்லை. பேச முடியாமல் மூச்சு திணறினான். மனோகரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் நெருப்பென சிவந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. சில கனங்கள் தான் தண்ணீரில் இருந்து குபுகுபுவென நீர்க்குமிழிகள் வந்தன. கேசவனை தண்ணீரில் இருந்து வெளியே இழுந்து குளத்தின் நடுப்பக்கமாக போட்டாள்.

தன் சேலையை கழற்றி குளக்கரையில் கிடந்த ஒரு பெரிய கல்லை சுற்றி கட்டனாள். அந்த கல்லை மண்அகழ்வினால் ஏற்பட்ட பெரிய குழிக்குள் தள்ளினாள். மனம் ஏதோ நிம்மதியடைந்த பேர் உணர்ந்தாள் மனோகரி. மகளின் பிஞ்சுக்குரல் அவள் காதுகளில் கேட்டுக்கொண்டே இருந்தது. ஒரு விரக்திசிரிப்போடு பெருமுச்சு விட்டபடி குளத்தில் இறங்கி நடக்கத் தொடங்கினாள் மனோகரி.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பாடசாலை விடுமுறை. குளத்துக்கு பக்கத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவன் "அங்க பாருங்க குளத்துக்க ஏதோ மிதக்குது.." என்று கூச்சலிட்டான். ஊருக்குள் ஓடி போய் சொல்லவும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு கொஞ்ச நேரத்தில் குளக்கரையில் பெரிய கூட்டம் கூடிவிட்டது. பொலிஸ் அதிகாரி இருவரை குளத்தில் இறங்கி மிதப்பது என்னவென்று பார்க்க அனுப்பினார். சென்று பார்த்தவர்கள் "சேர் ரெண்டு பொடி கிடக்கிது.." என்று சத்தமிட்டனர். சடலங்கள் கரைக்கு கொண்டு வரப்பட்டன. "சேர் இவர் எங்கட ஏரியா ஜீ.எஸ்.. இவள் மாட்டுக்காரி மனோ.." என்றான் ஒருவன். "இது என்னடா புதினமா கிடக்கிது.. இதுகள் எப்பிடி இஞ்ச செத்துக் கிடக்கிதுகள்.." என்றாள் ஒரு வயதான பெண். சடலங்கள் அம்பியூலன்ஸ் வண்டியில் ஏற்றப்பட்டு பிரேத பரிசோதனைக்காக பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

கூட்டம் மெதுவாக கலைந்தது. அந்த இடத்தை ஆராய்ந்து கொண்டு நின்ற பொலிஸ் அதிகாரியின் கண்களில் சிவப்பு நிறத்தில் ஏதோ மிதப்பது போல தென்பட ஒருவரை உள்ளே இறங்கி பார்க்கும்படி அனுப்பினார். குளத்தில் இறங்க போனவன் சட்டென உள்ளே விழுந்தான். விழுந்தவன் முச்சுவாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீருக்குள் இருந்து எழும்பி "சேர் இவடம் பெரிய கிடங்கா கிடக்கு.. ஆழமா இருக்கு சேர்.." என்றவன் சிவப்பு நிறத்தில்

தெரிந்த துணியை பிடித்து இழுத்தான். "சேர் பொம்பிளட சாறி சேர் இது.." என்று சொல்லி அதை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். பொலிஸ் அதிகாரிக்கு அந்த இடத்தில் ஏதோ தவறு நடப்பது புரிந்தது.

அந்த குளம் இருந்த பகுதியை பாதுகாப்பற்ற பகுதியாக அறிவித்து பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு மக்கள் நடமாட்டத்திற்கு தடை விதிக்கப்பட்டது. விசாரணையில் அங்கு மணல் அகழ்வில் ஈடுபட்ட கும்பல் கைது செய்யப்பட்டனர். அந்த சட்டவிரோத செயலுக்கு அனுமதி வழங்கிய அதிகாரி உயிரோடு இல்லை என்பதால் சம்மந்தப்பட்ட ஏனைவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. ஊருக்குள் பலர் பல விதமாக பேசினார்கள். "உவள் மனோக்கு அவனோட தொடர்பு இருந்திருக்கு..". "அதில தான் பிள்ளைய கவனிக்காம திரிஞ்சிருக்கிறாள்.." என்றெல்லாம் நரம்பில்லா நாக்குகள் பேசின. சேகவனின் மனைவி "என்ட புருசன்ட மனச கெடுத்து என்ட வாழ்க்கைய நாசமாக்கிட்டாள்.. நீ நரகத்துக்கு

தான் போவயடி மாட்டுக்காரி.. சரியான விசரி.." என்று மனோகரியை ஆத்திரம் தீர திட்டித் தீர்த்தாள்.

மனோகரியின் உடலை பொறுப்பேற்க யாரும் வராததால் அந்த ஊரில் பல செயற்திட்டங்களை செய்துகொண்டிருந்த ஒரு பெண்கள் அமைப்பு அவள் சடலத்தை பொறுப்பெடுத்து அடக்கம் பண்ணினார்கள். சரியோ தவறோ இங்கு நடப்பது இவர்கள் பேசுவது எதுவுமே மனோகரியின் காதில் விழவில்லை. அவள் ஆத்மா அவளின் செல்ல மகளை தேடிப் போய்க்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியில் ஒரு க்ரைம்..

அந்தக் காட்டுப் பாதையின் இருளைக் கிழித்துக் கொண்டு தூரத்தில் ஒரு மெல்லிய வெளிச்சம் தெரிந்தது. பைக் ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது.. வேகமாக வந்து பைக்கை சரேலென பிரேக் போட்டு நிறுத்தினான் அகிலன்.

பைக்கை நிறுத்தி ஹெல்மெட்டை கழற்றி சீட்டில் வைத்துவிட்டு தலையை கோதியபடி யோசித்தான். அகிலன் பைக்கை நிறுத்தியதும் பின்னாலிருந்த அவனது நண்பன் ரஞ்சித் பைக்கிலிருந்து இறங்கி ஒரு வித குற்ற உணர்வோடு நண்பனை பார்த்தான்.

"ச்சேக்.. மிஸ் பண்ணிட்டம்டா.. இப்ப என்ன செய்யிறது..? "என்று பைக் சீட்டில் கையை முறுக்கி குத்தியபடி சொன்னான் அகிலன்.

"பேசாம நாங்க போய்டுவம்டா மச்சான்.. இது நமக்கு தேவையில்லாத வேலை போல.. கடவுளா பாத்து இப்படி செய்திட்டார்.." என்றான் ரஞ்சித்.

"எல்லாம் உன்னால தான்டா.. இப்ப எனக்கு இப்பிடியே போக மனசில்ல.. கொஞ்சம் பொறு யோசிப்பம்.." என்று சொல்லி அகிலன் வந்த வேலையை முடித்தே ஆக வேண்டுமென பிடிவாதமாக இருந்தான்.

இருவரும் நின்று யோசித்துக் கொண்டிருக்கையில் எதிர்திசையிலிருந்து தூரத்தில் விட்டு விட்டு எரிந்தபடி வெளிச்சம் ஒன்று அவர்களை நோக்கி வந்தது.

பைக்கில் லைட் அடித்து காட்டியபடி ஒருவன் வந்து அவர்கள் முன் பைக்கை நிறுத்தினான். வந்தவன் ஹெல்மெட் கண்ணாடியை உயர்த்தி "என்ன பொஸ் ஏதும் பிரச்சினையா..? இவடத்த நிக்கிறீங்க..? என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ.. இல்ல ஒரு பிரச்சினையும் இல்ல.. லோங் டிரவலிங்.. அதான் சும்மா ரெஸ்ட்க்கு நிப்பாட்டி இருக்கம்.." என்றான் அகிலன்.

"ஓ.. நான் பைக் ஏதும் பிரச்சினையோ என்டு நினைச்சு தான் நிப்பாட்டினன்.. சரி பாத்து போங்க.. கொஞ்ச தூரத்தில டிரபிக் பொலிஸ் நிக்கிறான்.. வழக்கமா அவடத்த நிக்கிறவங்கள் தான்.. இனி தெரியாதா வேற டிஸ்ரிக் வாகனம் என்டா நிப்பாட்டி ஒரு ஆயிரம் ஐநூறு கழட்டாம விடமாட்டாங்கள்.." என்று சொல்லி புன்னகைத்துவிட்டு அவன் பைக்கை முறுக்கிகொண்டு கிளம்பினான் தன்வழியில்.

"மச்சான் இப்ப என்னடா செய்வம்.." என்றான் ரஞ்சித்

தாடையை தடவியபடி யோசித்த அகிலன் திடீரென்று ஏதோ தோன்றியவனாய்

"டேய் அவங்கள் இந்த அர கிலோ மீற்றர் தூரத்துக்குள்ள தான் எங்கயோ இருக்கிறாங்கள்.." என்றான்

"எப்பிடிடா சொல்ற.." "இப்ப வந்தவன் சொன்னத கேட்டியா.."

"ஓம்... அவடத்த டிரபிக்காரன் நிக்கிறான் என்டு சொல்லிட்டு போறான்.. அதுக்கு என்னடா..?"

இன்னொன்டும் சொன்னானே.. கவனிச்சியா..?"

"ம்ம்... இல்லையேடா.. வேற ஒன்டும் சொன்ன மாதிரி தெரியலடா.."

"டேய்..உனக்கு மூளை இருந்தா தானே.. டிரபிக் பொலிஸ் வழக்கமா அவடத்த நிக்கிறவங்கள் என்டு சொன்னவன்டா கவனிச்சியா..?"

"ஓமடா..அதுக்கு..? என்று குழம்பினான் ரஞ்சித்.

டேய் இந்த ஊர்க்காரனுக்கு டிரபிக் பொலிஸ் இரவில அவடத்த நிப்பான் என்டு நல்லா தெரியும்.. அப்ப அவனுகள் இதுக்கு அங்கால போயிருந்தா பொலிஸ்ட மாட்டுவாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு தெரியும்.. சோ..இதுக்கு அங்கால போயிருக்க மாட்டாங்கள்..

இவடத்த இருந்து ஒரு அர கிலோ மீற்றர் தூரத்துக் முன்னுக்கு தான் நாம அவங்கள மிஸ் பண்ணினம்.. அப்ப இந்த இடையில இருக்க காட்டுக்குள்ள எங்கயோ தான் அவங்கள் போயிருக்கனும்.." என்று சொல்லி விட்டு அவசரமாக ஹெல்மெட்டை எடுத்து மாட்டிக் கொண்டு பைக்கை ஸ்டார்ட் பண்ணினான் அகிலன்.

ரஞ்சித் யோசித்துக் கொண்டு நிற்கவும்

"டேய்.. ஏறுடா குயிக்கா.. நாம லேட் பண்ண ஏலா.." என்று நண்பனை அவசரப்படுத்தினான்.

ரஞ்சித் பின்னால் ஏறிக்கொண்டான்.

அகிலன் பைக்கை வந்தவழியே திருப்பி முறுக்கினான்.அவன் சந்தேகப்படும் அந்த குறிப்பிட்ட தூரப்பகுதியில் ஆராய்ந்து கொண்டே பைக்கை மெதுவாக ஓட்டினான் அகிலன்.

இரண்டு பக்கமும் அடர்த்தியான மரங்கள் நிறைந்த காடு. இடையில் ஒரு குறுக்கு வழியும் தென்படவில்லை. கவனமாக பார்த்துக் கொண்டே வந்த அகிலன் திடீரென ஓரிடத்தில் பிரேக் போட்டு பைக்கை நிறுத்தினான்.

"மச்சான் என்னடா.." என்றான் ரஞ்சித்.

"டேய்..அவடத்த பாரன்.. அதால காட்டுக்குள்ள போகலாம்.." என்று சொல்லியபடி பைக்கிலிருந்து இறங்கினான். இறங்கி போய் பார்த்தவன்

"டேய் ரஞ்சித்.. இங்க பார்.." என்று நண்பனை அழைத்தான்.

ரஞ்சித் வரவும்

"இஞ்ச பார் இதால பைக் போயிருக்கு.. மணல்ல டயர் அடையாளம் இருக்கு பார்.."என்று கைபேசியில் டோர்ச்லைட் அடித்து காட்டினான் அகிலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவடத்த நிண்டு மினக்கட ஏலா.. வா போவம்.." என்று சொல்லிக் கொண்டு பைக்கை திருப்பினான் அகிலன்.

"மச்சான் இந்த காட்ட பாக்கவே பயமா கிடக்கடா.. எதுக்கும் யோசிடா ஒருக்கா.. இல்லாட்டி பொலிஸ்க்கு கோல் பண்ணுவம்.." என்றான் ரஞ்சித்.

"பொலிஸ்க்கு கோல் பண்ணி என்னடா சொல்லுற.. நமக்கே கன்போமா தெரியாது.. அதோட நீதானே சும்மா இருந்த என்ன இதுக்குள்ள இழுத்த..

வந்திட்டம் இனி முடிவு காணாம போக ஏலா.. ஏறுடா.." என்று சொல்லி நண்பனை ஏற்றிக் கொண்டு காட்டுக்குள் போகும் அந்த சிறிய ஒற்றை பாதைக்குள் பைக்கை முறுக்கினான் அகிலன். அந்த கும்மிருட்டைக் கிழித்துக் கொண்டு காட்டுப் பாதைக்குள் பாய்ந்தது அகிலனின் பைக்.

மணலில் பைக்கை ஓட்டுவது கொஞ்சம் சிரமமாக இருந்தாலும் கூட ஏற்கனவே அந்த பாதையால் வாகனம் போனதற்கான டயர் அடையாளம் மணலில் தெளிவாக தெரிந்தது. பைக்கின் வேகத்தை கொஞ்சம் குறைத்த அகிலன்

"டேய் இந்த டயர் அடையாளத்த கவனிச்சியா..மூன்டு பைக் போயிருக்கடா ஏற்கனவே.." என்றான் ரஞ்சித்திடம்

"ஐயோ மச்சான் நிப்பாட்டுடா.. மூன்டு பைக் என்டா எப்பிடியும் ஆறேழு பேர் இருப்பாங்கள்.. நாங்க ரெண்டு பேர் எப்படியடா சமாளிக்க ஏலும்..திரும்பி போயிடுவம்டா.. " என்றான் ரஞ்சித்.

"டேய் தைரியமா இருடா.. சமாளிப்பம்.." என்றான் அகிலன்.

"சும்மா போடா.. என்னில தான் பிழை.. நான் பேசாம இருந்திருக்கலாம்.. என்ர வாயால இப்ப வீண்பிரச்சினைல மாட்ட போறம்.. சரி என்ர கதைய விடுடா..

எனக்கு பிறகு வீட்ட அப்பா அண்ணன்மார் எல்லாரும் இருக்கிறாங்க..ஆனா உங்கட வீட்ட நீ இல்லாட்டி எப்பிடியா.. உனக்கு ஏதும் நடந்திட்டா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லி நண்பனின் மனதை மாற்றி திரும்பி போய்விட முயற்சித்தான் ரஞ்சித்.

உண்மைதான் அகிலன் தனது பதினேழாவது வயதில் தந்தையை இழந்த போது குடும்பத்தை பாதுகாக்கும் பெரிய பொறுப்பு வீட்டில் மூத்த பிள்ளையான அவன் கையில் வந்தது.

அம்மாவையும் இரண்டு தங்கைகளையும் பாதுகாக்கும் பெரிய பொறுப்பும் தந்தையின் எதிர்பாராத இழப்பும் அவனை பெரிதும் பாதித்தது. அந்த கவலையில் அவனால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. உயர்தரத்தில் முழுமையான சித்தி கிடைக்கவில்லை.

உயர்தரம் முடிந்த கையோடு கிடைந்த வேலைகளுக்கெல்லாம் போனான். பாதி நாள் சரியான சாப்பாடும் தூக்கமும்" இல்லாமல் உழைத்தான்.

அகிலன் கிரிக்கெட் விளையாட்டில் கெட்டிக்காரன் பாடசாலை நாட்களில். தன்னுடைய விளையாட்டு சான்றிதழ்களை வைத்துகொண்டு கிரிக்கெட் பயிற்றுவிப்பாளருக்கான கற்கையை கற்றான் பகுதி நேரமாக வேலை செய்து கொண்டு. கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராக வேலையில் சேர்ந்தான்.

அதன்பின் அவன் வாழ்க்கை பாதை மாறியது. ஒரு பயிற்றுவிப்பாளராக தனது துறையில் மேலும் முன்னேறி தனக்கென ஒரு இடத்தை பிடித்தான்.

இன்று அவன் மாவட்டத்தின் தலைமை பயிற்றுவிப்பாளராக பணியாற்றுகிறான்.
அனைத்து மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களுக்குமான ஒரு நாள் பயிற்ச்சிபட்டறைக்கான அழைப்பு அகிலனுக்கு வந்திருந்தது.

வார இறுதியில் அந்த பயிற்சிபட்டறை நடைபெறுவதால் தனியாக போகாமல் நண்பனோடு போய் வரலாம் என்று யோசித்து நண்பன் ரஞ்சித்திடம் கேட்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான் எனக்கும் லீவு தானேடா.. போவம்..பட் பைக்ல போவம்டா.. அதான் செம பீலா இருக்கும்.." என்று ஐடியா கொடுத்தான் ரஞ்சித்.

சரி என்று இருவரும் கிளம்பினார்கள். போன வேலை முடிந்து இருவரும் வெளிக்கிட்ட போது

"வீட்ட போய் சேர எப்பிடியும் விடியச்சாமம் ஆகும்டா.. சாப்பிட்டே வெளிக்கிடுவம்.. நல்லா ஹோட்டலா பாத்து நிப்பாட்டு மச்சான்.." என்றான் ரஞ்சித்.

இருவரும் சாப்பிடவென்று ஒரு ஹோட்டலில் நுழைந்தார்கள்.

"அகில் நீ சாப்பாடு ஓடர்பண்ணுடா.. நான் வொஸ்ரும் போய்ட்டு வாறன்.." என்று சொல்லி விட்டு எழுந்தான் ரஞ்சித்.

கழிவறை இருக்கும் இடத்தை ஹோட்டல் ஊழியரிடம் கேட்டு தெரிந்து கொண்டு உள்ளே போனான் ரஞ்சித். அந்த சொகுசு ஹோட்டலின் கழிவறை பகுதியில் வரிசையாக இருந்த நான்கைந்து அறையில் ஒன்றினுள் நுழைந்தான்.

அவன் பாட்டுக்கு போன வேலையை பார்த்துக் கொண்டிருந்தான். அடுத்த கதவு திறக்கும் சத்தம் கேட்டது அதன்பின் ஹலோ என்று ஆரம்பித்து ஒருவன் கைபேசியில் பேசிக்கொண்டிருப்பது ரஞ்சித்துக்கு கேட்டது.

"எப்பப்பா இங்கயும் வந்து போன் தான் கதைக்காறனுகள்.." என்று அலுத்துக் கொண்டு வந்த வேலையை முடிந்துவிட்டு கதவை திறக்க போனவனின் காதில் விழுந்த தகவல் அவனை அப்படியே நிறுத்தியது.

கதவை திறக்காமல் மூச்சு விடும் சத்தமும் கேட்காமல் நின்று பக்கத்து கழிவறையில் இருந்து வந்த குரலை கேட்டான். முழுவதையும் கேட்ட ரஞ்சித்துக்கு பதட்டத்தில் தலைசுற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வதென்று யோசித்தவன் எப்படியும் அந்த குரலுக்குரியவனின் முகத்தை கண்டிப்பாக பார்த்தே ஆக வேண்டும். பார்த்தால் தான் அடுத்து ஏதாவது செய்ய முடியும்.

அவனை தொடர்ந்து போவதென்றாலும் ஆளைப் பார்த்தால் தான் போகலாம்.. ஆனால் இப்ப வெளிய போனா அவன் கதைச்ச எல்லாத்தையும் நான் கேட்டுட்டன் என்டு தெரிஞ்சிடும்..

பிறகு.. சத்தமே இல்லாம இங்கயே என்ர கழுத்த அறுத்து போட்டுட்டு போயிடுவான். என்ன செய்யலாம்..“என்று யோசித்த ரஞ்சித் பாண்ட் பொக்கற்றிலிருந்து கைபேசியையும் இயர்போனையும் எடுத்தான்.

இயர்போனைஎடுத்து கைபேசியில் மாட்டி போனில் பாட்டை போட்டு காதில் மாட்டினான்... பெருமூச்சொன்றை விட்டு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கதவை திறந்து வெளியே வந்தான்.

கைகளை கழுவியபடி அங்கேயே நின்றான் தான் கேட்ட குரலுக்குரியவன் வெளியே வரும்வரை.

கதவை திறந்து ஒருவன் வெளியே வந்தான் ரஞ்சித் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு திரும்பி அவன் முகத்தை தற்செயலாக திரும்பிப் பார்ப்பது போல் தெளிவாக பார்த்து புன்னகைத்து விட்டு அங்கிருந்து இயல்பாக வெளியேறினான்.

வெளியே வந்த ரஞ்சித் வேகமாக அகிலனுக்கு பக்கத்தில் வந்து இருந்தான். நண்பனோடு சாதாரணமாக உரையாடுவது போல் முகத்தை வைத்துக் கொண்டு

“அகில் உள்ள ஒருத்தன் நிண்டு போன் கதைச்சிட்டு நிக்கான்டா.. கொலை பண்ண போறானாம்..“ என்றான்.

“டேய் என்னடா சொல்ற.. யார் ஆக்கள்..? எவடத்த..? என்று கொஞ்சம் பதட்டத்தோடு அகிலன் கேட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான்.. மெதுவா கதடா.." என்று சொல்லி உள்ளே தான் கேட்ட அனைத்தையும் அகிலனிடம் கூறினான் ரஞ்சித். முழுவதையும் கேட்ட அகிலன்

"டேய் வடிவா கேட்டியா..? உண்மையா..? இல்லாட்டி குடிச்சிட்டு சும்மா ஒருத்தன் வெட்டுவன் கொத்துவன் எண்டு கத்திட்டு நின்டத கேட்டு கன்பியூஸ் ஆகிட்டியா..? என்றான்

"இல்லடா தெளிவா கேட்டன்.. ஆக்கள் பொலிட்டிக்கல் பக்ரவுண்ட் உள்ளவங்கள் எண்டு தெரிஞ்சிது.." என்று ரஞ்சித் சொல்ல

"எல்லாம் சரிடா.. ஆனா நாம என்ன செய்ய ஏலும்..? யார் ஆக்கள் எண்டு தெரியல.. அந்த கேர்ள் யாரெண்டும் தெரியா.. இது வேற டிஸ்ட்ரிக்ட் டா மச்சான்..

நம்மட ஊர் எண்டா பரவால்ல ஓரளவுக்கு ஆக்கள தெரியும்..தெளிவா ஒண்டும் தெரியாம பொலிஸ்ல சொல்லவும் ஏலா.. " என்றான் அகிலன்

இருவரும் மௌனமாய் யோசித்தனர்

"சரி விடுடா.. நாங்க சாப்பிட்டு வெளிக்கிடுவம்.. அப்பிடி ஏதும் எண்டா பொலிஸ்க்கு எல்லாம் தெரியாமலா போகும்.." என்றான் அகிலன்

"ஆமா..பொலிஸ் கடைசியா போய் செத்த பொடிய தானேடா கண்டுபிடிப்பாங்க.. பேசாம வெளிக்கிட மனசில்ல மச்சான்.." என்று கவலைப்பட்டான் ரஞ்சித்.

இருவரும் சாப்பிட்டு முடித்து வெளியே வந்தார்கள். அகிலன் பைக்கில் ஏறி உட்கார்ந்து

"ரஞ்சித் .. அவன் வெளில போய்ட்டானா..? என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லடா உள்ள தான் இருக்கிறான்.." என்று ரஞ்சித் சொல்லி முடிக்கவும் ரஞ்சித் குறிப்பிட்ட அந்த தொலைபேசி உரையாடலுக்கு சொந்தக்காரன் வெளியே வந்தான்.

ரஞ்சித் அகிலனிடம் திரும்பி "மச்சான் அவன்தான் ஆள்.. அந்த ரெட் கலர் ரீசேட்.." என்டு கண்ணசைவில் ரகசியமாக சொன்னான்.

தற்செயலாக அந்த பக்கம் திரும்புவது போல் திரும்பி ரஞ்சித் அடையாளம் காட்டியவனை அகிலன் பார்த்தான்.அதே நேரம் அவ்விடத்திற்கு வேகமாக ஒரு பைக் வந்து நின்றது.

இவர்கள் இருவரும் கண்காணித்துக் கொண்டு நின்றவன் அந்த பைக்கில் ஏறினான்.

வந்த பைக் அங்கு நின்றவனை ஏற்றிக் கொண்டு மின்னல் வேகத்தில் பறந்தது. அவசரமாக ஹெல்மெட்டை எடுத்து மாட்டிய அகிலன்

"மச்சான் குயிக்கா பைக்கை எடுடா.. அவனுக்கு பின்னாலயே போ.." என்று சொல்லி வேகமாக நகர்ந்து பின் சீட்டில் அமர்ந்தான்.

அகிலன் சொன்ன வேகத்தில் ஒரே எட்டில் தாவி பைக்கில் ஏறிய ரஞ்சித் ஹெல்மெட்டை போட்டுக் கொண்டு பைக்கை முறுக்கினான். பைக் அந்த பிரதான வீதியில் சீறிப் பாய்ந்தது.

அகிலனும் ரஞ்சித்தும் அவர்களை பின் தொடர்ந்தார்கள்.

பிரதான வீதி என்றாலும் இரண்டு பக்கமும் அடர்ந்த காட்டுப்பகுதி. வேறு மாவட்டங்களில் இருந்து வரும் வாகனங்கள் இந்த வீதியால் தான் உள்நுழைய வேண்டும்.

அதனால் அந்த வீதியில் வாகன போக்குவரத்து அதிகமாகவே இருக்கும். இருவரும் அவர்களை பின்தொடர்ந்து கொண்டே போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நேரம் ரஞ்சித்தின் கைபேசி சிணுங்கியது. யாரோ அழைக்கிறார்கள் யார் என்று பார்க்கவென பைக்கின் வேகத்தை குறைத்தான் ரஞ்சித்.

பின்னாலிருந்த அகிலன் ரஞ்சித்தின் முதுகில் தட்டி "என்னடா.." என்றான்

"மச்சான் போன் அடிக்கிதுடா..பொறு யாரெண்டு பாக்கிறன்.." என்று பைக்கை நிப்பாட்டினான்.

"டேய் விசராடா உனக்கு.. இப்ப போனா முக்கியம்.. அங்க பார் அவங்கள மிஸ் பண்ண போறம்.. பைக்க எடடா.." என்று அவசரப்படுத்தினான்.

ரஞ்சித் கைபேசியை வைத்துக் கொண்டு தடுமாறவும்

"என்னடா.. நீ..இறங்கு.. " என்று சொல்லி ரஞ்சித்தை பின்னால் ஏற்றிக் கொண்டு அகிலன் பைக்கை மீண்டும் முறுக்கினான்.

பைக்கின் வேகத்தை அதிகரித்தான். ஆனாலும் அவர்களை பின்தொடர முடியாமல் தவறவிட்டார்கள்.

அகிலன் அவ்வளவு எளிதில் எந்த பிரச்சினையிலும் தலையிட மாட்டான். என்ன என்றாலும் சரி முடிந்தவரை பொறுத்து போகலாம் சமாதானமாக போகலாம் என்பதே அவனுடைய எண்ணம்.

ஆனால் அதுவே கைமீறிப் போகுமாக இருந்தால் அவன் எடுக்கும் நடவடிக்கைகள் அந்த பிரச்சினைக்கு ஒரு முடிவுகட்டிவிட்டு தான் அடங்கும்.

இதுவும் கூட அப்படிதான் ரஞ்சித் சொன்னபடி அங்கு ஒரு கொலை நடக்க போவது உண்மை என்றால் அதை தடுத்து நிறுத்த என்று அவன் முடிவெடுத்து தான் அவர்களை பின்தொடர்ந்தான்.

ஆனால் இப்போது அவர்களை தவறவிட்ட காரணத்திற்காக தன் முடிவிலிருந்து பின்வாங்க அவனால் முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வழியாக அவர்கள் போன பாதையை கண்டு பிடித்து நண்பனோடு அந்த அடர்ந்த காட்டுக்குள் முன்னேறினான் அகிலன்.

அடர்ந்த காட்டைக் கிழித்துக் கொண்டு அந்த ஒற்றையடிப் பாதை நீண்டு கொண்டே போனது. கொஞ்சதூரம் போக அகிலன் பைக்கை நிறுத்தினான்.

"அகில்.. ஏன்டா பைக்க நிப்பாட்டிட்ட..." என்று ரஞ்சித் கேட்க

"டேய்..கத்தாதடா.. மெதுவா கதை..

எனக்கென்னவோ இதுக்கு மேல நாம நடந்து போறது தான் சரி எண்டு தோணுது..

ஒரு வேள அவங்கள் பக்கத்தில தான் இருக்கிறாங்கள் என்டா பைக் சத்தம் கேட்டால் சிக்கல்.." என்று சொல்லி பைக் சாவியை திருகி பைக்கின் ஸ்டார்ட்டை அணைத்தான் அகிலன்.

"மச்சான் கொஞ்சம் பயமா இருக்குடா.."என்று ரஞ்சித் தயங்கி நிற்கவும் "டேய் இவடத்த நிண்டு மினக்கட ஏலாடா.. குயிக்கா போவம் வா.. பாத்து வா.." என்று சொல்லியபடி முன்னோக்கி நடந்தான் அகிலன்.

அகிலனும் ரஞ்சித்தும் ஒரு அரை கிலோ மீற்றர் தூரம் நடந்திருப்பார்கள்.

கண்ணுக்கு எட்டிய தூரத்தில் ஒரு சிறிய வெளிச்சம் தெரிந்தது. இருவரும் நடையை தளர்த்தி அந்த சிறிய பாதையில் நடக்காமல் மரங்களுக்கு பின்னால் மறைந்து காட்டுப் பற்றைக்குள் இறங்கி நடந்தார்கள்.

அகிலன் பின்னால் வந்து கொண்டிருக்கும் ரஞ்சித்தை எச்சரித்தபடி முன்னோக்கி நடந்தான்.

இருவரும் அவர்களை நெருங்கி விட்டிருந்தார்கள்.

அது அரைவாசி கட்டியபடி கைவிடப்பட்ட நிலையில் கிடக்கும் ஒரு கட்டிடம். இருவரும் கட்டிட சுவரின் பின்னால் ஒளிந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான் நடுக்காட்டுக்குள்ள எவனோ கிறுக்கன் பில்டிங் கட்டிட்டு பாதில விட்டுட்டு ஓடியிருக்கான்டா.." என்று அகிலனின் காதில் கிசுகிசுத்தான் ரஞ்சித்.

"டேய்.. சும்மா இருடா.." என்று நண்பனை கடிந்துகொண்டு மெல்ல தலையை நீட்டி கட்டிடத்தின் முன் பக்கமாக எட்டிப் பார்த்தான் அகிலன்.

அங்கு நடுவில் ஒரு சார்ஜர் லைட் ஒளிர்ந்து கொண்டிருந்தது. ஐந்து பேர் சுற்றி இருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஐவரும் இருபது தொடக்கம் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இளைஞர்கள்.

அதில் ஒருவன் ஒரு சிறிய பேப்பர் துண்டை பிரித்து அதிலிருந்து எதையோ கையில் கொட்டி உள்ளங்கையில் வைத்து தேய்த்து மூக்கால் உறிஞ்சினான்.

அகிலன் ரஞ்சித்திடம் திரும்பி "அவங்கள் ட்ரக்ஸ் பாவிக்கிறாங்கள்டா.. ம்ம்.. ஆனா நீ சொன்ன மாதிரி கேர்ள் யாரும் இல்லையேடா அவடத்த.." என்றான்.

"வடிவா பாருடா.. போன்ல அவன் அப்படி தான் கதைச்சவன்..

அதோட அவன் கதைச்சதில முக்கியமான விசயம்.. இண்டைக்கு அவள சீரழிச்சு கொன்னு புதைக்கனும்டா.. இல்லாட்டி என்ர ஆத்திரம் அடங்காது.. என்டு தான் போன்ல கத்திட்டு நின்டவன்..." என்று ரஞ்சித் சொல்ல

ஒரு முறை யோசித்த அகிலன் "நீ இவடத்தயே நில்லு.. அவங்கள வோட்ச் பண்ணிட்டே இரு...

நான் பின்பக்கத்தால போய் பாக்கிறன்.." என்று மெல்ல நகர்ந்து சுவரோடு உரசியபடி கட்டிடத்தின் பின்பக்கம் போனான். அந்த கட்டிடத்தின் பின்பக்கம் ஒரு ஜன்னல் தெரிந்தது. அகிலன் அந்த ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். உள்ளே ஒரு பெண்ணை கட்டிப் போட்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலனும் ரஞ்சித்தும் இந்த இடத்திற்கு வருவதற்க்கு நீண்ட நேரத்திற்கு முன் அவளை இங்கு கொண்டு வந்திருக்க வேண்டும் என்று அகிலனுக்கு தோன்றியது.

அவளை நீண்ட நேரமாக அடித்து துன்புறுத்தியிருக்கிறார்கள் போலும். கன்னம் சிவந்து வீங்கிப் போயிருந்தது. தலைமுடி உடை எல்லாம் கலைந்து கசங்கி களைத்து போய் கிடந்தாள்.

அகிலன் வந்தவழியே மெல்ல ரஞ்சித்திடம் திரும்பி வந்தான். அகிலன் வரவும் ரஞ்சித் அவனை கேள்வியாய் பார்க்கவும்.

"ஓமடா..உள்ள ஒரு கேர்ள் இருக்கிறாள்.. சின்ன பிள்ள போல தான் இருக்கு.. நல்லா அடிச்சு கொடுமைப்படுத்தியிருக்காங்கள் போல.." என்றான் அகிலன்.

"அடுத்து என்ன மச்சான் செய்ய போறம்...? ஐஞ்சு பேரையும் சமாளிக்க ஏலுமாடா..? என்றான் ரஞ்சித்.

தாடையை தடவியபடி யோசித்த அகிலன் "கொஞ்சம் வெயிட் பண்ணுவம்டா.. அவங்கள் குடிக்கிறாங்கள்.. ட்ரக்ஸ் எடுக்கிறாங்கள்.. ஆக்கள் கொஞ்சம் வெறி ஏறட்டும்.. அவங்கள் குடிச்சு முடிக்கிறவரைக்கும் வெயிட் பண்ணுவம்..? என்றான் அகிலன்.

"ஆனா மச்சான் அதுக்கிடையில அந்த கேர்ள்ல கை வச்சிட்டாங்கள் என்டா..?" என்று ஒருவித பயத்தோடு ரஞ்சித் கேட்கவும்.

"அப்பிடி நடந்தா ரிஸ்க் எடுக்க தான் வேணும்.. வேற வழியில்ல.." என்றான் அகிலன் யோசனையோடு நண்பர்கள் இருவரும் காத்திருந்தார்கள். கொஞ்ச நேரம் போக சிரிப்பு சத்தமும் கதைக்கும் சத்தமும் பலமாக கேட்டது.

அகிலன் மெல்ல எட்டிப் பார்த்தான். அவர்கள் ஏதோ சொல்லி சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அதில் ஒருவன் ஏதோ சொல்லிவிட்டு எழுந்து உள்ளே போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரஞ்சித் ஒருத்தன் உள்ள போறான்.. இனி வெயிட் பண்ணி சரி வராது.. நீ மறைஞ்சு நிண்டே கவனி... நான் அந்த பக்கம் போறன்.." என்று சொல்லி பின்பக்கமாக ஓடி அங்கிருந்த ஜன்னல் வழியே ஏறி உள்ளே பாய்ந்தான் அகிலன்.

கட்டிப்போட்டிருந்த பெண்ணை நெருங்கியவனை அகிலன் பாய்ந்த வேகத்தில் அவன் வாயை கைகளால் பொத்தி இழுந்து அடித்தான்.

நீண்ட நேரம் அவன் வாயை தன் கைகளால் பொத்தியபடி சத்தம் போடாமல் நின்றான் அகிலன்.

நேரம் போக போக அவனிடம் ஒரு அசைவும் இல்லை. அகிலன் அவனை சுவர் ஓரமாக சாய்த்து கிடத்தினான்.

ஓடிப்போய் அந்த பெண்ணை தட்டி எழுப்பினான். கண்விழித்து பார்த்த அந்த பெண் திணறினாள்.

"தங்கச்சி சத்தம் போடாதீங்க.. ப்ளீஸ்.. உங்கள காப்பாத்த தான் வந்திருக்கிறன்.." என்று சொல்லி

அகிலன் அவள் கட்டுகளை அவிழ்த்து அவளை தூக்கி ஜன்னல் வழியா வெளியே அனுப்பினான்.

பின் தானும் ஜன்னல் வழியே பாய்ந்து வெளியேறினான் .

அகிலன் அந்த பெண்ணோடு வரவும் ரஞ்சித் பயத்தோடு ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"அவங்கள் எங்கடா.. : என்றான் அகிலன்.

"இன்னும் குடிச்சு முடியலடா அவங்கள்.." என்று ரஞ்சித் சொல்ல இருவரும் மெல்ல எட்டிப் பார்த்தார்கள்.

அப்போது ஒருவன் எழுந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி கத.. இப்ப அவன் உள்ள போனானோ.. அவ்வளவு தான்.. அகிலனுக்கும் ரஞ்சித்துக்கும் இதயத்துடிப்பு அதிகமானது.

அடுத்து என்ன செய்யவென்று அகிலன் யோசிக்க..

"மச்சான் அவன் வேற என்னத்துக்கோ எழும்பியிருக்கிறான்டா.. அங்க பார் பத்தைக்க போறான்..: என்றான் ரஞ்சித்.

"அவன் திரும்பி வரக்குள்ள நாம இவடத்த இருக்க கூடாது..

நீ வேகமா போ.. பைக்க உருட்டி மெயின் ரோட்டுக்கு எடு.. ஓடுடா.. குயிக்கா..

நான் இந்த கேர்ள கூட்டிட்டு வாறன்... ஓடு... ஓடு.. " என்று அவசரப்படுத்தினான் அகிலன்.

ரஞ்சித் வேகமாக முன்னால் போக "சொறி தங்கச்சி.. இப்ப உயிர் தான் முக்கியம்.." என்று சொல்லி அந்த பெண்ணை தூக்கி தன் தோள்களில் போட்டுக்கொண்டு வேகமாக ரஞ்சித்தை பின்தொடர்ந்தான் அகிலன்.

அகிலனும் ரஞ்சித்தும் அந்த பெண்ணை கூட்டிக்கொண்டு பிரதான வீதிக்கு வந்து விட்டனர்.

அகிலன் கைகடிகாரத்தை பார்த்தான் நேரம் நள்ளிரவு 01.15 ஐ காட்டியது. அகிலனுக்கு அவளைத் தூக்கிக் கொண்டு வந்தது மூச்சு வாங்கியது.

"மச்சான் இப்ப பொலிசுக்கு கோல் பண்ணி சொல்லுவம்.." என்றன் ரஞ்சித்.

"டேய்..சொல்றத செய்யடா.. பைக்கை எடு முதல்.." என்று அவசரப்படுத்தினான் அகிலன்.

ரஞ்சித் பைக்கை ஸ்டார்ட் பண்ணினான். அகிலன் நடுவில் இந்த பெண்ணை ஏற்றி பின்னால் ஏறி அமர்ந்தான்.

ரஞ்சித் பைக்கை முறுக்கினான் அது மின்னல் வேகத்தில் சீறிப்பாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும் வழியில் அந்த பெண்ணிடம் என்ன பிரச்சினை என்று அகிலன் கேட்டான்.

அந்த பெண்ணின் தகப்பனார் ஒரு மாகாணசபை உறுப்பினராக இருக்கிறாராம் அவரிடம் முதல் வேலை பார்த்த ஒரு இளைஞன் அவருக்கு மிகவும் நம்பிக்கைக்குரியவனாக இருந்திருக்கிறான்.

அதன்பின் யாரோ காட்டிய பணத்தாசையில் முதலாளிக்கு துரோகம் செய்திருக்கிறான். துரோகத்தை கண்டுபிடித்த முதலாளி அவனை மிகக்கேவலமாக அவமானப்படுத்தி வேலையை விட்டு துரத்தியிருக்கிறார்.

அவமானப்பட்டவன் சும்மா இருப்பானா? இப்போது பழைய முதலாளியையும் விட பெரிய அரசியல் புள்ளியிடம் நம்பிக்கைக்குரிய சேவகனாகி அந்த பின்னணியை வைத்துக் கொண்டு பழைய முதலாளியை பழிதீர்க்க அவரின் மகளை கடத்தியிருக்கிறான்.

என்று சொல்லி அந்த பெண் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

அவளிடம் விசாரித்து அவள் வீடு இருக்கும் குறுக்கு வீதிக்குள் பைக்கை திருப்பும் போது அவள் வீட்டுக்கு முன்னால் நிறைய ஆட்கள் நின்றிருந்தனர்.

"என்னை காணல என்டு வீட்ட பிரச்சினை போல.. ம்ம்ம்.. அண்ணா.. வாங்க நான் அப்பாட்ட சொல்லுறன் நீங்க தான் என்ன காப்பாதினீங்க எண்டு.." என்றாள் அவள்.

ரஞ்சித் ஏதோ சொல்ல வாயெடுக்க அவனை இடைமறித்து

"இல்ல தங்கச்சி.. நாங்க இப்ப வீட்ட வெளிக்கிடணும்.. நல்லா நேரம் போயிட்டு.. நீங்க போங்க.. ஒரே ஊர் தானே பிறகு சந்திப்பம்.." என்று சொல்லி அவளை அனுப்பினான் அகிலன்.

போகும் முன் "ரொம்ப தாங்ஸ் அண்ணா.. என்று அகிலனின் காலில் விழுந்தாள் அழுதபடி அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலன் அவள் தலையை தடவி "கேர்ஸ் எப்பவும் அவதானமாவும் கவனமாவும் இருந்து பழகனும்.. டேக் கேர்.." என்றான்.

அவள் வீட்டினுள் நுளைந்து விட்டதை ஒழுங்கையின் தொடக்கத்தில் நின்று பார்த்து உறுதி செய்துவிட்டு "பைக்க எடுடா.. வெளிக்கிடுவம்.." என்றான் அகிலன்.

போகும் வழியில் ரஞ்சித் அகிலனிடம் "மச்சான் ஏனடா பொலிஸ்ட சொல்ல வேணாம் என்ட.. பொலிஸ் வந்திருந்தா அவங்கள அரஸ்ட் பண்ணியிருப்பாங்க தானே..? என்றான்.

"டேய் நாம அந்த இடத்துக்கு போன உடனயே பொலிசுக்கு கோல் பண்ணியிருக்கனும்..

எனக்கு அந்த கேர்ள காப்பாத்துறது தான் மைண்ட்ல இருந்தது.. அதால பொலிஸ் பத்தி தோணல.."

அதுக்கு பிறகு பொலிஸ்ட்ட சொல்லி இருந்தா நமக்கு தான் சிக்கல்.. " என்றான் அகிலன்.

"ஏன்டா..? நமக்கு என்ன சிக்கல்..? என்றான் ரஞ்சித்.

"அந்த உள்ள ஒருத்தன் போனானே.. அவன அடிச்சு போட்டுட்டு தானே அந்த கேர்ள வெளில கூட்டிட்டு வந்தன்..

அவன் ஓவரா ட்ரக்ஸ் பாவிச்சிருக்கான்.. நான் வேற முறையான இடங்கல்ல அடிச்சன்..

அவன் ஹாட் பீட் ரொம்ப லோவா இருந்தது.. எப்பிடியும் செத்துடுவான்.." என்றான் அகிலன்

சடாரென பிரேக் போட்டு பைக்கை நிறுத்தினான் ரஞ்சித்.

"மச்சான் அகில்.. அப்ப அது கொலையாடா.." என்றான் படபடப்போடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் சும்மா இருடா.. வேணுமெண்டு யார் கொலை பண்ணினது? என்ர கெஸ்எமிங் அவன் செத்துடுவான் என்டுறது..

நாம இத செய்திருக்காட்டி அந்த சின்ன பிள்ளைட உடம்பு நிர்வாணமா சிதைஞ்சு சீரழிஞ்சு கிடந்திருக்கும்..

பிறகுஅவள அண்டைக்கு காப்பாத்திபிருக்கலாமே என்டுற குற்றஉணர்ச்சி வாழ்க்கை முழுக்க இருக்கும்..

எனக்கும் தங்கச்சி இருக்குடா.." என்றான் அகிலன் கவலை தோய்ந்த குரலில்.

"ஆமாடா ஒருத்தனோட விட்டிருக்க கூடாது.. அஞ்சு பேரையும்.. கொன்னு புதைச்சிருக்கனும்.." என்றான் ரஞ்சித் ஆத்திரத்தோடு.

"சரி.. அப்ப வா திரும்பி போவம் காட்டுக்குள்ள.. எப்பிடியும் அவனுகள் அங்க தான் தேடிட்டு நிப்பாங்கள்.." என்றான் அகிலன் நக்கலான.

"டேய் ஒரு பேச்சுக்கு.. ஒரு ஆதங்கத்தில சொன்னன்டா.." விட்டா திரும்பவும் அங்க கூட்டிட்டு போயிடுவ..

ஒருக்கா போய் பட்டதே காணும்.. ஹாட் இப்ப தான் துடிக்குது.. இப்பிடியே வீட்ட போயிடுவம்.. " என்று சொல்லி பைக்கை முறுக்கினான். கொஞ்ச தூரம் போக இடையில் இரண்டு பேர் நின்று மறித்தார்கள். பைக்கை நிப்பாட்டிய ரஞ்சித்துக்கு மரணபயம் தொற்றிக் கொண்டது.

எதிரில் நின்றது காட்டில் இவர்கள் கண்ட ஐவரில் இருவர்.

அகிலன் உடனே சமாளித்து கீழே இறங்கி "என்ன பொஸ்.. ஏதும் பிரச்சினையா.. ?" என்றான் இயல்பாக

அதில் ஒருவன் "நீங்க வரக்குள்ள இங்கயிருந்து ஏதும் வாகனம் போனதா..? ஒரு நாலஞ்சு பேர்... ஒரு பொம்பிள பிள்ள.. அப்பிடி.. யாரும்.. கண்டனீங்களா..? என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலஞ்சு பேர் என்று அவன் கேட்டது அகிலனுக்கும் ரஞ்சித்துக்கு சிரிப்பை வரவழைத்தது.

ரஞ்சித் இருமிக்கொண்டு மறுபக்கம் திரும்பிக் கொண்டான். அகிலன் "இல்லையே... எங்கள குறஸ் பண்ணி எந்த வாகனமும் போகலயே.. "என்றான் தடையை தடவியபடி யோசிப்பது போல் நின்று.:

"ஏன் பொஸ் ஏதும் ஹெல்ப் பண்ணனுமா.." என்றான் அகிலன்."தேவையில்ல நீங்க வெளிக்கிடுங்க.." என்றான் அவன் கடுமையான குரலில்.

அகிலன் முன்னால் ஏறினான் ரஞ்சித் பின்னால் ஏறிக் கொண்டதும் பைக்கை முறுக்கினான்.

"அவங்க எங்கயும் போயிருக்க முடியாது... எப்பிடி தப்பிச்சாள்... எப்பிடியும் இந்த காட்டுக்குள்ள தான் இருப்பாங்க.. தேடுங்கடா.. "என்று ஆத்திரத்தோடு கத்தும் குரல் காற்றோடு கலந்து வந்து அந்த நண்பர்கள் இருவரின் காதுகளிலும் விழ

"மச்சான் இன்னும் இவனுகள் இந்த காட்டுக்குள்ள இருப்பாங்கன்னா நம்பிட்டு இருக்கானுகள்.." என்று சொல்லி ரஞ்சித் சிரிக்க அகிலனும் அவனோடு சேர்ந்து சிரித்தான்.

**முற்றும்.**

(அரங்கம் பத்திரிகை இணையத்தளத்தில் பதிவிடப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் பற்றி...



கிழக்கு மக்கள் மத்தியில் ஊடக கலாச்சாரத்தை மேம்படுத்தும் நோக்கில், அரங்கம் பத்திரிகையை இலவசமாக நாம் பிரசுரிக்க வந்த போது, அங்கு ஊடகங்களுக்கு எழுதுபவர்களைக் கண்டுபிடிப்பதே மிகவும் சிரமமாக இருந்தது. அதிலும் கதையோ, கட்டுரையோ, கவிதையோ எதனையும் ஆக்கபூர்வமாக ஒரு ஊக்கத்துடன் எழுத முன்வருவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

ஆனால், தானாக முன்வந்து கதைகளை எழுதினார் சோமசுந்தரம் சபீனா. அவரது எழுத்துக்கள் இலங்கையின் பல கோடிகளிலும் இருக்கும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை பிரதிபலிப்பதாக அவற்றுக்கு தீர்வு காணமுனைவதாக இருந்தன.

தனது கதையின் தலைமைப்பாத்திரத்தை எப்போதும் ஒரு சமூகப் பிரச்சினைகளை துணிவுடன் எதிர்கொள்ள முயலும் ஒருவராக அமைத்து தனது கதைகளை புனைவது சபீனாவின் பாணி. அவரது ஒவ்வொரு சிறு-கதையும் ஒரு செய்தியை நிச்சயமாக தன்வசம் கொண்டிருக்கும். கதைகள் குறித்த விமர்சனங்களை முறையாக உள்வாங்கி அவற்றை தனது அடுத்த கதைகளில் சேர்க்கும் அவரது மனப்பாங்கு வரவேற்கத்தக்கது.

பெண்கள் பிரச்சினைகள், போதைப்பொருளை எதிர்கொள்ளல், இடர்காலத்தில் சிறப்பான முடிவுகளை எடுத்தல் போன்ற விடயங்களை அவர் தனது கதைகளின் நாயக, நாயகிகள் மூலம் சிறப்பாக பிரதிபலிப்பார். சமூகத்தை ஒரு நேர் பாதையில் கொண்டு செல்லும் முனைப்பை அவர் கதைகள் பிரதிபலிக்கும்.

வளர்ந்துவரும் எழுத்தாளர்களில் ஒருவரான அவர், மேலும் இலங்கை சிறுகதைத்துறைக்கு சீரிய பணியாற்ற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
சீவகன் பூபாலரட்ணம்
ஆசிரியர் - "அரங்கம்"

தேடல்

ISBN 978-624-97923-2-6

9 786249 792326

விலை:350/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org